புதிய சீர்திருத்தங்கள்

THE NEW REFORMS

A Detailed Analysis of the "White Paper" Proposals and of the Joint Parliamentary Committee Report.

THE "DAR-UL-ISLAM" COMPANY, LTD.,
158-B, BROADWAY, MADRAS.
1934

[*Annas* 2½

நீங்கள்

தாருல் இஸ்லாம் லிமிட்டெட் கம்ப்பெனியில்

ஒரு பங்குதாரராய்ச் சேர்ந்திருக்கிறீர்களா ?

இல்லாவிட்டால்

இன்றே ஒரு பங்குதாரராகச் சேருங்கள் !

இக்கம்ப்பெனியில் நல்ல லாபம் பெற நல்வழிகளனந்தமுண்டு.

ஏராளமான பங்குகள் சேர்ந்துவிட்டன !

மிஞ்சியுள்ள பங்குகள் கொஞ்சமே உள்ளன !!

முழு விபரங்களடங்கிய புத்தகத்துக்கெழுதி வரவழைத்து கம்ப்பெனியின் முக்கியாம்சங்களைப் படித்துப் பாருங்கள். இப்புத்தகம் தமிழிலும், இங்கிலீஷிலும் உண்டு. பங்கு சேர விரும்புவோருக்கு இனமா யனுப்பப்படும்.

தாருல் இஸ்லாம் கம்ப்பெனி லிமிட்டெட்,

சென்னை

(ரெஜிஸ்ட்டர் செய்யப்பட்டது)

மூலதனம் ரூ. **50,000**

பவுண்டர்ஸ் பங்குகள் ரூ. 100 கொண்டது 50 க்கு ரூ. **5,000** (ஆய்விட்டது.)

பிரிபரன்ஸ்	,,	ரூ. 25	,,	800 க்கு	ரூ. **20,000**
சாதாரண	,,	ரூ. 5	,,	5000 க்கு	ரூ **25,000**

பா. தாவூத்ஷா, B. A.,

சேர்மென், போர்ட் ஆப் டைரெக்ட்டர்ஸ்.

ஜீவ வசிய பரம ரஹஸ்யம்.

இதில் இந்திய யோகிகளின் பற்பல விதமான பரம ரஹஸ்ய முறைகளும் மேல் நாட்டாரின் பல அற்புத இரகசிய முறைகளும் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. இதைப் படிக்கும் ஒவ்வொருவரும் தன்னை திரேக திடத்தாலும், மனோ திடத்தாலும், மனோ வசிய சக்தியாலும் உயர்த்திக் கொள்வதோடு, உலகத்தில் எந்தத் துறையிலும் இனியில்லா வண்ணம் வெற்றி பெறலாம்; ஐசுவரியத்தில் ஜெயமடையலாம்; எதிரிகளை அடக்கியாளலாம்; உத்தியோகத்தில் உயர்பதவி யடையலாம்; ஸ்திரீ புருஷ வேட்கையில் இனிய பயன் பெறலாம். இது ஏழைமுதல் பணக்காரர் வரை ஒவ்வொருவருக்கும் பயன்படக்கூடிய அரிய பெரிய நூல். இதுகாறும் இம்மாதிரி நூல் தமிழில் வெளிவந்ததில்லை. இப்பெரிய நூலின் கிரயம் ரூ. 3-தான். வி. பி. செலவு வேறு.

மனோஹரம் கம்ப்பெனி,

158-B, பிராட்வே, தபாற் பெட்டி 15, சென்னை.

புதிய சீர்திரு

“வெள்ளை அறிக்கை”யின்

கூட்டுக் கம்மிட்டி ரிப்போ

(பிரபலஸ்தர்கள் அபிப்பிராயத்துடன் கூடியன)

தாருல் இஸ்லாம் கம்ப்பெனி லிமிட்டெட்

158-B, பிராட்வே, சென்னை

விலை] 1934 [அண 2½

முகவுரை

...மெண்ட்டார் இந்தியாவுக்குக் கொடுக்க விருக்
...ங்கள் "வெள்ளை அறிக்கை"த் திட்டத்திலும்
...ஜாயிண்ட் பார்லியமெண்ட்டரிக் கம்மிட்டி ரிப்
...ஆதாரமாகக் கூறப்பட்டிருக்கின்றன. இவைகளை
...டு, சுமார் 300 பிரிவுகள் கொண்ட இந்திய அரசியல்
...தா ஒன்றைக் காலதாமத மின்றித் தையாரித்து,
...லியமெண்ட்டில் ஆஜிர் செய்து, 1935-ஆம் வருட
ஜூ... திற்குள் அதைச் சட்டமாக்கி, 1936-ஆம் வருடத்தில்
புதிய ... திருத்தங்களை இந்தியாவில் அமலுக்குக் கொண்டுவர உத்தேசித்திருக்கிறார்கள் அவ்வதிகாரவர்க்கத்தார்கள்.

ஜாயிண்ட் பார்லியமெண்ட்டரிக் கம்மிட்டியார் அறிவித்திருக்கும் முக்கியமான ஸிபாரிஷ்களை மாற்றவோ அன்றி மறுக்கவோ முடியாது என்று பிரிட்டிஷ் மந்திரிமார்கள் கூறுவதால், புதிய சீர்திருத்தச் சட்டத்தில் "வெள்ளை அறிக்கை" கூட்டுக் கம்மிட்டியின் ஸிபாரிஷ்களை பெரிதும் அடங்கியிருக்கு மாதலால், தமிழ் மக்கள் புதிய சீர்திருத்தங்களின் சரியான தன்மையை நன்கறிந்து கொள்வான் வேண்டி, "தாருல் இஸ்லாம்" கம்ப்பெனியார் இந்த ஸிபாரிஷ்களைப் புத்தக ரூபமாக வெளியிட் டிருக்கிறார்கள். அரசியல் அறிவைப் பரப்புவதற்கும் புதிய சீர்திருத்தங்களின் உட்போக்கை யுணர்ந்து கொள்வதற்கும் இச்சிறிய புத்தகம் மிக்க உபயோகமாக விருக்கும் என்று நம்புகிறோம்.

புதிய சீர்திருத்தங்கள் மிகவும் மோசமா யிருக்கின்றன வென்பதில் ஐயமில்லை. எனினும், இந்தியாவுக்குத் திருப்தி யளிக்கும் முறையில் அவைகளை மாற்றி யமைக்கப் பிரிட்டிஷ் ஸர்க்கார் முன் வராவிடில், காங்கிரஸின் பொறுப்பு மகத்தானதாக விருக்கும். ஏற்கெனவே, ஸர்க்காருக்கும் புதிய சீர்திருத்தங்களுக்கும் துதிபாடவும் ஒத்துழைக்கவும் ஒரு சாரார் கிளம்பிவிட்டபடியால், காங்கிரஸ் தேசாபிமானிகள் ஸர்க்கார் ஸ்தாபனங்களையும் அதிகாரக் கோட்டைகளையும் பிடித்துக் கொண்டு, சுயராஜ்ய ஸித்திக்கு வழி கோலவேண்டும் என்பது "தாருல் இஸ்லாத்தின்" கோரிக்கையும் வேண்டுகோளு மாகும்.

சென்னை,
26—11—34.

பா. தாவூத்ஷா
ஆசிரியர்

"வெள்ளை அறிக்கை"யின் வரலாறு

ஜாயிண்ட் பார்லியமெண்ட்டரிக் கம்மிட்டியாரின் யாதாஸ்து 22—11—34-ஆந் தேதி வெளியாயிற்று. இது "வெள்ளை அறிக்கையின்" திட்டத்தை அநேகமாகத் தழுவி நின்ற போதினும், இந்தியர் கோரிய திருத்தங்களை அங்கீகரிக்க மறுத்திருப்பதோடு, "வெள்ளை அறிக்கை"யைவிடப் பிற்போக்கான சில ஸிபாரிஷ்களைச் செய்திருக்கிறது.

அன்பர்கள் "வெள்ளை அறிக்கையின்" சாராம்சத்தை உணர்ந்து கொள்வதற்காக யாம் சென்ற வருடம் "தாருல் இஸ்லாத்தில்" ஏப்ரில்மீ 14உ முதல் மேமீ 19-ஆம் தேதி வரையில் வெளியிட்டிருந்த விமர்சனத்தை மீண்டும் இச்சமயத்தில் பிரசுரித்திருக்கிறோம். இதைப் படித்தபின், ஜாயிண்ட் கம்மிட்டியின் ஸிபாரிஷ்களைப் படித்தால், இந்தியாவுக்குப் பிரிட்டிஷ் கவர்ண்மெண்ட்டார் கொடுக்கவிருக்கும் சீர்திருத்தங்களின் உண்மை யோக்கியதை நன்கு விளங்கும்.

1933௵ மார்ச் ௴ 18-ந் தேதி பிரிட்டிஷ் ஸர்க்கார், இந்தியாவுக்குக் கொடுக்கப்போகும் அரசியல் சீர்திருத்தங்களைக் குறித்து ஓர் அறிக்கை வெளியிட்டது. பிரிட்டிஷ் ஸர்க்கார் சாதாரணமாய் "புளூ பேப்பர்"—நீல நிறமுடையது — மூலமாய்த் தன்னுடைய அறிக்கைகளை வெளியிடுவது வழக்கம். ஆனால், முக்கியமான அறிக்கைகளை "ஒயிட் பேப்பர்"—வெள்ளைத் தாள்—மூலம் வெளியிட்டு அதற்கு மகத்துவம் கற்பிக்கும். பிரிட்டிஷ் ஸர்க்காரார் இந்த அறிக்கையை மிகவும் முக்கியமான தென்று கருதுகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. இந்த அறிக்கையைக் குறித்து, இந்தியத் தேசீய வாதிகள் என்ன நினைக்கிறார்கள் என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். ஸர் ஸாப்ரூபோன்ற மிதவாதத் திலகங்கள் பிரிட்டிஷ் ஸர்க்கார் வெளியிட்டுள்ள திட்டத்தில் அதிருப்திகொண்டு அதைத் தாராள முறையில் ஜாயிண்ட் கம்மிட்டியில் திருத்தவேண்டும் என்கிறார்கள். இந்தியருடைய ஆட்சேபங்களைப் பிறகு கவனிப்போம். இன்று ஸர்க்கார் வெளியிட்டிருக்கும் சீர்திருத்தங்கள் என்ன வென்பதையும் அவைகளின் போக்கையும்மட்டும் ஆராய்வோம்.

நான்கு அம்சங்கள்

பிரிட்டிஷ் ஸர்க்கார் வெளியிட்டிருக்கும் சீர்திருத்த அறிக்கையை நான்கு அம்சங்களாக வகுக்கலாம்:

(1) முதலாவது, இந்திய ஐக்கிய அரசாங்கத்தைப் பற்றியது. சுதேச மன்னர்களின் சமஸ்தானங்களையும் பிரிட்டிஷ் இந்தியாவையும் ஒன்று சேர்த்து, பெடரல் அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்த வேண்டு மென்பது. 1919-ம்௵ ஏற்பட்டு இப்பொழுது அமலிலிருக்கும் மாண்ட்டேகு சட்டத்தின் நோக்கம் "படிப்படியாய்க் காலக்கிரமத்தில் பிரிட்டிஷ் இந்தியாவில் பொறுப்புள்ள ஜனநாயக ஆட்சியை" ஏற்படுத்துவதாகும். ஆனால், இந்த லட்சியம் இப்பொழுது பிரிட்டிஷ் ஸர்க்காரால் கைவிடப்பட்டு, ஸைமன் கம்மிஷன் ஸிபார்சு செய்தது போல், சுதேச மன்னர்களையும் பிரிட்டிஷ் இந்தியாவையும் இணைத்து, இந்திய ஐக்கிய அரசாங்கத்தைப் படைக்கப் பிரிட்டிஷ் ஸர்க்காரார் விரும்புகிறார்கள். ஆனால், சுதேச மன்னர்கள் இதில் ஸர்க்கார் நிபந்தனைகளையொட்டிச் சேராமற்போனால், இந்த லட்சியமும் கைவிடப்பட்டு, சமயோசிதமாய் என்ன செய்யலாம் என்பதை ஸர்க்காரார் பின்னால் யோசிப்பார்களாம். எனினும், தற்சமயம் சுதேச மன்னர்கள் இந்திய ஐக்கிய அரசாங்க அமைப்பை ஒத்துக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையை அடிப்படையாகக்கொண்டு, மற்ற மூன்று அம்சங்களை வகுத்திருக்கிறார்கள்.

(2) இரண்டாவது, இந்திய மத்திய அரசாங்கத்தைப் பற்றியது. மத்திய கவர்ண்மெண்ட்டில் இரட்டை ஆட்சியை ஏற்படுத்தி, முக்கியமான இலாக்காக்களைக் கவர்னர் ஜெனரலின் அதிகாரத்தின் கீழ் ஒதுக்கி வைக்கத் தீர்மானித்திருக்கிறார்கள். இதன் தாரதம்மியங்களைப் பிறகு கவனிப்போம்.

மாகாணச் சுய ஆட்சி

(3) மூன்றாவது, மாகாணச் சுய ஆட்சி அமைத்தலாகும். ஸர்க்கார் அளிக்கும் சீர்திருத்தங்களில் சிலாக்கியமான அம்

சம இஃதொன்றே யாகும். ஆனால், மாகாணங்கள் சுய ஆட்சி பெற்று, ஐக்கிய இந்திய அரசாங்கத்திற்குப் பிரதிநிதிகளை யனுப்புமாயினும், சில முக்கியமான அதிகாரங்கள் இல்லாமல், மாகாணச் சட்ட சபைகளின் பொறுப்பும், அதிகாரமும், சுயேச்சையும் பாதிக்கப்படுகின்றன. சட்ட சபையைமீறி, அதற்குப் போட்டியாகவும், சம காலத்தில் சட்ட மியற்றும் அதிகாரம் மாகாண கவர்னருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மந்திரிகளும் சட்ட சபைக்குப் பூரணமாய்க் கட்டுப்பட்டு, ஜன நாயக முறைப்படி பொறுப்புச் சொல்லும்படி இந்த அமைப்பில் கட்டாயப் படுத்தப்படாமல், அவர்களும் சட்ட சபையின் ஆணையை மீறி, கவர்னர் ஆதரவைப் பெற்று, தீட்டின மரத்தில் கூர் பார்க்கலாம். சட்ட மியற்றும் அதிகாரந்தான் மாகாணச் சட்ட சபையிட மிருந்து பிடுங்கப் பட்டுவிட்டதே! பொக்கிஷ அதிகாரமாவது உண்மையில் மாகாணச் சட்ட சபைகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதா வெனின், அதுவும் இல்லை. சட்ட சபைக்குத் தீர்வை விதிக்கும் அதிகாரம் இருப்பதுபோல், கவர்னருக்கும் சம அதிகாரம் இருக்கிறது. சட்ட சபையின் ஏவல்களை நிறைவேற்றிக் கொடுக்கும் தலைமை நிருவாக உத்தியோகஸ்தராக ஜனநாயக முறைப்படி கவர்னர் பதவி ஏற்படவில்லை. சட்ட சபை நிராகரித்த செலவு இனங்களை கவர்னர் அவசியமென உத்தரவிட்டு, அவைகளை அனுமதிக்கும் அதிகாரம் பெற்றிருக்கிறார். சட்டசபை வேண்டாம் என்னும் மந்திரிச் சபையைக் கவர்னர் அதிகாரத்தில் வைத்திருக்கலாம். இப்பொழு திருப்பதைப் போலவே இந்திய ஸிவில் ஸர்விஸ் என்ற அதிகார வர்க்கத்தார், மந்திரிகள் ஆதிக்கத்திற் குட்படாமல் இருந்து வருவார்கள். மந்திரிகளின் ஆலோசனைகளைப் புறக்கணித்து விடும் அதிகாரம் கவர்னருக்கு உண்டு.

இரட்டை ஆட்சி இல்லை

பூரண மாகாணச் சுய ஆட்சி இல்லையே என்று கொள்ளினும், இப்பொழுது மாகாணங்களில் அமலில் இருக்கும் இரட்டை ஆட்சியின் கெடுதல்கள் ஸர்க்காருக்கு அனுகூலமாய் மாற்றப்பட்டிருக்கின்றன. மந்திரிகளைச் சட்ட சபையிலிருக்கும் கட்சிகள் மூக்கணாங் கயிறு போட்டிழுக்க முடியாது. நியமன அங்கத்தினர்களின் தயவை ஸர்க்கார் எதிர்பார்க்க வேண்டிய அவசியமில்லை. ஆட்டுக்குக் கழுத்தில் இரண்டு "அஜாகளஸ்தம்" தொங்குவது போல், உயிரற்ற பிணங்களாய் நியமன அங்கத்தினர்கள் சட்ட சபையில் கை தூக்கும் பரிதாபகரமான காட்சி இனி இல்லை. விசாலமான வாக்குத் தொகுதி ஏற்பட்டிருப்பதால், வாக்காளர்களிடையே பலத்த அரசியல் உணர்ச்சி ஏற்படும். தொழிலாளரும், ஹரிஜனங்களும், ஸ்திரீகளும் நல்ல பிரதிநிதித்துவமும் வாக்குரிமையும் பெற்றிருக்கிறார்கள். சமூக அபிவிருத்திக்குரிய சீர்திருத்தங்கள் சட்ட சபையில் ஆதரவு பெறும்.

பாதுகாப்புக்கள்

(4) நான்காவது அம்சம் பாதுகாப்புக்களாகும். ஸர்க்கார் கொடுக்க விருக்கும் சீர்திருத்தங்களை நடத்தி வைப்பதில் ஸர்க்கார் நோக்கத்திற்கு விரோதமாகச் சம்பவங்களும் அரசியல் நிலைமையும் ஏற்பட்டுவிட்டால், அவைகளைச் சமாளிக்க வேண்டி, இராஜப் பிரதி

நிதிக்கும் மாகாணங்களின் கவர்னர்களுக்கும் அளவு கடந்த விசேஷ அதிகாரங்களும், பாதுகாப்புக்களும் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. இந்தியா மந்திரி தமது கருத்தை மறைக்காமல் பார்லியமெண்ட் விவாத காலத்தில் இதைத் தெளிவாகக் கூறிவிட்டார். விசேஷ அதிகாரங்களையும் பாதுகாப்புக்களையும் குறைக்க முடியாது என்ருர். மற்ெருரு பிரபல மந்திரியான ஸர் நெவில் சேம்பர்லேன் என்பவர், "மனிதன் புத்திக்கு எட்டிய வரையில் நாங்கள் இந்தியச் சீர்திருத்தங்களைச் சுற்றி விசேஷ அதிகாரங்களையும் பாதுகாப்புக்களையும் வேலியாக வகுத்திருக்கிறோம். இவைகள் பிரிட்டிஷ் நன்மையை உத்தேசித்தே தையாரிக்கப் பட்டிருக்கின்றன" என்ருர். காந்தி—இர்வின் ஒப்பந்தத்தில், பாதுகாப்புக்கள் இந்தியா இங்கிலாந்து ஆகிய இரு தேசங்களின் பரஸ்பர நன்மையை உத்தேசித்து வகுக்க வேண்டும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தும், இப்பொழுது பிரிட்டிஷாரின் நன்மையை அனுசரித்தே இந்தியாவின் சுதந்திரத்தின் எல்லை குறைக்கப்பட்டிருக்கிறது என்று பிரிட்டிஷார் கூறுகிருர்கள். லார்டு இர்வின் எல்லாரைக் காட்டினும் ஒரு படி முன் சென்று, "இந்தப் பாதுகாப்புக்களெல்லாம் இந்தியாவின் நன்மையையனுசரித்தே போடப்பட்டிருக்கின்றன வென்பதை நிரூபிக்க லாகும்" என்று லார்டு சபையில் வீராவேசமாய்ப் பேசினர். இது கறுப்பை வெள்ளையென்று வீ திப்பதை யொத்திருக்கிறது.

காந்திஜீயின் கடிதம்

விசேஷ அதிகாரங்களும் பாதுகாப்புக்களும் மிகவும் கடினமானவை என்பதில் அபிப்பிராய பேதமில்லை. இவைகளைத் தாராளமாய்த் தளர்த்தி, தேசீய உணர்ச்சியைச் சமனப்படுத்த வேண்டிய அவசியத்தை உணராதவர்கள் இந்தியாவில் இல்லை. ஆனல், பாதுகாப்புக்களும், விசேஷ அதிகாரங்களும் ஒரு சிறிதும் கூடா என்று ஒரே அடியாய் ஆகாயத்தில் பறக்கும் தேச பக்தர்களுக்கு இந்தியாவில் ஆதரவு கிடைக்காது என்பது காந்திஜீ வைசிராய்க்கு எழுதியிருப்பதாகச் சொல்லப்படும் கடிதத்தால் ஊகிக்கலாகும். பாதுகாப்புக்கள் இடைக்காலத்திற்கு ஓரளவுக்குத் தேவை என்பதை, காந்தி-இர்வின் ஒப்பந்தத்தில் காங்கிரஸ் கட்சியார் ஏற்றுக் கொண்டிருக்கிருர்கள். "பம்பாய்க் கிரானிக்கிள்" பத்திரிகையில் வெளிவந்திருக்கும் மஹாத்மா காந்திஜீயின் கடிதசாரமென்னப்படுவதை ஆராய்ந்து பார்த்தால், அவசரக் காலங்களில் கவர்னர்களும் வைசிராயும் சர்வாதிகாரம் வகிப்பதை மகாத்மா ஆட்சேபிக்கவில்லை. காங்கிரஸ் சர்வாதிகாரிகளை ஏற்படுத்திய கொள்கைக்கு இணங்க, ஸர்க்காரின் தலைமை நிருவாகிகளும் அவசரக் காலங்களில் சர்வாதிகாரம் வகிப்பதை மகாத்மா அனுமதிக்கிருர். ஆனல், இந்த அதிகாரத்திற்கு எதிரிடையாகவும் பிரதி பலனுகவும் மாகாணச் சட்ட சபைகளில் உண்மையான அதிகாரமும் பொறுப்பும் ஏற்படுத்த வேண்டும் என்று மகாத்மா காந்தி வற்புறுத்துகின்ருர். மகாத்மாவின் கருத்து ராஜிக்கு அனுகூலமாயிருப்பதால் இதை ஆதாரமாகக் கொண்டு காங்கிரஸுடன் ஸர்க்கார் சமரசம் செய்து கொள்ளலாம். ஸர்க்கார் சமரசம் செய்து கொண்டாலும், செய்து கொள்ளா விட்டாலும், மகாத்

மாவின் கருத்துக் கிசைந்த முறையில் "வெள்ளை அறிக்கைத் திட்டத்தைப்" பிரிட்டிஷ் ஸர்க்கார் மாற்றி யமைத்தால் தேசீய இந்தியாவைத் திருப்தி செய்து, இந்தியரின் ஒத்துழைப்பைப் பெற்று, இரு தேசங்களின் நன்மைக்கும் உழைக் கலாம்.

வாத பிரதிவாதம்

"வெள்ளை அறிக்கை" சம்பந்த மாய்த் தோன்றியிருக்கும் வாத பிரதி வாதங்களையும், இந்திய தேசீய வாதி களின் ஆட்சேபங்களையும் கவனிப் போம். "வெள்ளை அறிக்கையை" ஆட்சேபிப்பவர்கள் இந்தியாவிலும் இருக்கிறார்கள்; இங்கிலாந்திலும் இருக் கிறார்கள். இந்தியத் தேசீய வாதிகள் "வெள்ளை அறிக்கை"யில் உப்பு, சப்பு இல்லை என்று எவ்வளவு ஆத்திரத் துடனும் யதார்த்தத்துடனும் அதைக் கண்டிக்கிறார்களோ, அதற்கு அதிகமான ஆத்திரத்துடனும் யதார்த்தத்துடனும் இங்கிலாந்தில் சர்ச்சில் கோஷ்டியார் பிரிட்டிஷ் ஸர்க்காரின் சீர்திருத்தத் திட்டத்தை எதிர்த்து, இவைகளால் பிரிட்டிஷார் இந்தியாவின் மீது இப் பொழுது செலுத்தி வரும் ஆதிக்கமும் 'கட்டுக்கோப்பும்' குலைந்துவிடும் என்று இடைவிடாது கண்டித்து வருகிறார் கள்.

"வெள்ளை அறிக்கை"யில் குறிப் பிடப்பட் டிருக்கும் சீர்திருத்தங்கள் இந்தியாவின் தேசீய அபிலாஷைகளைத் திருப்தி செய்யக் கூடியவைகளா யில்லை என்று பிரிட்டிஷ் தொழிற் கட்சியார் பலமாய் வற்புறுத்திப் பேசிய போதி லும், பொதுவாய்ப் பிரிட்டிஷ் பொது மக்களும் பிரபல தினசரி பத்திரிகை களும் அரசியல் ஸ்தாபனங்களும் "வெள்ளை அறிக்கை"யை யாதரித்து, பிரிட்டிஷ் ஸர்க்காரைத் தாங்கி நிற்கிறார் கள் என்பது வெள்ளிடை மலை. பார்லிய மெண்ட்டில் இப்பொழுது பெரும் பான்மைக் கட்சியினரா யிருக்கும் முத லாளிகளின் தலைவர்கள் தயாரித்திருக் கும் இந்த அறிக்கையைப் பிரிட்டிஷ் பொதுமக்கள் அப்படியே ஒப்புக்கொள்வ தில் ஆச்சரியமெதுவும் இல்லை. ஆனால், இந்தியாவைத் திருப்தி செய்யவேண் டும். அரசியல் முன்னேற்றத்தைத் தடை செய்யக் கூடாது. தடை செய்தால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கும் வியா பாரத்திற்கும், பரஸ்பர நட்பிற்கும் கூட்டுறவிற்கும் பேராபத்துத்தோன்றும் என்கிற உணர்ச்சிகள் பிரிட்டிஷ் பொது மக்களிடத்திலும், பத்திரிகைகள் எழு தும் தலையங்கங்களிலும் காணப்படுவது மட்டும் குறிப்பிடத் தக்கது. 7000 மைலுக்கு அப்பாலிருந்து இந்தியாவைப் பிரிட்டன் எப்படியும் கட்டியாளலாம் என்ற மூட நம்பிக்கையைச் சர்ச்சில் கோஷ்டியாரில் ஒரு சிலரைத் தவிர, வேறு ராஜ தந்திரப் பிரமுகர்கள் ஆதரிக்க மறுத்துவிட்டது, வருங்கால நிகழ்ச்சிகளுக்கு ஒரு சுப சூசனையாகும். ஆனால், பிரிட்டிஷாரின் பேதைமை என்னவெனின், "வெள்ளை அறிக்கை" இந்தியாவைப் பூரணமாய்த் திருப்தி செய்து விடும் என்று நினைப்பது தான்!

குடியேற்ற ஆட்சி இல்லை

"வெள்ளை அறிக்கை" இந்தியாவில் குடியேற்ற ஆட்சியை அமைக்க நோக் கங் கொள்ளவில்லை. குடியேற்ற நாடு களின் ஆட்சி முறையைப் போன்ற ஜவாப்தாரித்தன முள்ள ஆட்சியை இங்

தியாவில் ஏற்படுத்தப் பிரிட்டிஷ் ஸர்க்கார் தீர்மானித்து விட்டது என்று லார்டு இர்வின் 1929ஆம் இந்தியா சட்ட சபையில் மெச்சத்தக்க வண்ணம் பேசினர். இந்தப் பேச்சினல் காங்கிரஸின் மனமும் கவரப்பெற்று, பின்னர்க் காந்தி-இர்வின் ஒப்பந்தம் ஏற்படுவது சாத்திய மாயிற்று. குடியேற்ற ஆட்சி என்றால், அரசாங்கத்தை நடத்தும் மந்திரிமார்கள் தங்களைத் தேர்ந்தெடுக்கும் சட்ட சபைக்குப் பதில் சொல்வது என்று அர்த்தம். சட்ட சபையின் நம்பிக்கை இருக்கும் வரையில் மந்திரிச் சபை ஆட்சி புரியலாம்; நம்பிக்கை இழந்த வுடன் மந்திரிச் சபை ராஜிநாமாசெய்துவிடவேண்டும். அஃதாவது, மந்திரிச் சபையை ஏற்படுத்தவும், உடைக்கவும், மாற்றவும், அதற்குக் கட்டளைகளை யிடவும் சட்ட சபைக்குக் குடியேற்ற நாட்டு ஆட்சியில் சம்பூரண உரிமை இருக்கும். இத்தகைய ஆட்சி முறையை இந்தியாவுக்குக் கொடுக்கப் போவதாக லார்டு இர்வின் இந்தியாவின் வைசிராயாக இருக்கும் பொழுது கூறினர். இதை உத்தேசித்துக் காங்கிரஸ் தலைவர்கள், தங்களுடைய சுயேச்சைக் கொள்கையை ஒரு சிறிது குறைத்துக் கொண்டு, இர்வின் ஸர்க்காரோடு ஒத்துழைத்தார்கள். இரண்டாவது லண்டன் வட்டமேஜை மகா நாட்டுக்கு மகாத்மா காந்தியைக் காங்கிரஸ் ஏக பிரதிநிதியாக அனுப்பியதற்குத் தூண்டுதலாயிருந்த பெரும் பலம் லார்டு இர்வின் கொடுத்த குடியேற்ற நாட்டு ஆட்சி வாக்குறுதியே யாகும் என்பதில் சந்தேகமில்லை. ஆனல், மகாத்மா காந்தி இந்தியா திரும்பியதும், மறுபடியும் இந்தியாவில் சட்ட மறுப்பைக் காங்கிரஸ் ஆரம்பிக்க நேர்ந்த பிறகு, பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளின் மனம், இந்தியாவுக்கு விரோதமாய் மாறிவிட்டது என்பதை மறுத்துப் பயனில்லை. 1919ஆம் புதிய மாண்ட்டேகு சட்டத்தின் நோக்கம் "பொறுப்பாட்சி" என்றும், "குடியேற்ற ஆட்சி" கொடுப்பதாக இல்லை என்றும் பிரிட்டனில் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தார்கள். பார்லியமெண்ட்டில் முதலாளிகள் என்ற கன்ஸர்வெட்டிவ்கள் ஆதிக்கம் பெற்றதும், தொழிற் கட்சி அரசாங்கம் ஆட்சி புரிந்த காலத்தில், இந்தியாவுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளெல்லாம் சமயோசிதமாய் மாற்றப்பட்டன. அதனுடைய முடிவுதான் இந்த "வெள்ளை அறிக்கை". ஆகவே, இதில் குடியேற்ற நாட்டு ஆட்சியும் இல்லை; பூரண உள் நாட்டு ஜவாப்தாரித்தனமு மில்லை. காந்திஜீ கோரும் "சுயேச்சையின் சத்து" இல்லாவிட்டாலும், மிதவாதிகளும் மற்ற அரசியல் கட்சியாரும் கேட்டு வந்த "ஜன நாயகப் பொறுப்பாட்சி"யின் முக்கிய லக்ஷணங்களும் இதில் இல்லை. ஆனல், மாகாணங்களில் மட்டும், ஸைமன் கம்மிஷன் ஸிபாரிஷ் செய்தபடி ஜவாப்தாரியான அரசாங்கத்தை ஏற்படுத்த, பிரிட்டிஷ் ஸர்க்கார் இப்போதிருப்பதைவிட ஒரு பெரிய அடி முன்னே சென்றிருக்கிறது. இந்த அம்சத்தில் குடியேற்ற ஆட்சியின் அஸ்திபாரத்தை நன்றாய் முதன் முதலாக அமைப்பது "வெள்ளை அறிக்கை"யின் நோக்கம் என்பது ஸ்பஷ்டமாக விளங்குகிறது. இந்த நோக்கம் அனுஷ்டானத்திற்கு எவ்வளவு காலத்தில் வரும் என்பதையும் அறியக் கூடவில்லை.

மூன்று ஆட்சேபங்கள்

"வெள்ளை அறிக்கை"யில் விவரிக்கப் பட்டிருக்கும் மாகாணச் "சுய ஆட்சி"யும் மத்திய கவர்ண்மெண்ட் இரட்டை ஆட்சியும் சரிவர நடக்குமா? நடக்காதா? என்னும் அம்சம் ஒருபுற மிருக்க, அதைக் கவனிக்கு முன், "வெள்ளை அறிக்கை"யை ஏற்க மறுப்பதற்குத் தேசீய வாதிகள் மூன்று முக்கியமான ஆட்சேபங்களைக் கூறுகிறார்கள். இப் பொழுது "வெள்ளை அறிக்கை"யில் பூரண சுயராஜ்யம் அல்லது குடியேற்ற நாட்டுரிமை இந்தியாவுக்கு எக்காலத்தில் எத்தனை வருடங்களில் கொடுக்கப் படும் என்பது திட்டமாகக் குறிப்பிடப் படவில்லை என்பது முதலாவதான ஆட்சேபமாகும். காங்கிரஸ் மகா சபை உடனே சம்பூரண சுயேச்சை வேண்டு மென்கிறது; மிதவாதிகள் உடனே குடியேற்ற நாட்டுரிமை வேண் டும் என்கிறார்கள்; சட்டசபைப் பிரதி நிதிகள் உடனே ஜவாப்தாரியான மந்திரிச் சபை தேவை என்கிறார்கள். வகுப்புவாதிகளோ அன்றித் தேசீய வாதிகளோ, மிதவாதிகளோ அன்றி ராஜவிசுவாசிகளோ இவர்களில் எவரும் இந்திய ஆட்சி முறை பொறுப்பற்ற யதேச்சாதிகாரத்தோடு இருக்கவேண் டும் என்று சொல்லவில்லை. இதைப் பிரிட்டிஷ் ஸர்க்கார் நன்கறியும். இப்போ தைய ஜவாப்தாரித்தனமற்ற இந்திய அரசாங்கம் ஜவாப்தாரித்தனம் என்ற நோக்கத்தைக் கொண்டு, படிப்படியாய் அதை நோக்கிப் போகவேண்டும் என்று பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் கருதுகிறார் கள். இந்தப் "படிப்படியாய்" என்ற சொல்லின் அர்த்தத்தையும் பிரிட்டிஷ் ராஜதந்திரிகளின் நோக்கின் உண்மை யையும் கண்டறிவதற்காகவே, "எத் தனை வருடங்களில் இந்தியாவுக்குச் சுயராஜ்யம் கொடுக்கிறீர்கள்? காலவரை யறை செய்யுங்கள்" என்று இந்தியத் தலைவர்கள் கேட்டுவந் திருக்கிறார்கள். ஆனால், "வெள்ளை அறிக்கை"யில் இக் கேள்விகளுக்குப் பதில் இல்லை. கண் ணுக்கெட்டிய தூரம்வரையில், இந்தியா வின் மத்திய கவர்ண்மெண்ட்டின் யதே ச்சாதிகார ஆட்சி முறை மாறக்கூடியதா யில்லை என்பது நன்கு புலனாகின்றது. "வெள்ளை அறிக்கை"யின்மேல் எழுந்த பார்லியமெண்ட் விவாதத்தில் இந்தியா மந்திரி ஸர் ஸாமுவேல் ஹோர் பேசிய மாதிரியைப் பார்த்தால், "நாம் ஏற்கெ னவே இந்தியாவுக்குச் சர்ச்சில் வாக்குறு திகளைக் கொடுத்துவிட்டோம். இவை களை முற்றிலும் நிறைவேற்று விட்டா லும் ஏதாவது கொஞ்சம் நிறைவேற்று வதாகப் பாவனை செய்யாவிடில் இந்தி யாவை நாம் வகிப்பது கஷ்டமாகும். 'வெள்ளை அறிக்கை'யின் மூலம் பிரிட் டிஷ் ஆதிக்கத்தை இந்தியர் கைக்கு ஒப் படைத்து விடவில்லை. தற்பொழுது நமக்கு இருந்து வரும் அதிகாரங்களும் பொறுப்புக்களும் இனியும் இருந்து வரும்" என்ற தோரணையில் பார்லிய மெண்ட் அங்கத்தினர்களின் கண் துடைத்துப்பேசினர் என்று தெரிகிறது. ஸர் ஜான் ஸைமன், "வெள்ளை அறிக்கை என்னுடைய திட்டத்தின் வேறு ரூபமே யொழிய, முக்கியத் தத்துவங் களில் என் திட்டத்திற்கும் வெள்ளை அறிக்கைக்கும் எவ்வித வித்தியாசமும் முரண்பாடும் இல்லை" என்று அற்புத மாய் வலியுறுத்திப் பார்லியமெண்ட் டின் கரகோஷங்களைப் பெற்றார். ஆகவே இந்த முக்கியமான பிரசங்கங்களை

வெள்ளை அறிக்கையின் "ஸ்ரீ பாஷ்ய மாக"க் கொண்டால், இந்தியாவுக்குச் சுயராஜ்யம் கிடைக்கும் காலம் நிர்ணயிக்கப்படாம விருப்பதோடு, சீக்கிரத்தில் பார்லியமெண்ட்டின் அதிகாரங்களும் பொறுப்புக்களும் இந்தியாவின் பிரதம சட்ட சபைக்கு மாற்றிக் கொடுக்கப்படும் என்று எண்ணுவதற்கும் இடமில்லை. ஆகவே, வெள்ளை அறிக்கையானது உடனே பூரண சுயராஜ்யம், ஜவாப்தாரித்தனமான உள்நாட்டு ஆட்சி, ஜனப் பிரதிநிதி ஆட்சி முதலியவைகளை முக்கிய நோக்கங்களாகக் கொண்ட இந்திய அரசியல் கட்சியார்களைச் சிறிதும் திருப்தி செய்யவில்லை.

அபிவிருத்திக்கு இடமில்லை

சுயராஜ்யம் என்று கிடைக்கும் என்கிற கால நிர்ணயந்தான் இல்லையே; இப்பொழுது அறிக்கையில் சூசிக்கப்பெற்றிருக்கும் இரட்டை ஆட்சியோ அன்றி ஒற்றை ஆட்சியோ காலக்கிரமத்திலாவது தேசிய ஜவாப்தாரியான ஆட்சிக்குச் சுயமாகக் கொண்டுபோய் விடக்கூடிய அம்சங்களையும் ஜீவிய சத்தையும் தன்னகத்தே கொண்டிருக்கிறதா என்றால், அதுவும் இல்லை. எனவே, இஃதில்லாமை இரண்டாவது முக்கிய ஆட்சேப மாகும். லண்டன் வட்ட மேஜை மகாநாடுகளுக்குச் சென்று வந்த அரசியல் புலிகள், "ஒரே சட்டத்தின் மூலமாய் இந்தியாவின் அரசியல் தலைவிதியை நிர்ணயித்து விடப்போகிறோம்! தற்பொழுது உடனே கிடைக்கும் சீர்திருத்தங்கள் நாம் எதிர்பார்ப்பதைவிடக் குறைவாயிருந்த போதிலும் பாதகமில்லை; காலக்கிரமத்தில் இவைகள் சம்பூரண சுயராஜ்யத்திற்குச் சுயமாகக்கொண்டு போய்விடும். மறுபடியும் பார்லியமெண்ட்டின் அனுமதியும் அங்கீகாரமும் தேவை இல்லை. நமது அடிமை தொலையும்" என்று பலவாறாக ஸ்தோத்திரஞ் செய்து வந்தார்கள். ஆனால், இம்மாதிரியான வசதிகள் எதுவும் வெள்ளை அறிக்கையில் காணப்படவில்லை. பார்லியமெண்ட் தன்னுடைய அதிகாரத்தை இந்தியாவுக்கு மாற்றிக் கொடுக்கப்போகிறது என்பதற்கு அறிகுறி, இந்தியா மந்திரியின் காரியாலயத்தை எடுத்து விடுவதாகும். இந்தச் சீர்திருத்தத்தைச் செய்யும்படி, காங்கிரஸ் ஆரம்பமான கால முதல் கேட்டு வந்தது. இதைவேண்டாத மிதவாதியோ ஹிந்து, முஸ்லிம் வகுப்பு வாதியோ கிடையாது. ஆனால், வெள்ளை அறிக்கையால், இந்தியா மந்திரியின் அதிகாரங்கள் எவையும் எடுக்கப்படமாட்டா. அவர் இப்பொழுது இந்தியாவை ஆட்டிவைப்பது போலவே இனியும் ஆட்டிவைப்பார். அவரது ஆதிக்கம் குறைக்கப்படாம லிருக்கும் வரையில், இந்தியாவில் ஜவாப்தாரித் தனமான ஆட்சி ஏற்படும் என்பது பகற்கனவே. ஜவாப்தாரித்தனமான ஆட்சி கீழ்நோக்கி, வாக்காளர்களின் வாக்குப் பலத்தை முக்கிய உணவாகக் கொண்டிருக்கிறது; அஃது என்றும், எப்பொழுதும் மேல் நோக்கிச் செல்லாது. இது தான் ஜனநாயக ஆட்சி என்பதற்கு ஆசிரியர் டைஸி, கீத் போன்ற அரசியல் சாஸ்திர வல்லுநர்கள் விதிக்கும் அர்த்தமாகும். இந்த இலக்கணத்திற்கு முற்றிலும் மாறுபட்ட அவலக்ஷணங்களே வெள்ளை அறிக்கையில் நிறைந்து கிடப்பதால், வெள்ளை அறிக்கையின் மூலம் பார்லியமெண்ட்டின் ஏக சக்ராதிபத்தியம் இந்திய ஆட்சியிலிருந்து எள்ளள

வும் குறையாது. சுயமாக அரசியல் விடுதலை யுகப்பிரளயம் வரையில், இப்பொழுது வெள்ளை அறிக்கை தீட்டப்பட்டிருக்கும் முறையில், ஜாயிண்ட் கம்மிட்டியில் இதைத் தாராளமாக்கினலொழியக் கிடைக்காது. சுயராஜ்ய கால நிர்ணயம் இல்லாதது முதல் ஆட்சேபம்; சுயமாக ஒரே சட்டத்தினுல், இந்தியா தன் அரசியல் மோக்ஷ மார்க்கத்தில் செல்லலாம் என்பதில்லாமை இரண்டாவது ஆட்சேபமாகும்.

தோலிருக்கச் சுளை விழுங்கி

மூன்ருவது ஆட்சேபம் தர்க்க ரீதியாய் யாரும் கண்டித்து மறுக்க முடியாத தாகும். அஃதாவது, முன்னர்க் கூறிய இரண்டும் கிடைக்காவிட்டாலும் போகட்டும். பிரிட்டிஷார் குறுகிய நோக்கங் கொண்டு, தரித்திர புத்தி காட்டிய போதிலும், வாக்குறுதிகள் காற்று வாக்கில் பறந்துபோன போதிலும், ஜவாப்தாரித்தனம் எற்படுத்தியிருப்பதாகச் சொல்லப்படும் மாகாண ஆட்சி முறையானது போலித்தன்மை கொண்டதா யிருக்கிறது என்பதாகும். மந்திரிகள் சட்டசபைக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும் என்கிற கட்டாயம் வெள்ளை அறிக்கையில் இல்லை. தற்பொழுதாவது ஓரளவுக்கு மந்திரிமார்கள் சட்டசபைக்குப் பதில் சொல்லக் கடமைப்பட் டிருக்கிருர்கள். இதுவும் இனி வரவிருக்கும் மாகாணச் சுயஆட்சியில் இல்லையே! தோலிருக்கச் சுளை விழுங்கிய வியாபாரம் போலிருக்கிறதே இது! என்று இந்திய அரசியல் வாதிகள் அனைவரும் கூறுகிருர்கள். சட்டஞ்செய்யும் அதிகாரம், வரி விதிக்கும் உரிமை, மந்திரிச் சபைக்குக் கட்டளையிடும் பொறுப்பு, தேசத்தை நிருவாகஞ் செய்யும் சுதந்திரம் ஆகிய இவைகளில் சட்டசபை சக்களத்திப் பிள்ளையாகக் கருதப்பட்டு, கவர்னரும் ஐ. ஸி. எஸ். என்று சொல்லப்படும் அதிகார வர்க்கத்தாருமே உண்மையில் ஆதிக்கம் செலுத்துவார்கள் என்பது இந்தியரின் சந்தேகமும் பீதியுமாகும். ஏராளமான பாதுகாப்புக்களும், பிடிப்புக்களும் இந்தச் சந்தேகத்தை நம்பும்படி செய்கின்றன. மாகாணத்திலாவது, வெள்ளை அறிக்கையின் போலி ஜனநாயக ஜவாப்தாரித்தன ஆட்சி உண்மை ஜனநாயக ஜவாப்தாரித்தனமுடைய ஆட்சியாக மாற்றி யமைக்கப்பெற்ருல், மகாத்மா காந்தி எழுதியதாகச் சொல்லப்படும் கடிதத்தில் கண்டிருக்கிறவாறு பெரும்பான்மையினரான இந்தியரின் ஒத்துழைப்பை ஸர்க்கார் பெறுவது சாத்தியமாகும்.

சமஸ்தானங்கள்

"வெள்ளை அறிக்கை" யில் பிரசுரமாகி யிருக்கிற அரசியல் யோசனைகளில் மிகவும் சிக்கலானது இந்திய சமஸ்தானங்களைப்பற்றிய விஷயமாகும். "வெள்ளை அறிக்கை" ஐக்கிய இந்திய அரசாங்கத்தை ஏற்படுத்தும் நோக்கங் கொண்டிருக்கிறது. ஐக்கிய இந்திய அரசாங்கம் எனப்படுவது சமஸ்தானங்களும் பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களும் முறையே ஐக்கிய அரசாங்கச் சட்டசபைகளில் தங்களுக்குரிய பிரதிநிதித்துவம் பெற்று ஏற்படுவதாகும். பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களைப் பற்றியும், இவைகள் எவ்விதமான பிரதிநிதித்துவம் பெறும் என்பதைக் குறித்தும் "வெள்ளை அறிக்கையில்" விஸ்தாரமாகக் கூறியிருக்கிருர்கள். மாகாணச் சுயஆட்சியும் சட்டசபைகளும் ஏற்பட்டபின், இவைகளை

அஸ்திபாரமாகக் கொண்டு, ஐக்கிய இந்திய அரசியல் ஸ்தாபனத்தை நிறுவப் பிரிட்டிஷ் சர்க்கார் உத்தேசித்திருக்கும். இந்த உத்தேசம் நிறைவேற, மற்றொரு பங்காளியான சுதேச சமஸ்தானங்கள் இந்த ஐக்கிய அரசியல் அமைப்பை ஏற்று, அதன் உறுப்புக்களாக அமையவேண்டியது இன்றியமையாததாகும். ஆனால், சுதேச மன்னர்களுள் பிரமுகர்களாயுள்ள ஒரு சிலரைத் தவிர, மற்றவர்கள் ஐக்கிய இந்திய அரசாங்க முறையை ஏற்க விரைந்து முன்வரவில்லை. பெரிய சமஸ்தானங்களும் அவைகளின் அதிபர்களும் இந்தியாவுடன் ஐக்கியமாவதென்றால், நிபந்தனையின்றி இதைச்செய்ய முடியாது என்கிறார்கள். சிறிய சமஸ்தானங்கள் பெரிய சமஸ்தானங்களையும் பிரிட்டிஷ் சர்க்காரையும் இந்தியா சட்டசபையையும் சம்பூரணமாய் நம்பாமல், வேளைக்கு ஒரு பேச்சாகப் பேசிவருகின்றன. பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களை அதிகார தோரணையில் கட்டுப்படுத்தப் பிரிட்டிஷ் சர்க்கார் உரிமை பெற்றிருப்பதைப் போல், சமஸ்தானங்கள் விஷயத்தில் நடந்துகொள்ள முடியாது என்ற பாவனையில் இந்தியா மந்திரியும், ஸர் ஜான் ஸைமனும், லார்டுகள் ஸாங்கியும் இர்வினும் பேசி வருகிறார்கள். ஆகவே, இந்திய ஐக்கிய அரசாங்கம் ஏற்படுமானால், அது சுதேச சமஸ்தானங்களின் சுய உற்சாகத்தால் தோன்றவேண்டுமேயொழிய, அது பிரிட்டிஷ் சர்க்கார் தூண்டுதலால் இல்லை என்று நன்றாய் அறியக்கிடக்கின்றது.

"நொண்டிக் குதிரை"

முதல் வட்ட மேஜை மகாநாட்டில், ஐக்கிய இந்திய அரசாங்க அமைப்பை மன்னர்கள் தாம் முதன் முதலில் ஆதரித்து வற்புறுத்தினார்கள். ஸைமன் கமிஷன் சிபாரிசுகளையும் அந்தரங்க ஆலோசனைகளையும் மனத்தில் வைத்து, பிரிட்டிஷ் இராஜ தந்திரிகள் "ஐக்கிய அரசாங்கம்" என்ற நொண்டிக் குதிரையைச் சிருஷ்டித்தார்களா? அன்றி, என்றாவது ஒரு நாள் இந்தியாவைச் சுயராஜ்ஜியம் என்ற பாட்டையில் அழைத்துச் செல்ல வேண்டியது அவசியமாகையால், சுதேச சமஸ்தானங்களையும் அதில் சம்பந்தப்படுத்தியே யாகவேண்டும் என்கிற தீர்க்கதரிசன உணர்ச்சியால் இதை வெளியிட்டார்களா? என்பதை முடிவாக நிர்ணயித்துப் பேசுவது கஷ்டமாயிருக்கிறது. நெஹ்ரு அரசியல் திட்டத்தில் சுதேச சமஸ்தானங்களின் எதிர்கால நிருவாகம் எப்படியிருக்கவேண்டும் என்று தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். பிரிட்டிஷ் இந்தியாவில் ஜன நாயக ஆட்சியும், சுதேச மன்னர்கள் இந்தியாவில் யதேச்சாதிகாரமும் இருப்பது இரண்டிற்கும் பேராபத்தை விளைவிக்கும் என்பதை அரசியல் குழந்தைகளைத் தவிர மற்றவர்கள் யாரும் மறுக்கமாட்டார்கள். பிரிட்டிஷ் இந்தியாவில் இப்பொழுது காணப்படும் சுதந்திர உணர்ச்சி, சுதேச சமஸ்தானங்களிலும் புகுந்து அங்குள்ள பிரஜைகள் ஜனப் பொறுப்பாட்சிக்கும் கிளர்ச்சி செய்கிறார்கள். ஆகவே, பிரிட்டிஷ் இந்தியாவும் சமஸ்தான இந்தியாவும் ஓர் அரசியல் நோக்கத்தைக் கொண்டு, முன்னேற்றத்திற்கான முறைகளை வகுத்தாலல்லாது, எதிர்கால இந்தியாவின் தேசீய நிருவாகம் சவ்ஜன்னியமாக நடைபெறும் என்று சொல்லமுடியாது. ஆனால், இந்த வெளிப்

ப்டையான உண்மையை "வெள்ளை அறிக்கை" ஒப்புக்கொள்வதாகத் தெரிய வில்லை. "மன்னர்கள் சேர்ந்தால்தான் ஐக்கிய இந்திய அரசாங்கம் அமைப்பது சாத்தியமாகும். அதற்குரிய நிபந்தனை களை நாங்கள் வகுத்திருக்கிறோம். இவைகளை யொட்டி மன்னர்கள் ஐக்கிய இந்திய அரசியலில் கலந்து கொண்டால் சரி; இல்லாவிட்டால் பின்னல் என்ன செய்வது என்பதைக் குறித்து யோசிப் போம்" என்று "வெள்ளை அறிக்கை" யின் வாசகம் வேகமாய் ஓடுகிறது. இது முன்னும் போகாமல், பின்னும் போகா மல், 'இரண்டுங் கெட்டான்' என்று சொல்லக்கூடிய நொண்டிக் குதிரை யின் மேல் சவாரி செய்ய உத் தேசிப்பதை யொத்திருக்கிறது. மன் னர்களின் சம்பூரண சம்மதத்தைப் பெற்றபின், ஐக்கிய அரசாங்க அமைப் பிற்கு "வெள்ளை அறிக்கை" ஆலோ சனை கூறியிருந்தால், அனுவசியமான விபரீத சந்தேகங்களுக்கு இடம் கொடுத் திருக்காது.

பிரிட்டிஷ் இராஜ தந்திரம்.

பிரிட்டிஷ் அரசாங்கத்தை நடத்தி வைக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண் டிருக்கும் குறுகிய பிடிவாத மனப்பான் மை கொண்ட கன்சர்வெட்டிவ்களில் ஒரு சாரார் இந்தியாவுக்கு இப்பொழு தும் சரி, எப்பொழுதும் சரி, ஜன நாயக ஆட்சி கொடுக்கக்கூடா தென் கிறார்கள் என்பது உலகமறிந்த விஷய மாகும். "இங்கிலாந்தில் ஒரு கணமும் நபர் சுதந்திரமும் பொறுப்பாட்சியும் இல்லாமல் முடியாது; ஆனால், இந்தி யாவில் அதற்கு நேர் எதிரிடையாகவே நடக்க வேண்டும். யதேச்சாதிகார, நல்ல ஆட்சியையே இந்தியக் குடிமக்கள் விரும்புகிறார்கள். ஏனெனில், பல்லாண் டுகளாக இந்தியர் கொடுங்கோன்மை யான முடியரசரின் யதேச்சாதிகாரக் கொடுமைகளுக் கடங்கி, வாழ்க்கையை நடாத்தி வந்திருப்பதால் குடியரசை நடத்தும் யோக்கியதை அவர்களுக்குச் சிறிதும் கிடையாது. பிரிட்டிஷாருக்கு எது நன்மையோ அஃது இந்தியருக்கும் நன்மை செய்யும் என்று எண்ணுவது, இந்தியாவை யறியாதவர்கள் கூறும் மூட நம்பிக்கையாகும். பிரிட்டன் வேறு, இந்தியா வேறு; நிறமும் சீதோ ஷ்ண ஸ்திதியும் நேர்மாறாக இருப்பதே போல், அரசியலிலும் வித்தியாச மிருக்க வேண்டுவது இயற்கையே யாகும்" என்று அக்கட்சியின் பிரமுகர்கள் வா திக்கிறார்கள். அவர்கள் கூறுவது நியா யத்திற்கும் உண்மைக்கும் விரோதமான தாயினும், அவர்களின் பேச்சே இப் பொழுது மந்திரிச் சபையில் மதிப்புப் பெற்றிருக்கிறது. அக்கட்சியார் தங்க ளுடைய இராஜ தந்திரக் கைச் சரக்கை இப்பொழுது வெளியிடத் தீர்மானித் துக் கட்டுப்பாடாய் வேலை செய்து வரு கிறார்கள். அவர்களைத் திருப்தி செய் வதையே "வெள்ளை அறிக்கை" முக்கிய நோக்கமாகக் கொண்டிருக்கிறதே யன்றி, இந்தியாவின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யவோ அன்றி நியாயம் வழங்கவோ முற்பட்டிருப்பதாகத் தெ ரியவில்லை. "ஆகவே, மன்னர்கள் இல் லாமல், இந்தியாவில் ஐக்கிய அரசாங் கம் இல்லை. மன்னர்களை நாங்கள் நிர்ப் பந்தப்படுத்த முடியாது; அவர்களே இஷ்டப்பட்டு வந்து சேர வேண்டும். அவர்களும் வந்து இந்திய அரசியலில் ஐக்கியப்பட்ட பிறகு, பூரணப் பொறுப் பாட்சி இந்தியாவுக்கு வழங்குவதைக்

குறித்து யோசிப்போம்'' என்பது, "ஆகாததற்கு அண்ணனைக் கேள்'' என்ற வியாபார தந்திரத்தையே யொத்திருக்கிறது என்று அஞ்ச வேண்டியிருக்கிறது. விஷய நிர்ணயத்தைத் தடைப் படுத்தும் இத்தகைய சூழ்ச்சிகளால் நன்மை விளையாது என்பதை இதைக் கையாளுகிறவர்கள் காலக் கிரமத்தில் உணர்ந்து கொள்வார்கள். மன்னர்களை இந்திய தேசீய வாதிகளுக்கும், இந்திய தேசீய வாதிகளைச் சுதேச மன்னர்களுக்கும் சாக்குப் போக்காகப் பூச்சாண்டி காட்டி, ஒரு பெரிய தேசத்தின் அரசியல் பிரச்சினையைத் தீர்த்துவிட முடியாதாகையால், கஷ்டத்தை எதிர்காலத்திற்கு ஒத்தி வைக்காமல், தற்பொழுதே தைரியமாய் அதை யாராய்ந்து, சமயோசிதமாய் நடக்க வேண்டியது உண்மை இராஜ தந்திரம் காட்டும் விவேக மாகும்.

மன்னர்கள் நிபந்தனை

ஐக்கிய அரசியலை ஏற்படுத்தப் பிரிட்டிஷ் சர்க்கார் கூறும் நிபந்தனைகள் அதிருப்திகரமானவும் நம்பிக்கைக்கு இடமளிக்காதனவுமாக இருக்கிறதென்றால், பிரிட்டிஷ் இந்தியாவோடு சேர்ந்து கொள்ள மன்னர்கள் விதிக்கும் 24 நிபந்தனைகள் அனுபவசாத்திய மற்றவை என்பதில் சந்தேகமில்லை. அனுபவ சாத்தியமானதும் ஐக்கிய அரசாங்க அரசியல் தத்துவங்களுக்கு உடன்பாடானதுமான முறையில் மன்னர்கள் தங்கள் நிபந்தனைகளைத் தையாரிக்கவில்லை. இவர்கள் சமீபத்தில் மகாநாடு ஒன்று கூடித்தீர்மான ரூபமாய் வெளியிட்டிருக்கும் நிபந்தனைகளைப் பார்த்தால், மன்னர்களின் திருஷ்டியும் சுயநலமும் மூன்று முக்கியமான விஷயங்களைச் சார்ந்திருக்கின்றன வென்பது புலனாகின்றது: அவைகள் (1) சுதேச மன்னர்களுக்கும் பிரிட்டிஷ் மன்னருக்கும் இந்திய ராஜப் பிரதிநிதியின் மூலம் என்னவிதமான அரசியல் சம்பந்தம் இப்பொழுது இருக்கிறதோ, இதே விதமான சம்பந்தம் எதிர்காலத்திலும் இருந்து வர வேண்டும். ஏற்கெனவே பிரிட்டிஷ் சர்க்காருக்கும் இந்திய மன்னர்களுக்கும் என்னென்ன உடன்படிக்கைகள் இருக்கின்றனவோ, அவைகளின் ஷரத்துக்களுக்கும் உரிமைக்கும் முரணாகவோ அன்றி மாறுதலாகவோ இந்திய ஐக்கிய அரசாங்க அமைப்பில் விதிகள் செய்யக் கூடாது.

(2) மன்னர்கள் இப்பொழுது தங்கள் இராஜ்யங்களில் என்னென்ன யதேச்சாதிகார உரிமைகள் பெற்று அனுபவித்து வருகிறார்களோ, அவைகள் இனி மாற்றப்படக்கூடா. பிரிட்டிஷ் இந்தியாவோ அன்றி ஐக்கிய இந்தியாவின் சட்ட சபையோ மன்னர்களின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடும் அதிகாரத்தைப் பெறக்கூடாது.

(3) மன்னர்கள் தங்கள் சமஸ்தானங்களில் யதேச்சாதிபத்திய அரசியலை நடத்தி வந்தாலும், இந்தியத் தேசீய வாதிகள் சமஸ்தான நிருவாகத்தில் தலையிடக்கூடாது என்று அவர்கள் வற்புறுத்தியபோதிலும், ஐக்கிய இந்தியாவின் சட்ட சபையின் மூலமாய்ப் பிரிட்டிஷ் இந்தியாவை ஆளுவதில் மாத்திரம் அவர்களுக்கும் பங்கும் உரிமையும் இருக்கவேண்டுமாம். வரி விதித்தல், வியாபாரம், இறக்குமதி ஏற்றுமதி, போக்குவரத்துச்சாதனங்கள் ஆகிய அம்சங்களில் மன்னர்கள் கூறும் ஆக்ஷேபங்களைக் கவனித்து, அவர்களைக் கூடிய வரையில்

திருப்தி செய்யவேண்டியது பிரிட்டிஷ் சர்க்கார், இந்தியத் தேசீய வாதிகள் ஆகிய இரு சாராரின் கடமையும் பொறுப்பு மாறும். ஆனால், மன்னர்கள், "நாங்கள் மாறமாட்டோம்; தலை குனியோம்; நீங்கள் வேண்டுமானால் எங்கட்குத் தலைகுனிந்து பணிந்து போங்கள். இப்படிச் செய்தால் நாங்களும் உங்களுடன் சேர்ந்து, இந்தியாவை நிருவகிக்க உடன்படுகிறோம்" என்று பேசுவது அவர்களின் தேசாபிமானத்திற்கும் பரஸ்பர ஒத்துழைப்பிற்கும் அரண் செய்வதாயில்லை. விட்டுக்கொடுக்காமல், ராஜி இல்லை என்பதை அவர்கள் அறியாமலிருப்பதற் கில்லை. ஆனால், இந்தப் பிடிவாதமான மனப்பான்மையானது ஜாயிண்ட் கம்மிட்டி கூடும்பொழுது பெரிதும் மாறுதலடையும் என்று எதிர் பார்க்கலாம்.

மத்திய கவர்ண்மெண்ட் ஜனசபை

"வெள்ளை அறிக்கை"யில் பிரஸ்தாபிக்கப் பெற்றிருக்கும், மத்திய கவர்ண்மெண்ட் டென்று சொல்லப்படும் ஐக்கிய அரசாங்க அமைப்பை இன்று ஆராய்ந்து பார்ப்போம். ஏற்கெனவே நாம் விளக்கிக் காட்டியிருக்கிறபடி, பாதுகாப்புக்களும் பிடிப்புக்களும், கவர்னர் ஜெனரல், கவர்னர் ஆகியவர்களின் யதேச்சாதிகாரங்களும், சட்ட சபைக்குப் போதிய அதிகாரமின்மையும், மந்திரிமார்களின் பொறுப்பற்ற தன்மையும் ஜன நாயக ஆட்சியையும் உணர்ச்சியையும் நல்ல அஸ்திபாரத்தின்மேல் ஸ்தாபித்து அபிவிருத்தியடையச் செய்யக் கூடியனவா யில்லை. இவைகள் போதாவே போல் "வெள்ளையறிக்கை"யில் ஸர்க்கார் விவரித்திருக்கும் மத்திய கவர்ண்மெண்ட்டின் சட்ட சபைகளின் அமைப்பு, இப்பொழுதிருப்பதே போலவே இனியும் சட்ட சபையில் ஸர்க்காரின் ஆதிக்கத்தை நிலை நாட்டக் கூடியதாகவே இருக்கிறதேயொழிய, ஜனத் தலைவர்களின் வாக்குத் தட்டுமுட்டின்றி நிறைவேறக் கூடியதாயில்லை. சட்ட சபைகளில் இப்பொழுது நியமன அங்கத்தினர்களின் துணைப் பலத்தால் முக்கியமாக ஸர்க்காரார் தங்கள் காரியங்களைச் சாதித்துக் கொண்டு, ஜனத் தலைவர்களின் பிரேரணைகளை உடைத்தெறிந்து வருகிறார்கள். ஆகவே, இந்த நியமன அதிகாரம் ஸர்க்காருக்கு இருக்கக் கூடாதென்றும், சட்ட சபையிலிருக்கும் அங்கத்தினர்கள் அனைவரும் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களா யிருத்தல் வேண்டும் என்றும் ஜனத் தலைவர்கள் இடைவிடாது வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். நியமன அங்கத்தினர்களுக்கும், ஸர்க்காருக்கும், ஜனப் பிரதிநிதிகளுக்கும் இப்பொழுது அனுஷ்டானத்திலிருந்து வரும் முறை திருப்தியளிக்கவில்லை யாகையால், இதை மாற்றிவிட ஸர்க்கார் எண்ணியதுண்டு. ஆனால், "வெள்ளை யறிக்கை"யில் பிரிட்டிஷ் கவர்ண்மெண்ட்டார் வகுத்திருக்கும் முறையானது இப்பொழுதிருப்பதை விடக் கேவலமானதாயிருக்கிறது. வறுக்கும் சட்டியிலிருந்து தப்பித்துக்கொள்ள நினைத்து, தீயிலேயே விழுந்து விட்ட கதையை இது நமக்கு ஞாபகப்படுத்துகிறது. இந்திய கவர்ண்மெண்ட்டார் நியமனம் செய்வதற்குப்பதில் "வெள்ளை அறிக்கை" மத்திய கவர்ண்மெண்ட்டின் ஜன சபையின் மொத்த எண்ணிக்கையான 375-இல், 125-பேர் சமஸ்தானங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றனர். இந்த ஸ்தானங்களுக்குச்

சமஸ்தானாதிபதிகள் தங்கள் பிரதிநிதிகளை நியமிப்பார்கள்; தேர்ந்தெடுக்கும் அதிகாரம் சமஸ்தானங்களுக்கு அளிக்கப்படவில்லை. இந்திய ஐக்கிய அரசாங்கத்தில் சேர்ந்துகொள்ள இஷ்டப்படும் சமஸ்தானாதிபதிகள் இந்த நியமன அதிகாரத்தை வற்புறுத்துகின்றார்கள். மன்னர்களின் முகத்தைத் துடைக்க ஸர்க்கார் என்ன தாராளம் காட்டிய போதிலும், மூன்றில் ஒருபங்கு எண்ணிக்கை நியமனம் செய்யப்படும் என்பது, ஜனநாயகத் தடாகத்தில் இந்தியாவைக் காலையும் கையையும் கட்டிப் போட்டு, 'நீந்து' என்பதற்கு நேராகும். நியமன ஸ்தானங்கள் முற்றிலும் எடுபட வேண்டும். ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களே ஜனநாயக உணர்ச்சியையும் பொறுப்பையும் வளர்க்கக்கூடியவர்களாவர். மேலும், ஐக்கிய அரசாங்க நிர்வாகமும் சட்ட சபைகளும் சரிவர நடக்க வேண்டுமானல், நியமன அங்கத்தினர்கள் என்கிற கொண்டி மாடுகளை நீக்கி, அவர்களுக்குப் பதில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனப் பிரதிநிதிகளுக்கு ஜாயிண்ட் கமிட்டியார் இடமளிக்க வேண்டும். ஜன சபை என்பதில் நியமன அங்கத்தினர்கள் என்பது விதண்டா வாதமாகும்.

வெறும் பசப்பு

ஆனல், சமஸ்தானங்களிலிருந்து நியமனம் பெற்றுவரும் இந்தியர்கள் அனைவரும் ஒரே மனமும் அபிப்பிராயமும் கொண்டிருப்பார்கள் என்று சொல்ல முடியாதாகையால், தலைமை அரசாங்கத்தார் இந்த 125 அங்கத்தினர்களையும் நியமிப்பதைவிட வெவ்வேறு சமஸ்தானங்கள் நியமிப்பதால் கெடுதி சம்பவிக்காது என்று சில அரசியல் மேதாவிகள் எனப்படுவோர் வாதிக்கிறார்கள். இப்படி வாதிப்பது வெறும் பசப்பு வார்த்தை யாகுமேயொழிய, உண்மையில் அரை டஜன் என்பதற்கும் ஆறு என்பதற்கும் சொல்லில் தவிரக் கிரியாம்சையிலும் பொருளிலும் வித்தியாசம் எதுவும் இல்லை என்பதை யாவரும் அறிவர். வெவ்வேறு சமஸ்தானங்கள் வெவ்வேறு அபிப்பிராயங்கள் கொள்ளலாம். ஆனல், சமஸ்தானாதிபதிகளையும் பிரிட்டிஷ் இந்தியா சட்ட சபைகளையும் தம் இஷ்டம்போல் ஆட்டிவைக்கும் எல்லையற்ற அதிகாரம் படைத்த இந்திய கவர்னர் ஜெனராலுக்கு—வைஸிராய்க்கு— விரோதமாகச் சமஸ்தானங்கள் எதையும் செய்துவிட முடியாது. வைஸிராயின் கட்டளையை மீறி நடக்கும் அதிகாரம் சமஸ்தானங்களுக்கு அரசியல் தத்துவார்த்தமாய் உண்டெனினும், அனுபவத்தில் மன்னர்கள் வைஸிராயின் தயவுக்கும் புன்னகைக்கும் மண்டியிட்டு ஸலாம் போடுவதை நாம் பிரதிதினமும் காண்கிறோம். இப்பொழுதிருப்பதைக் காட்டிலும் அதிக அதிகாரங்களும் பொறுப்புக்களும் வைஸிராய்க்கு 'வெள்ளை அறிக்கை'யால் ஏற்படுவதால், அவர் அவசியம் என மதித்துப் பிறப்பிக்கும் கட்டளைகளை மீறிச் சமஸ்தானங்களோ அன்றி அவர்களால் நியமிக்கப்படும் பிரதிநிதிகளோ சட்ட சபையில் நடக்க முடியாது. இப்பொழுது நியமன அங்கத்தினர்களை இந்திய கவர்ண்மெண்ட்டார் எப்படித் தங்களுடைய மூல பலச் சேனையாகக் கொண்டிருக்கிறார்களோ, அதேபோல் ஐக்கிய அரசாங்க ஜன சபையில் சமஸ்தானப் பிரதிநிதிகளை எதிர்காலத்திலும் அதி

கார வர்க்கத்தார் தங்களுக்குப் பக்கபல மாகச் சேர்த்துக்கொண்டு, பிரிட்டிஷ் இந்திய ஜனத் தலைவர்களின் நோக்கங் களையும் அபிலாஷைகளையும் தோற் கடிக்க ஹேதுண்டு. ஆகவே, கீழ்ச் சபை என்று சொல்லக்கூடிய ஜன சபையில் உள்ள எல்லா அங்கத்தினர் களும், அஃதாவது குறிக்கப்பட்டிருக்கும் 375 பேரும் தேர்தல் மூலமாய்த்தான் வருதல் வேண்டும் என்று "வெள்ளை அறிக்கை" திட்டத்தை மாற்றினுல் தான் மத்திய கவர்ண்மெண்ட் சம்பந்தமாய் ஸர்க்கார் கூறும் யோசனை களைத் தேசிய முற்போக்கில் தீவிர சிரத்தை கொண்ட தேசிய வாதிகள் அங்கீகரிக்கவும், ஸர்க்காருடன் ஒத் துழைக்கவும் இடமும் உற்சாகமும் ஏற்படும்.

மீதியிலும் சோத்தை

ஐக்கிய அரசாங்கத்திற்கென வகுக்கப் பெற்றிருக்கும் இரண்டு சட்டசபை களில், கீழ்ச் சபை என்ற ஜன சபையின் மூன்றிலொரு அங்கத்தினர்களின் தன் மையை மேலே விவரித்தோம்; மற்றும் இரண்டு பங்கான 250 பேர்வழிகளின் யோக்கியதை எப்படி யிருக்கும் என் பதை இப்பொழுது விவரிப்போம். மேல் சபை என்ற ராஜாங்க சபைதான் முற்றி லும் இப்பொழு திருப்பதேபோல் முத் தண்ணுக்களின் உறங்கு மடமாக இனி யும் இருக்கப்போகிறது என்ருல், கீழ்ச் சபை எனப்படும் ஜனசபையின் சமஸ் தானப் பிரதிநிதிகளாகிய 125 பேர் நீங்க லாக மிகுதியிருக்கும் பிரிட்டிஷ் இந்தியா வின் பிரதிநிதிகளான 250 பேரும் பூரண ஜனப் பொறுப்பாட்சியை வளர்க்கக் கூடிய முறையில் தேர்ந்தெடுக்கப்பட மாட்டார்கள். இந்த அம்சம் ஒன்றே "வெள்ளை அறிக்கையில்" மிகவும் ஆக்ஷே பிக்கக் கூடியதாகும். எப்படி என்ப தைக் கீழே விவரிப்போம். இந்த 250 பிரதிநிதிகள் இந்தியாவிலுள்ள பல மாகாணங்களால் தேர்ந்தெடுக்கப் படு வார்கள். தேர்தல் மறைமுகமா யில்லா மல், வாக்காளர்களே நேர்முகமாய்த் தேர்ந்தெடுப்பார்கள். சர்வ ஜன வாக்குரி மையை, அஃதாவது வயதுவந்த ஆணுக் கும் பெண்ணுக்கும் வோட்டு என்னும் காங்கிரஸ் கோரிக்கையை ஸர்க்கார் ஏற் றுக்கொள்ளவில்லை. எனினும், ஒட்டகத் தின் உடலில் காணப்படும் கோணல்களை விட அதிகமான கோணல்கள் நிறைந்த மத்திய கவர்ண்மெண்ட்டு சம்பந்தமான திட்டத்தில், ஐக்கிய ஜன சபையின் 250 அங்கத்தினர்கள் வாக்காளர்களால் நேரடியாகத் தேர்ந் தெடுக்கப்படுவார்கள் என்பது ஒரு பெரிய ஆறுதலான விஷயமே யாகும். இப்படி யல்லாமல் மறைமுகமாய், மாகாணச் சட்டசபை களின் மூலமாய் இந்த 250 பேரும் தேர்ந்தெடுக்கப் படவேண்டும் என்றிருந் தால், விஷயம் இன்னும் மோசமா யிருந்திருக்கும். தேர்தல் முறை மட்டும் திருப்தி யளிக்கிறதே யொழிய, அத ஞல் ஏற்படும் பலனனது மிகவும் அற்பமாகும் என்பதை நோக்கும் பொழுது, தேசிய வாதிகளும் ஜன நாயக அரசியல் சாஸ்திர மறிந்தவர்களும் மனங் குழைவார்கள். ஏனெனில், சீக் கியர், முஸ்லிம்கள், இந்தியக் கிறிஸ்து வர்கள், ஆங்கிலோ இந்தியர்கள், ஐரோப் பியர்கள் ஆகிய ஜன சமூகங்களின் பிரதிநிதிகள் தனித்தனியாய் வகுப்புத் தொகுதிகளின் மூலம் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். இம்மாதிரி வகுப்பு வாதிக ளால் தேர்ந்தெடுக்கப்படும் எண்ணிக்கை

108 ஆகும். மொத்த 250-இல் 108 பேர் இப்படிப் பல்வேறு வகுப்புக்களால் தேர்ந்தெடுக்கப் படுவதால், அவர்களுக்குள் பொதுவாகத் தேசீய உணர்ச்சி இருப்பது முடியாத காரியமாகும். தாழ்ந்த வகுப்பாருக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் 19 ஸ்தானங்களும் வகுப்புச் சம்பந்த மானவைகளே. பெண்மணிகளுக்காக நிர்ணயிக்கப்பட்டிருக்கும் 9 ஸ்தானங்களுக்கு மாகாணச் சட்டசபைகளில் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பார்கள். வியாபாரம், கைத்தொழிலுக்காக 11 ஸ்தானங்களும், நிலச்சுவான்தார்களுக்காக 9-ம் வைக்கப்பட் டிருக்கின்றன. இவர்கள் தனித் தனியாய்ப் பிரத்தியேகத் தொகுதிகளி லிருந்து தேர்ந்தெடுக்கப் படுவார்கள். ஆகவே, தொழிலாளர்களுக்காகக் கொடுக்கப்பட்டிருக்கும் 10 ஸ்தானங்களுக்கும் மிகுதியுள்ள 86 ஸ்தானங்களுக்குமே பொதுத் தேர்தல் நடக்கலாம். இந்த ஸ்தானங்களுக்கு வாக்களிப் பவர்களில் பெரும் பான்மையோர் ஹிந்துக்களாகவே இருப்பார்கள். ஆகையால், இதுவும் ஒரு விதமான வகுப்புத் தேர்தல் தொகுதி என்றே கூறிவிடலாம். இப்படி நானாவிதமாய்த் தேர்ந் தெடுக்கப்படும் 250 அங்கத்தினர்களைப் பல பிரிவினர்களாகவும் கோஷ்டியினராகவும் பிரித்து, சட்டசபையில் ஒற்றுமை ஏற்படாதவாறு செய்வது, அதிகார வர்க்கத்தாருக்கும் எல்லையற்ற பாதுகாப்புக்கள் என்ற அதிகாரம் பெற்ற கவர்னர் ஜெனரலுக்கும் சிரமமான காரியமன்று.

உயிரற்ற அமைப்பு

ஜனநாயகப் பொறுப்பாட்சி ஏற்பட வேண்டுமானால், நல்ல வேலைத் திட்டங்கள் கொண்ட கட்சிகள் சட்ட சபையில் தோன்ற வேண்டும். அரசாங்கத்தை நடத்தும் பொறுப்பை வகிக்கும் மந்திரிமார்கள் எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியந்தான் அவர்களுக்குப் போட்டித் திட்டங்கொண்டு எதிர்க் கட்சியில் வீற்றிருக்கும் தலைவர்களும். ஆகவே, ஸர்க்காரை நடத்துவோர், எதிர்ப்போர் ஆகிய இரண்டு அவசியமான சக்திகள் நமக்கு வேண்டும். எந்தக் கட்சியாரின் வேலைத்திட்டம் ஜன நன்மைக் குகந்ததாயும், இன்றியமையாததாயும் இருக்கிறதோ, அந்தக் கட்சியாரை அரசாங்கப் பீடத்தில் அமர்த்தும் அதிகாரம் சட்ட சபைக்கு இருத்தல் வேண்டும். இந்த அதிகாரம் 'வெள்ளை அறிக்கை'யின் ஜன சபைக்கு இல்லை. இது மாத்திரமல்ல; இச்சபையின் மொத்த எண்ணிக்கையான 375-இல்அனேகமாய் எல்லாரும் வகுப்புத் தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப் படுபவர்களாகையால், தேசீய நோக்கங் கொண்ட கட்சிகள் தோன்றுவது குதிரைக் கொம்பாகவே யிருக்கும். ஜன நாயக நீர் ஊற்றுப் பெருக்குக்கொண்டு ஓடி வராமல், வகுப்புத் தேர்தல் என்ற அணைக்கட்டின் மூலம் ஸர்க்காரார் தடுத்து விட்டிருக்கிறார்கள். இந்த அணையையும் மீறிக் கொண்டு, சட்ட சபையில் ஜனநாயகப் பிரவாகம் வருமானால், மூன்றில் ஒரு பங்கு எண்ணிக்கை கொண்ட சமஸ்தானதிபதிகளின் பிரதிநிதிகள் அதை நன்றாக அடக்கியாளக் கூடியவர்களாயிருக்கிறார்கள். இந்த அம்சத்தில் கவனிக்கும்பொழுது, "பாதுகாப்புக்களின்" கொடுமையைக் காட்டிலும், ஐக்கிய இந்திய ஜன சபையின் அமைப்பும் நியமன முறையும் நூறு மடங்கு அதிக

ஆக்ஷேபத்துக் குரியனவாகின்றன. லண்டன் ஜாயிண்ட் கம்மிட்டியில் இந்தக் குறைகள் நீக்கப்படல் வேண்டும்.

இராஜாங்க சபை

முன்னம் மத்திய கவர்ண்மெண்ட் ஜன சபையின் அமைப்பைக் கவனித்து, அது ஜாயிண்ட் கம்மிட்டியில் தாராளமாக மாற்றியமைக்கப்படாவிடில், சுதந்திர உணர்ச்சியும் ஜனநாயக அரசியலும் அபிவிருத்தியடைய ஹேதுவில்லை என்பதை அறிந்தோம். தாராளத் தன்மை கொண்டிருக்க வேண்டிய ஜன சபையே இவ்வளவு குறுகிய மனிப்பான்மையோடு பிரிட்டிஷ் இராஜ தந்திரிகளால் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் பொழுது, 'முத்தண்ணுக்கள் சபை' என்றழைக்கப்படும் இராஜாங்க சபையின் அமைப்பிலுள்ள கோணல்களை விவரித்துப் பேசிப் பயனில்லை. ஜன சபைக்குக் 'கீழ்'ச் சபை யென்றும், இராஜங்க சபைக்கு 'மேற்' சபை என்றும் அரசியல் அகராதியில் சொல்லப்படும். கீழ்ச் சபையிலிருக்கும் ஜனப் பிரதிநிதிகள் ஆவேசத்தால் சட்ட திட்டங்கள் செய்து புரட்சியை யுண்டுபண்ணி விடுவார்கள் என்றும், ஆகவே அவர்களின் ஆவேச வெள்ளத்திற்கு அணைபோட்டுத் தடுப்பதற்காக மேற் சபையில் அனுபவம் வாய்ந்தவர்கள் என்று சொல்லப்படும் முத்தண்ணுக்களைக் கொண்டுவந்து அமைக்க வேண்டும் என்றும் "வெள்ளை அறிக்கை"க் கர்த்தர்கள் கூறுகிறார்கள். வங்காளம் ஐக்கிய மாகாணங்கள் பீகார் ஆகிய மாகாணங்களிலேயே முத்தண்ணுக்கள் சபை என்ற இரண்டாவது சட்டசபைகளை "வெள்ளை அறிக்கை" வற்புறுத்தி ஏற்படுத்தியிருக்கும் பொழுது, அகில இந்திய ஐக்கிய அரசாங்க நிருவாகத்தின் திறமைக்காக இரண்டாவது சபையான இராஜாங்க சபையை ஏற்படுத்துவதை யாரும் ஆக்ஷேபிக்க முடியாது. ஆயினும், "வெள்ளை அறிக்கை" யில் கூறப்பட்டிருக்கும் இராஜாங்க சபையின் அமைப்பும் அதற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களும் பலத்த ஆக்ஷேபத்துக் குரியவைகளாகும். அச்சபையில் 260 அங்கத்தினர்களுக்கு அதிகமாக இருக்கக் கூடாது. இந்த மொத்தத் தொகையில் 100 பேர்வழிகள் சமஸ்தானுதிபதிகளால் நியமிக்கப்படுவார்கள். பிரிட்டிஷ் இந்தியாவுக்காக 150 ஸ்தானங்கள் இருக்கின்றன. இவைகளுக்குப் பிரதிநிதிகள் மாகாணச் சட்டசபைகளால் தனி ஓட்டுக்களால் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஐரோப்பியர், கிறிஸ்துவர், ஆங்கிலோ இந்தியர் ஆகியவர்கள் சுஜாதி மாகாண அங்கத்தினர்களால் மூன்று தேர்தல் தொகுதிகளிலிருந்து இராஜாங்க சபைக்குப் பிரதிநிதிகளைப் பெறுவார்கள். இவர்களுக்காக 10 வகுப்புவாரி ஸ்தானங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஐரோப்பியருக்கு 7-ம் ஆங்கிலோ இந்தியருக்கு 1-ம், இந்தியக் கிறிஸ்துவர்களுக்கு 2-ம் வகுக்கப்பட்டிருக்கின்றன. சென்னை, பம்பாய், வங்காளம், ஐக்கிய மாகாணங்கள், பஞ்சாப், பீகார் ஆகிய மாகாணங்கள் ஒவ்வொன்றுக்கும் 18 ஸ்தானங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. மத்திய மாகாணங்களுக்கு 8-ம், அஸ்ஸாம், வடமேற்கு எல்லைப்புற மாகாணம், சிந்து ஒரிஸ்ஸா ஆகியவைகள் ஒவ்வொன்றுக்கும் ஐந்து ஸ்தானங்களும் விடப்பட்டிருக்கின்றன. முஸ்லிம்கள் பிரிட்டிஷ் இந்தியப் பிரதிநிதிகளுள் மூன்றில் ஒரு பாகத்தினரா யிருக்கக்கூடிய

ஸ்தானங்களைப் பெற வேண்டும் என்று பிரிட்டிஷ் ஸர்க்காரார் "வெள்ளை அறிக்கை"யில் கூறி யிருக்கிறார்கள். ஆகவே, இராஜாங்க சபையின் மொத்த 260 ஸ்தானங்களுள், சுமார் 90 பேர் களே பொதுத் தேர்தல் தொகுதியிலிருந் துத் தேர்ந்தெடுக்கப் படக்கூடும். மற் றொரு விசேஷம் என்னவெனின், இரா ஜாங்க சபைக்கு 10 உத்தியோகஸ்தரல் லாதவர்கள் ஸர்க்காரால் நியமனம் செய் யப்படுவார்கள். பல தினுசான அங்கத் னர்களால் நிறுவப் பெற்றிருக்கும் இந்த இராஜாங்க சபையானது, இப்பொழுதி ருப்பதைக்காட்டிலும் அதிகமாகப் பிற் போக்குள்ளதா யிருக்குமென்றும், கவர் னர் ஜெனரலின் கட்டளைகளுக்குத் தடையின்றித் தலையாட்டும் பொம்மை யாக விருக்குமென்றும், ஜன சபையின் தீர்மானங்களை நிர்தாக்ஷிண்ணிய மாய்க் கவிழ்த்துவிடும் சுபாவங் கொண்டதென்றும் முற்கூட்டிச்சொல்ல லாகும். இராஜாங்க சபைக்குஞ் சரி, ஜன சபைக்குஞ் சரி, சமஸ்தானங்களுக் காக ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் ஸ்தா னங்களைப் பல்வேறு சமஸ்தானங்களுக் எவ்வாறு பங்கீடு செய்வது என்னும் சிரமமான அம்சம் "வெள்ளை அறிக்கை" யில் விவரிக்கப்பட வில்லை. மொத்தத் தில், வாக்காளர்கள் எண்ணிக்கையைப் பெருக்கியும், அவர்களின் யோக்கியதாம் சங்களைக் குறைத்தும், சர்வஜன ஓட்டுரி மையை ஒரு குறுகிய எல்லையளவாவது பரீக்ஷார்த்தமாய் அங்கீகரித்தும், பெண் மணிகளுக்கும் முஸ்லிம்களுக்கும் தொழி லாளருக்கும் இன்னம் அதிகமான பிரதிநிதித்துவம் செய்து கொடுத்தும் "வெள்ளை அறிக்கை"யைத் திருத்தினல் அரசியல் அறிவும் உணர்ச்சியும் இந்தியா வில் அபிவிருத்தியடையும். லோதியான் கம்மிட்டியார் ஸிபாரிஷ்களை யெல்லாம் ஒப்புக்கொண்டு, ஜனசபையின் எண்ணி க்கையை 400 ஆக உயர்த்தி, பெண்மணி களுக்கு ஆண்களைப்போல் வாக்குரிமை அளித்தால் நல்ல பலனேற்படலாம்.

இரண்டு அரசாங்கங்கள்

மத்திய கவர்ண்மெண்ட்டின் நிருவா கத்தைக் கவனிப்போம். ஒதுக்கப்பட்ட இலாக்காக்கள் என்றும், மாற்றிக்கொடுக் கப்பட்ட இலாக்காக்கள் என்றும் ஸர்க் காரின் நிருவாகம் இரு பாகங்களாகப் பிரிக்கப்படும். ஒதுக்கப்பெற்றிருக்கும் இலாக்காக்கள் கவர்னர் ஜெனரலின் நேர்ப்பார்வையில் இருக்கும்; மந்திரிகளு க்கு மாற்றிக் கொடுக்கப்படும் இலாக்காக் கள் பெயரளவில் மந்திரிமார்களால் நிருவகிக்கப் பெற்று, சட்டசபையின் தணிக்கைக்கு உட்பட்டிருக்கும். ஆனல், மந்திரிமார்களின் ஆலோசனைகளைக் கவர்னர் ஜெனரல் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் கிடை யாது; இதற்கு எதிரிடையாகச் சட்ட ரீதியாய் கவர்னர் ஜெனரலுக்கு மந் திரிமார்கள் ஆலோசனை கூறும் அதி காரம் பெற்றிருந்த போதினும், மந் திரிகளைக் கவர்னர் ஜெனரல் புறக் கணிக்கலாம். மந்திரிமார்களை மட்டுந் தாம் கவர்னர் ஜெனரல் புறக்கணிக்க லாம் என்று யாரும் எண்ணிவிடவேண் டியதில்லை; சட்டசபையையும் புறக்கணி த்துவிடலாம். சட்டசபை செய்யும் சட் டங்களை அங்கீகரிக்கவும், நிராகரிக்கவும் ஒதுக்கிவைக்கவும், திருப்பியனுப்பிவைக் கவும் கவர்னர் ஜெனரலுக்கு அதிகாரம் உண்டு. இதுமாத்திர மல்ல. சட்டசபை யைக் கலைக்கவும், கூட்டவும், அவசரக் காலங்களில் இராஜாங்க சபை ஜனசபை

ஆகியவைகளை ஒன்றுசேர்த்து ஜாயிண்ட் கூட்டம் நடத்தவும் கவர்னர் ஜென ரலுக்கு அதிகாரம் திட்டமாய்க் கொடுக் கப்பட்டிருக்கிறது. மந்திரிமார்கள் தையா ரிக்கும் வரவு செலவுத் திட்டங் களைக் கவர்னர் ஜெனரல் தம் இஷ் டப்படி, தமது பொறுப்புக்களை நிறை வேற்றும் நோக்கத்துடன், மாற்றியமைக் கலாம். இவைகளை ஏற்றுக்கொள்ளாத மந்திரிமார்களை வீட்டுக்கு அனுப்பலாம்; இவைகளை ஒப்புக்கொள்ளாத சட்ட சபையைப் புறக்கணித்துத்தாமேசுயமாக அவைகளைச் சட்டமாக்கலாம். சட்ட சபையின் அனுமதியின்றிக்கூட, கவர்னர் ஜெனரல் வரவு செலவுத் திட்டங்களைச் சுயாதி காரமாக நிறைவேற்றி வைக்க லாம். தமது கட்டளைகளை மீறி நடக் கும் மந்திரிமார்களை எப்படி மூக்கணாங் கயிறு போட்டு இழுத்து அல்லது வேலை யிலிருந்து நீக்கிவிட்டு யதேச்சாதிகாரம் புரியலாமோ, அஃதேபோல் சட்ட சபை யில் முட்டுக்கட்டை போடப்பட்டால், சட்டசபையைக் கலைத்துவிட்டுப் புதுத் தேர்தலை நடத்துமாறும் கவர்னர் ஜெ னரல் உத்தரவிடலாம். சட்ட சபையின் நடவடிக்கைகள் எப்படி நடத்தப்பட வேண்டும் என்பதைச் சட்ட சபையைக் கலந்தாலோசிக்காமலே சுயமாய் உத்த ரவுகள் பிறப்பித்துக் கவர்னர் ஜெனரல் நிர்ணயிக்கலாம்; தமது விசேஷப் பொ றுப்புக்கள் அல்லது ஒதுக்கப்பட்டிருக் கும் இலாக்காக்கள் அல்லது பொது வான தேசநன்மை ஆகிய காரணங்க ளைக் காட்டி, கவர்னர் ஜெனரல் மந் திரிமார்களையும் சட்ட சபையையும் தம் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும்படி செய் யலாம். மறுத்தால் அவர்களை வீட்டுக் கனுப்பும் அதிகாரம் அவரிடம் தையா ராயிருக்கிறது. ஆகவே, "வெள்ளை அறிக்கை"யில் இரு போட்டி அரசாங் கங்கள் என்று ஒதுக்கப்பட்டிருக்கும் இலாக்காக்களையும், மாற்றிக் கொடுக்கப் படும் இலாக்காக்களையும் வருணித்திரு ந்த போதிலும், கிரியாம்சையில் கவர் னர் ஜெனரலின் யதேச்சாதிகாரமே மந்திரிமார்களின் மூலமாகவும் சட்ட சபையின் வாயிலாகவும் உண்மையில் பிரதிபலிக்கும். கவர்னர் ஜெனரலைத் திருப்தி செய்துவிட்டு, மந்திரிமார்களும் சட்ட சபையும் ஒன்று சேர்ந்து தாங்கள் அவசியமென நினைக்கும் தேசப் புனருத் தாரணத் திட்டங்களை நிறைவேற்றவும் அவைகளுக்குப் பணம் கடன் வாங்கவும் அல்லது தீர்வைகளைக் குறைக்கவும் அல் லது உயர்த்தவும் கூடாதா? என்றால், அதுவும் கூடாது. கவர்னர் ஜெனர லுக்கு முரண்படாமல் உடன்பாடாய் மந்திரிமார்களும் சட்ட சபை அங்கத் தினர்களும் நடக்க வேண்டியதோடு, பின்னவர்கள் செய்யும் ஒவ்வொரு வே லைக்கும் முன்னவரின் ஆதரவும் அங்கீ காரமும் அனுமதியும் பூர்வாங்கமாய்த் தேவையாகும். ஆகவே, மத்திய கவர்ண்மெண்ட்டின் அரசாட்சி பார் வைக்குப் படாடோபமாய் இரட்டை யாட்சியாகக் காணப்படினும், காரியத் தில் கவர்னர் ஜெனரலின் ஒற்றை யாட்சியாகவே அமைந்து 35 கோடி மக்கள் நிறைந்த இந்தியா முழுவதற் கும், பிரிட்டிஷ் மன்னர் சார்பில், இந் திய கவர்னர் ஜெனரல் சர்வாதிகாரி யாக விளங்குவார்.

இந்திய முஸோலினியா அல்லது ஹிட்லரா

மேலே விவரித்திருக்கும் கவர்னர் ஜெனரலின் சர்வாதிகாரத்தையும் தனி

அதிகாரங்களையும் ஊன்றிக் கவனிப்பவர்கள் ஒரே ஒரு முடிபுக்குத் தான் வரக்கூடும். அஃதாவது, இவ்வளவு எல்லையற்ற அதிகாரங்கள் பெறும் அதிகாரி இத்தாலியின் முஸோலினியையும் ஜெர்மானிய ஹிட்லரையும் தோற்கடிக்கக் கூடியவரா யிருப்பார் என்பதே. இந்தியாவிலுள்ள தேசீய வாதிகள்தாம் இவ்வண்ணம் கூறுவார்கள் என்று யாரும் எண்ணிவிட வேண்டாம்; பிரிட்டிஷ் கவர்ண்மெண்ட்டின் "வெள்ளை அறிக்கை"யின் கொள்கைகளை மிக மூர்த்தன்னியமாய் எதிர்த்துப் போராடும் மிஸ்டர் சர்ச்சில் என்னும் தந்திரி பின்வருமாறு இந்த விசேஷ அதிகாரங்களைக் குறித்து எழுதுகிறார்:—

"இராஜப் பிரதிநிதி அல்லது கவர்னர் ஜெனரலுக்கு ஹிட்லர் அல்லது முஸோலினிக்கு இருந்து வரும் அதிகாரங்கள் அளிக்கப் பெற்றிருக்கின்றன. அவர் தம் பேனு வீச்சால் அரசியல் திட்டத்தை ஒரு நொடியில் சிதறடித்து விடலாம்; எவ்விதச் சட்டத்தையும் அவர் சுயமாக, எவர் தயையும் வேண்டாமல், இந்தியா முழுவதற்கும் இயற்றி, அமலுக்குக் கொண்டு வரலாம். சட்டமில்லாச் சட்டம் என்று சொல்லப்படும் இராணுவச் சட்டத்தை அவர் தோற்றி வைக்கலாம். புரட்சிக்கு முன் ருஷியாவில் ஜார் சக்கிரவர்த்தி இருந்து வந்த யதேச்சாதிகார, பொறுப்பற்றநிருவாகஸ்தராக "வெள்ளை அறிக்கை"யின் கவர்னர் ஜெனரல் தலைவிரித்தாடலாம்."

"வெள்ளை அறிக்கை"யை உடைத்தெறியும் நோக்கத்துடன் மிஸ்டர் சர்ச்சில் மேலே குறிப்பிட்டிருக்கும் வருணனையில் உற்சாகம் காட்டிய போதிலும், அவரது கூற்றில் மறுக்கக்கூடியது எதுவும் இல்லை. "வெள்ளை அறிக்கை"யின் கர்த்தர்களே இந்தச் சர்வாதிகாரத் தன்மையின் கொடுமையை உணர்ந்திருக்கிறார்கள் என்று சொல்லவும் கூடும். எனெனின், "ஒரு புத்திசாலித்தனமான கவர்னர் ஜெனரல் தம்முடைய மந்திரிமார்களுடன் ஒத்துழைக்கவே முயற்சிப்பார். தம்முடையவிசேஷப்பொறுப்புக்களை நிறைவேற்றி வைக்க வேறு மார்க்கமில்லாமற் போனல்தான், விசேஷ அதிகாரங்களைப் பிரயோகிப்பார்" என்று அவர்கள் ஓர் இடத்தில் கூறுகிறார்கள். கவர்னர் ஜெனரல் எதிர் மறையாகச் சட்ட சபையையும் மந்திரிமார்களையும் புறக்கணித்து, ஐரோப்பிய பாஸிஸ்ட் தலைவர்களான முஸோலினி, ஹிட்லரைப் போல் நடக்கக்கூடிய அதிகாரங்களைப் பெற்றிருப்பது போதாததே போல், உடன்பாடாகச் சட்ட மியற்றும் அதிகாரமும் பெற்றிருக்கிறார். மந்திரிமார்களும் சட்ட சபையும் அவசரக் காலங்களில் அவசரச் சட்டங்கள் செய்யும் உரிமையும் அதிகாரமும் பெற்றிருப்பதே போல், கவர்னர் ஜெனரலும் பிரத்தியேகமாய், "கவர்னர் ஜெனரல் சட்டங்கள்" என்று, சட்ட சபைகளையும் மந்திரிமார்களையும் கலந்தாலோசிக்காமல் பிறப்பிக்கலாம். கவர்னர் ஜெனரலின் விசேஷப் பொறுப்புக்கள் என்று வரையறுக்கப்பட் டிருக்கும் 8 அல்லது 9 இனங்கள் மட்டுமே யல்லாமல், பொதுவாய் நாட்டின் சட்டத்திற்கும் அமைதிக்கும் எது எது உசிதம் என்று அவருக்குத் தோன்றுகிறதோ அது அதை

யெல்லாம் அவர் தம்மிஷ்டப்படி செய்து முடிக்கலாம். ஆகவே, அவரது யதேச்சாதிகார ஜ்வாலையில் ஜனநாயகம் என்ற வாழைச் செடி தழைத்தோங்குமானால், அஃது உலக அரசியல் அற்புதங்களில் ஒன்றாகும் என்று கூறலாம். ஆனால், அத்தைக்கு மீசை முளைத்தால் சிற்றப்பன் என்று கூறலாம் என்று பகற் கனவு காண்பதில் பயனில்லை. பிரிட்டிஷ் ஸர்க்கார் இவ்வளவு பெரிய சர்வாதிகாரியின் யதேச்சாதிகாரத்தின் கீழ்த்தான், இந்தியாவில் ஜனநாயக ஆட்சி ஸ்தாபனங்களைப் பரீட்சை செய்து பார்க்க விரும்புகிறது. இந்தியத் தேசீய வாதிகளின் எண்ணம் நிறைவேறவில்லை என்பது பெரிய விஷயமாயினும் அஃதொரு பக்கமிருக்கட்டும்; கொஞ்சமேனும் ஜனநாயக ஆட்சியின் மணம் "வெள்ளை அறிக்கை"யின் மத்திய கவர்ண்மெண்ட் ஆட்சியில் வீச வேண்டியது அவசியமென்று பிரிட்டிஷ் ஸர்க்காரார் ஒப்புக் கொள்வார்களேயாயின், கவர்னர் ஜெனரலின் நெருப்பும், மந்திரிமார் சட்டசபையின் ஜலமும் ஒன்று கூடி ஒரே கூரையின் கீழ் வாழ முடியாதாகையால், இவைகளை இயற்கை முரண் இல்லாதவாறு ஜாயிண்ட் கம்மிட்டியில் திருத்தி அமைக்க வேண்டும்.

29,409 பவுன் செலவு

யாதாஸ்தின் முதல் வால்யூமில் முதல்பாகம் கூட்டுக் கம்மிட்டியின் சிபார்சுகள் அடங்கியது. இரண்டாவது பாகத்தில் பார்லியமெண்ட் கூட்டுக் கம்மிட்டியின் நடவடிக்கைகள் விவாதங்கள் அடங்கியிருக்கின்றன. இரண்டாவது வால்யூமில் கூட்டுக் கம்மிட்டிக்கு அனுப்பிக் கொள்ளப்பட்ட விக்ஞாபனங்கள் அடங்கி யிருக்கின்றன. கூட்டுக் கம்மிட்டியின் வேலைக்காகப் பார்லியமெண்ட் செலவழித்த பணம் 29,409 பவுன் 3 ஷில்லிங் 4 பென்ஸாகும். 159 தடவை கம்மிட்டியார் கூடினார்கள். 120 பேருக்கு மேல் விசாரணை செய்யப்பட்டனர். இந்தியா மந்திரி தாமும் ஒரு சாட்சியாக வந்து 19 நாள் சாக்ஷி கொடுத்து 60 ஆயிரம் கேள்விகளுக்குப் பதிலளித்தது பிரிட்டிஷ் அரசியல் சரித்திரத்திலேயே ஒரு புதுமையென்று சொல்லப்படுகிறது.

1933 ஏப்ரில் 11-ந்தேதி பார்லியமெண்டால் இக்கூட்டுக் கம்மிட்டி நியமிக்கப்பட்டு, பிரிட்டிஷ் இந்தியா, சமஸ்தானங்கள் ஆகிய எல்லாவிடங்களிலிருந்தும் பிரதிநிதிகளைக் கூப்பிட்டு விசாரிக்க அதிகாரம் கொடுக்கப்பட்டது. சமஸ்தானங்களிலிருந்து 7 பிரதிநிதிகளும், பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து 21 பிரதிநிதிகளும் தருவிக்கப்பட்டார்கள். பர்மாவிலிருந்து 12 பேர் வந்திருந்தனர்.

ஜாயிண்ட் பார்லியமெண்ட்டரிக் கம்மிட்டி ரிப்போர்ட்

1. "வெள்ளை அறிக்கையை"யை விட இது மோசமானது.

2. மத்திய கவர்ண்மெண்ட்டில் பொறுப் பாட்சி இல்லை. இராணுவம், அன்னிய நாட்டு விவகாரம், பொக்கிஷம் ஆகியவைகள் இந்தியருக்கு மாற்றிக் கொடுக்கப்பட மாட்டா.

3. கவர்னர் ஜெனரலுக்குச் சர்வாதிகாரம். பிரிட்டிஷ் வியாபாரத்தை இந்தியாவில் நிலைநாட்ட முயற்சி செய்யப்படும்.

4. மாகாணங்களில் இரட்டையாட்சி தொலை ந்து ஒரு வகையான மாகாணச் சுய ஆட்சி ஆரம்ப மாகும்.

5. கவர்னருக்குச் சர்வாதிகாரம், சட்ட சபை யையும் மந்திரிமார்களையும் கவர்னர் தம் இஷ்டப் படி ஆட்டி வைக்கலாம்; விசேஷ அதிகாரங்களைச் சட்ட சபையின் அனுமதியின்றியே கவர்னர் பிர யோகிக்கலாம்; கவர்னர் இஷ்டப்படுகிறவர்களை மந்திரிகளாக நியமிக்கலாம்; சட்ட சபை விரோத மாகத் தீர்மானித்தாலும் மந்திரிகள் ராஜிநாமா செய்ய வேண்டிய தில்லை. வகுப்புத் தொகுதிகளால் மாகாணச் சட்ட சபை அங்கத்தினர்கள் தேர்ந் தெடுக்கப்படுவர்.

6. இந்தியா சட்ட சபைக்குத் இப்பொழு திருப்பதைப்போல் நேர்முகமான தேர்தல் கிடை

யாது ; மறைமுகமான தேர்தல் வகுப்புத் தொகுதிகளிலிருந்து நடைபெறும்.

7. 5-மாகாணங்களில் முத்தண்ணுக்கள் சபை —இரண்டாவது சபை ஏற்படும்.

8. பாதுகாப்புக்கள் "வெள்ளை அறிக்கை" யில் கூறப்பட்டிருப்பதைவிட மிகவும் அழுத்தமாகவும் அதிகமாகவும் செய்யப்பட் டிருக்கின்றன.

9. ஐக்கிய இந்திய அரசாங்கம்—பெடரல் கவர்ண்மெண்ட்—சமஸ்தானதிபதிகளில் பாதிப் பேராவது சேர்ந்தால் தான் ஏற்படும்; இம்மாதிரி ஐக்கிய அரசாங்கம் ஏற்படும் வரையில் மத்திய இந்தியா கவர்ண்மெண்ட்டில் இரட்டை யாட்சியும் இல்லை. இந்தியா குடியேற்ற நாட்டுரிமை பெறுவதென்ற பேச்சும் காணப்படவில்லை.

10. பர்மா இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்டு விடும்.

11. ரயில்வே நிர்வாகத்திற்குத் தனிச் சட்டம் இயற்றப்படும் ; இப்பொழுது இயற்றப்பட்டிருக்கும் ரிசர்வ் பாங்க் சட்டத்தில் கவர்னர் ஜெனரல் அனுமதியின்றி மாறுதல் செய்ய முடியாது.

12. மகாகனம் ஆகாகான், மகாகனம் ஸர் தேஜ்பஹாதூர் ஸாப்ரூ ஆகியவர்கள் கோரிய திருத்தங்களெல்லாம் நிராகரிக்கப்பட்டு விட்டன.

ஜாயிண்ட் கம்மிட்டி ரிப்போர்ட்

ஜாயிண்ட் பார்லியமெண்ட்டரிக் கம்மிட்டியின் ரிப்போர்ட் 22-11-34ல் லண்டனிலும் இந்தியாவிலும் ஏக காலத்தில் பிரசுரமாகி யிருக்கிறது. இந்த ரிப்போர்ட் 281 பக்கங்கள் கொண்டதா யிருப்பதால், அரசாங்கத்தார் இந்த ரிப்போர்ட்டின் சாராம்சத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அதை இப்பத்திரிகையின் பிறிதோரிடத்தில் காணலாம். அந்தச் சாராம்சத்தைப் படிப்பதற்கு முன், அந்த ரிப்போர்ட்டின் மொத்த அம்சங்களைப் பற்றிச் சுருக்கமாக இங்கே கூறுவோம்.

6 பகுதிகள் கொண்ட ரிப்போர்ட்

ஜாயிண்ட் கம்மிட்டியின் ரிப்போர்ட்டில் 6 பகுதிகள் காணப்படுகின்றன. அவைகளாவன:—

(1) முதற் பகுதியில், "வெள்ளை அறிக்கை"யின் பீடிகைகளும், தத்துவங்களும், அரசியல் அனுஷ்டான விதிகளும் முறைகளும் விஸ்தரிக்கப்பட் டிருக்கின்றன. "வெள்ளை அறிக்கையின்" உறுப்புக்களாயிருக்கும் (அ) ஐக்கிய இந்திய அரசாங்கம் (ஆ) மத்திய கவர்ண்மெண்ட்டிலும் மாகாணத்திலும் பொறுப்பாட்சி (இ) பாதுகாப்புக்கள் ஆகிய மூன்று அம்சங்கள் மிக நுணுக்கமாக ஜாயிண்ட் கம்மிட்டியாரால் பரிசீலனை செய்யப்பட் டிருக்கின்றன.

(2) இரண்டாவது பகுதியில், ஜாயிண்ட் கம்மிட்டியார் ஷிபாரிஷ் செய்திருக்கும் மாகாணச் சுயஆட்சியின் லட்சணங்களும் எல்லைகளும், உரிமைகளும் பொறுப்புக்களும் வரையறுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. "வெள்ளை அறிக்கை"யின் திட்டம் அனேகமாக அப்படியே ஜாயிண்ட் கம்மிட்டியால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால், ஒரு வித்தியாசம்: "வெள்ளை அறிக்கை"யை விட இந்த ரிப்போர்ட் மிகவும் மோசமாக விருக்கிறது. சட்டசபையின் அதிகாரம் குறைக்கப்பட்டிருக்கிறது; சட்டசபைக்கு மந்திரிமார்கள் ஜவாப் சொல்லாமலிருக்கு முறையில், சட்டசபையையும் மந்திரிமார்களையும் அடக்கியாள்வதற்குரிய தாராளமான பந்தோபஸ்துக்களும் பாதுகாப்புக்களும், கவர்னருக்குச் சர்வாதிகாரமும் ஷிபாரிஷ்கள் செய்யப்பட்டிருக்கின்றன. "வெள்ளை அறிக்கை" வேண்டாம் என்று சொன்ன முத்தண்ணுக்கள் சபை—இரண்டாவது சட்டசபை—சென்னை, பம்பாய், ஐக்கிய மாகாணம், பீகார், வங்காளம் ஆகிய மாகாணங்களுக்கு ஏற்படுத்தப்பட் டிருக்கின்றன. சட்டம், அமைதி இலாக்காக்கள் மாகாண மந்திரிமார்களுக்குப் பெயரளவில் மாற்றப்பட் டிருப்பினும்; அவைகளில்தலையிடக் கவர்னருக்கு விசேஷ அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பொலீஸ் இலாக்கா, இரகசியப் பொலீஸ் ஆகியவைகளில் மந்திரிமார்களின் அதிகாரம் செல்லாது; அவைகள் கவர்னரின் பாதுகாப்பிலே இருக்கும். சட்டம்—அமைதிக்குத் தேவையாயின் சட்டசபைகளைக் கலந்து கொள்ளாமலே, கவர்னர் சட்ட மியற்றலாம். சுருங்கக்

கூறின், கவர்னர் சர்வாதிகாரி; மாகாணச் சுயஆட்சி என்பது அவரது சுயஆட்சியேயாகும்.

(3) மூன்ருவது பகுதியில், இந்தியாவில் எதிர்காலத்தில் ஏற்படவிருக்கும் ஐக்கிய அரசாங்கத்திற்கும் பிரிட்டிஷ் மன்னருக்கும் இருக்க வேண்டிய சம்பந்தம் விவரிக்கப்பட்டிருக்கிறது. "வெள்ளை அறிக்கையின்" யோசனைகளெல்லாம் அப்படியே அங்கீகரிக்கப்பட்டு விட்டன. எனினும், 'அதன்' (Aden) பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்டு, இங்கிலாந்தின் ஆதிக்கத்திற்குக் கொடுக்கப்படும். இந்தியாவின் கோரிக்கை நிராகரிக்கப் பட்டு, இந்தியா மந்திரியின் வாதம் ஜாயிண்ட் கம்மிட்டியாரால் அங்கீகரிக்கப்பட்டு விட்டது.

(4) 4-ஆவது பகுதியில், ஐக்கிய அரசாங்க மத்திய கவர்ண்மெண்ட்டின் அமைப்பு விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. மத்திய இந்தியா கவர்ண்மெண்ட்டில் இரட்டையாட்சியை ஏற்படுத்தி, இராணுவம், பாதுகாப்பு முதலிய இலாக்காக்கள் இந்திய மந்திரிமார்களின் ஆதிக்கத்தி விருந்து ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இம்மாதிரியிருப்பது இந்தியருக்குத் திருப்தியளிக்காதென்றும், ஓரளவிற்கு இராணுவம், பாதுகாப்பு, அன்னியநாட்டு இலாக்கா ஆகியவைகளில் இந்தியா சட்டசபைக்கும் மந்திரிமார்களுக்கும் அதிகாரமும் செல்வாக்கும் இருக்க வேண்டும் என்றும் இந்தியப் பிரதிநிதிகள் வற்புறுத்தியிருக்கும் காரணங்களை ஜாயிண்ட் பார்லியமெண்ட்டரிக் கம்மிட்டியார் ஆலோசனை செய்து, இந்தியரின் எல்லாக் கோரிக்கைகளும் நிராகரிக்கப் பட்டிருக்கின்றன. உத்தியோகங்களை இந்திய மயமாக்க வேண்டும் என்கிற தேசீயக்கோரிக்கை அசாத்தியம் என்று தள்ளப்பட்டிருக்கிறது. இராஜாங்க சபை 9 வருடத்திற்கு ஆயுள் பெற்றிருக்கும்; மூன்று வருடங்களுக்கு மூன்றில் ஒரு பகுதி யங்கத்தினர்கள் விலகுவார்கள்; இரண்டு சபைகளிலும் சமஸ்தானுதிபதிகளின் பிரதிநிதிகள் தேசீய உணர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடுவார்கள்; நேரடியான தேர்தல் இல்லாமல் மறைமுகமான தேர்தல் வைக்கப்பட்டிருப்பதால், இந்தியா சட்டசபை, இராஜாங்க சபை ஆகிய இரண்டும் ஜனநாயக உணர்ச்சி பொருந்தியவைகளாக விருக்கா; அவைகள் எவ்வளவு பிற்போக்காகஇருக்கலாமோ அவ்வண்ணமே செய்யப்பட்டிருக்கிறது.

(5) 5-ஆவது பகுதியில், இந்தியா சட்ட சபைகள் மாகாணச் சட்ட சபைகளின் அதிகார எல்லை, பொக்கிஷப் பாகுபாடு, அகில இந்திய உத்தியோகங்கள், நீதி நிருவாகம், வியாபார அம்சங்கள், ரிசர்வ் பாங்க், ரயில்வே, முதலியவைகள் விஸ்தரிக்கப் பட்டிருக்கின்றன. பிரிட்டிஷ் வியாபாரிகளுக்குச் சலிகை காட்டுவதை நிலைநாட்ட இப்பகுதியில் விசேஷ வாதம் செய்யப்பட்டிருக்கிறது. இந்தியாவின் வியா

பாரம் கைத்தொழில்களைப் பாது காப்பதற்காகப் பிரிட்டிஷ் சாக்குக் களின் மீது தீர்வை விதிப்பதும் பிரிட்டிஷ் சாமான்களை ஒதுக்குவ தும் பிரிட்டிஷாருக்கு விரோதம் என்று கருதப்பட்டால், அம்மாதிரி செய்யும் அதிகாரம் இந்தியா சட்ட சபைகளுக்கு இருக்காது. பிரிட் டிஷ் வியாபாரத்தைப் பாதுகாக் கும் பொறுப்பு, கவர்னர் ஜெனர லுக்கு ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. இந்தியாவிலுள்ள பிரிட்டிஷார் சம்பந்தமாகவும் ஜமீன்தார்கள் விஷயமாகவும் கவர்னர் ஜெனரல் அனுமதியின்றி இந்தியா சட்ட சபையில் சட்ட திட்டங்கள் செய்ய முடியாது.

(6) ஆறுவது பகுதியில், பர்மா வை இந்தியாவை விட்டுப் பிரிக்க வேண்டும் என்றும், அப்படிப்பிரிப் பதால் ஏற்படும் நிலைமைக்கு என் னென்ன செய்ய வேண்டும் என் றும் கூறப்பட் டிருக்கின்றன.

பிரிட்டிஷ் தொழிற் கட்சி அறிக்கை

பிரிட்டிஷ் தொழிற்கட்சியார் பின்வரும் அறிக்கையை வெளியிட் டிருக்கிறார்கள்:—கூட்டுக் கம்மிட்டியில் ஸ்தானம் வகித்த தொழிற் கட்சி யங்கத்தினர் நால்வரும் கம்மிட்டியின் யாதாஸ்துக்கு விரோத மாக அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள். தங்களுடைய சொந்த சிபார்சுகளையும் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். இந்தியாவுக்குச் சுய ஆட்சியளிக்கும் பிரச்னையாக மட்டும் இதைக் கருதாமல், இந்தியா விலுள்ள பாமரர்கள், விவசாயத்தில் ஈடுபட்ட குடியானவர்கள், இதர தொழிலாளர்கள் முதலியோருக்கு ராஜீயத் துறையில் அதி காரம் கிடைக்கும்படியும் பார்த்துக்கொள்ள வேண்டு மென்பது தொழிற்கட்சி யங்கத்தினரின் விருப்பம். எந்த அரசியல் மசோதா கொண்டுவருவதா யிருந்தாலும் குடியேற்ற நாட்டு அந்தஸ்து அளிப் பதே முடிவான லட்சியமென்பதைத் தெளிவாகக் கண்டுவிட வேண்டு மென்றும், தானாகவே அபிவிருத்திக்கு இடமளிக்கக் கூடிய சாதனங் கள் புதிய அரசியலில் அடங்கியிருக்க வேண்டுமென்றும் அவர்கள் கோருகின்றனர்கள். கம்மிட்டியின் சிபார்சுகள் பணக்காரர்களுக்கும், சொத்து சுதந்திர முள்ளவர்களுக்கும், அனுகூலமான நிலையிலுள்ள இதரர்களுக்கும், அளவுக்கு மிஞ்சிய சகாயம் செய்ய ஏற்பட்டவை போல் காணப்படுகின்றன. ஆகையால், நெடுங்காலமாயுள்ள பிரிட்டிஷ் இந்திய சம்பந்தத்தின் சரித்திரத்தில் இன்னோர் அத்தியாயம் ஆரம் பிக்குமுன், பிரிட்டன் கூடுமானவரை விசால புத்தி காட்ட முயல வேண்டுமென்று நாங்கள் வற்புறுத்துகிறோம்.

முக்கிய ஸிபாரிஷ்கள்

ஜாயிண்ட் பார்லியமெண்ட்டரிக் கம்மிட்டியார் பார்லியமெண்ட்டுக்குச் சமர்ப்பித்திருக்கும் 281 பக்கங்கள் கொண்ட நீண்ட அறிக்கையின் சாராம்சம் அடியிற் கண்டவாறு அதிகார தோரணையில் சுருக்கி எல்லாப் பத்திரிகைகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கூட்டுக் கம்மிட்டியாருக்கு இந்தியப் பிரதிநிதிக ளெல்லாரும் சேர்ந்து சமர்ப்பித்த யாதாஸ்து ஜாயிண்ட் கம்மிட்டியாருக்கு மிகவும் உபயோகமாக விருந்ததாம்.

போதுஜன உணர்ச்சி

பிரிட்டிஷ் ஆட்சி, கல்வி யபிவிருத்தி, மகா யுத்தத்தால் தோன்றிய உணர்ச்சி, தேசீய உணர்வு ஆகியவைகள் இந்திய மக்களிடையே பெரும் அரசியல் விழிப்பைத் தந்திருக்கின்றன. அரசியல் முன்னேற்றம் ஏற்பட்டா லொழிய, இந்த உணர்ச்சியைத் திருப்தி செய்ய முடியாது. கல்வி யறிவு இல்லாத மக்களின் நிலைமையைக் கொண்டு தேச அரசியல் விழிப்பை மதிப்பிடுவது தவறு என்பதைச் சரித்திரம் வற்புறுத்திக்கொண்டே வருகிறது.

பாதுகாப்புக்கள் இன்றியமையாதவை

பிரிட்டிஷ் அரசியல் அமைப்பை அப்படியே இந்தியாவில் பெயர்த்து வைத்துவிடல் முடியாது; பிற அரசியல் அமைப்புக்களின் உதாஹரணங்களைக் கொண்டு புதிய கற்பனைகளை இந்தியாவில் உற்பத்தி செய்வது மோசமாகும். இந்தியாவின் தேசீய உணர்ச்சியை மதிக்க வேண்டியது இன்றியமையாத தாகும்; ஆயினும், இந்த உணர்ச்சியால் மட்டும் இந்திய அரசியல் பிரச்சினைகளைத் தீர்த்துவிடுதல் அசாத்தியமாகும். இந்தியாவின் அனுபவத்தி லிருந்தே அதன் எதிர்கால அமைப்பு, கிரமப்படி முளைத்து வளர வேண்டும். எனவே, புதிய அரசியலை நிர்ணயிக்கும்பொழுது அதைப் பாதுகாக்கப் "பாதுகாப்புக்கள்" தேவையாகும். பாதுகாப்புக்களைச் சட்ட ரீதியாக அமைக்கவேண்டும். இங்கிலாந்தில் இம்மாதிரியான பாதுகாப்புக்கள் சட்டத்தில் இல்லை என்பது உண்மையாயினும், சம்பிரதாயமான தடைகளும் பிடிப்புக்களும் பாதுகாப்புக்களும் அனுஷ்டானத்தில் இருந்தே வருகின்றன.

மாகாணச் சுய ஆட்சி

இந்தியாவின் எதிர்கால அரசியல் அமைப்பிற்கு மாகாணச் சுய ஆட்சியை அஸ்திபாரமாகக் கொள்ள வேண்டுமென்று நாங்கள் பார்லியமெண்ட்டுக்கு ஸிபாரிஷ் செய்கின்றோம். மாகாணச் சுயஆட்சி என்பது

மகத்தான அரசியல் மாறுதலை யுண்டாக்கக் கூடிய திட்டம் என்பதை நாங்கள் உணர்கின்றோம். எனினும், 1919வருஷத்தில் மாண்டேகு சட்டம் ஒரு தாராளமான "பொறுப்பாட்சியை" அளித்திருக்கிறது. எனவே, இந்தியாவின் பழைய அமைப்பை வெட்டிவிட்டு நாங்கள் புதிய சிருஷ்டியைப் புகுத்தவில்லை. ஸைமன் கம்மிஷன்கூட, பொறுப்பாட்சியை வளர்ப்பதற்கு அரசியல் வாதிகளிடம் அதிகாரத்தைக் கொடுத்து அவர்களின் செய்கைகளுக்கு அவர்களையே பொறுப்பாளி யாக்குவதுதான் உசிதமான முறை என்று கூறியிருக்கின்றது. அரசாங்கத்தைப் பல பிரிவுகளாகப் பிரித்து ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் செய்தால், மந்திரிகளின் ஜவாப்தாரித்தனம் குறைந்துபோகிறது. ஆகையினால், இந்தியாவின் எல்லா மாகாணங்களிலுமுள்ள "இரட்டை ஆட்சியை" எடுத்துவிட்டுப் பூரண மாகாணப் பொறுப்பாட்சியை மந்திரிகளிடம் ஒப்புவிக்க வேண்டும் என்று நாங்கள் ஸிபாரிஷ் செய்கின்றோம்.

சட்டமும் அமைதியும்

ஓர் அரசாங்கத்தின் பிரதமக் கடமையாக விருப்பது, சட்டம் அமைதியைப் பாதுகாத்து ஒழுங்கான நிருவாகத்தை நடாத்தி வருவதாகும். எனவே, மந்திரிகளிடம் மாகாணச் சுய ஆட்சியை ஒப்படைத்த போதிலும், அவர்களின் பொறுப்பு என்னவென்பதை நிர்ணயித்துக் கூற வேண்டி யிருக்கிறது. பிரிட்டிஷ் அரசியல் முறைப்படி, மந்திரிகளின் பொறுப்பானது சட்ட சபைக்கு உட்பட்டதாகவோ அல்லது சட்டசபை அங்கத்தினர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கக்கூடிய தாகவோ இல்லை என்பதை யாவரும் கவனிக்க வேண்டும். இம்மாதிரியே தான் இதுவரையில் இந்தியா கவர்ண்மெண்ட், பிரிட்டிஷ் பார்லியமெண்ட் ஆகிய இரு அரசாங்க அமைப்புக்களின் சம்பந்தமும் இருந்து வந்திருக்கிறது; இதைப்போலவே தான் புதிய இந்திய அரசியல் அமைப்பில் மாகாணச் சட்ட சபையில் மாகாண மந்திரிகளின் நிலைமை இருந்து வரவேண்டும்.

இந்தியாவின் தற்போதைய நிலைமையில், மாகாணச் சட்ட சபையிலிருக்கும் மந்திரிமார்களுக்குச் சட்டசபையின் ஆதிக்கமில்லாமல் சுயேச்சையாயிருக்கும்படி செய்வதற்காக விசேஷ அதிகாரங்கள் மாகாணக் கவர்னருக்குக் கொடுக்கப்படல் வேண்டும்.

பாதுகாப்புக்களின் அர்த்தம்

இந்த ரிப்போர்ட்டில் உபயோகிக்கப்பட்டிருக்கும் "பாதுகாப்புக்கள்" என்னும் பதமானது நன்றாயில்லை; பிரிட்டிஷாருக்கும் இந்தியருக்கும் தப்பர்த்தத்தைக் கொடுக்கக்கூடியதாயிருக்கிறது. இந்தியருக்கு அதிகாரத்தைக் கொடுத்துவிட்ட பிறகு, இழந்துவிட்ட அதிகாரத்தைப் பெறும் உபாயமாகவே பிரிட்டிஷார் இப்

பதத்தை அர்த்தம் செய்துகொள்கிருர்கள். இதற் கெதிரிடையாக, இந்திய தேசீய வாதிகள், உண்மைப் பொறுப்பாட்சியைக் கொடுக்காமல் தடுப்பதற்காகவே இப் பாதுகாப்புக்கள் முட்டுக் கட்டைகளாக வகுக்கப் பட்டிருப்பது பிரிட்டிஷாரின் சுய நலத்தைக் காட்டுகிறது என்கிருர்கள். இந்த இரண்டு அர்த்தங்களும் பிழை பட்டவை.

நாங்கள் கூறும் பாதுகாப்புக்கள் சட்டரீதியானவை; சம்பூரண அதிகாரம் பெற்றவை; புதிய அரசியல் அமைப்பின் வெற்றிக்கு இவைகள் இன்றியமையாதவை; புதிய சட்டத்தின் மற்ற அம்சங்களைப் போல இப் பாதுகாப்புக்களும் மிகவும் முக்கியமான பிரிவுகளாகவே கருதப்பட வேண்டும். இந்தியர்கள் பொறுப்பை வகிக்கவும் ஜவாப்தாரித்தனமாய் நடக்கவும் எந்த அளவிற்கு முன் வருகின்றுர்களோ அந்த அளவிற்குத்தான் பாதுகாப்புக்களின் தேவையும் நீங்கும்.

சுய வளர்ச்சிக்கு வழி வேண்டும்

புதிய சீர்திருத்தங்களின் வெற்றியும் திறமையும் அவைகளை நடத்தி வைக்கும் மாதிரியையும் உற்சாகத்தையும் அனுசரித் திருக்கின்றன. நாங்கள் ஸிபாரிஷ் செய்திருக்கும் சீர்திருத்தங்கள் எதிர் காலத்தில் எந்த ரூபத்துடன் விளங்கும் என்பதை இப்பொழுது முற்கூட்டியுரைத்தல் அசாத்தியமாகும். எனவே, இவைகளை நடத்தி வைக்கும் மந்திரிமார்கள் தங்கள் முயற்சியாலேயே எதிர்கால விமோசனத்தைத் தேடிக் கொள்ளும்படி செய்ய வேண்டும். இச்சட்டத்திலேயே சுய வளர்ச்சிக்கு வேண்டிய அம்சங்களும் அதிகாரங்களும் இருத்தல் வேண்டும்; எதிர்கால இந்திய அரசியல் மாத்தின் வித்து இப்பொழுதே இந்தச் சீர்திருத்தங்களில் காணப்பட வேண்டும்.

மத்திய கவர்ண்மெண்ட்டில் மாறுதல்

மாகாணச் சுயஆட்சி கொடுக்கப்படுவதால், இப்பொழுதிருக்கும் இந்தியா கவர்ண்மெண்ட்டின் மத்திய அமைப்பும் சமயோசிதமாகத் தேவைக் கேற்றபடி மாறுதல் அடைய வேண்டியே வரும். மாகாணங்களைப் பிரித்துத் தனி ஆட்சி ஸ்தாபனங்களாக விட்டுவிட்டு, மத்திய கவர்ண்மெண்டை மாறுதலின்றி வைத்துக் கொள்வதால், தேசீய ஒற்றுமையும் இந்தியாவின் ஐக்கிய பாவமும் குறைந்து, பிரிந்துபோகும் சக்திகள் பலப்பட்டுவிடும். இதைப் போலவே, பிரிட்டிஷ் இந்தியாவுக்கும் சமஸ்தானங்களுக்கும் அரசியல் சம்பந்தம் இல்லாவிடில், இந்தியாவின் ஏக ஐக்கிய பாவம் பறந்து போய்விடும். இந்திய அரசியல்கட்சியார்கள் எல்லாரும் "அகில இந்திய ஐக்கிய ஸ்தாபனம்" —ஆல் இந்தியா பெடரேஷன்— ஏற்படுத்துவதை முடிவான நோக்க

மாகப் பிரிட்டிஷார் கொள்ளவேண்டும் என்று வற்புறுத்துகின்றார்கள். இந்தியாவின் ஐக்கிய அரசியல், பொருளாதாரம், கூட்டுறவு ஆகியவைகளைக் கவனிக்கும் பொழுது, பிரிட்டிஷாரின் அதிகாரம் மாகாண மந்திரிகளுக்கு மாற்றிக் கொடுக்கும் சமயத்தில், இந்தியா முழுவதற்கும் பொதுவாக விருந்து ஆட்சி புரியக் கூடிய பலமான மத்திய ஸ்தாபனம் ஒன்று தேவை என்பதை மறுப்பதற்கில்லை.

மன்னர்கள் நிபந்தனை

ஐக்கிய இந்திய அரசியலில்—பெடரேஷனில்—கலந்து கொள்வதற்கு மன்னர்கள் ஒரு நிபந்தனை விதிக்கிறார்கள். இந்தியாவின் பொது நிருவாக சம்பந்தமாகத் தங்களுக்குப் போதுமான உரிமை இருந்தால் தான் ஐக்கிய இந்திய அரசியலில் கலந்துகொள்ள முடியும் என்று மன்னர்கள் கூறுகின்றார்கள். மன்னர்கள் வியவகாரத்தில் இந்தியா சட்டசபை தலையிடுவதை அவர்கள் விரும்பவில்லை.

மத்திய கவர்ண்மேண்ட்டில் பொறுப்பாட்சியை ஏற்படுத்துவதால் மன்னர்கள் பிரச்சினை தீர்ந்துவிடாது என்று ஸைமன் கம்மிஷன் கூறியிருப்பதை நாங்கள் அங்கீகரிக்கிறோம்; அதனால் அகில இந்திய ஐக்கிய அரசாங்கமும் தோன்றாது. மத்திய கவர்ண்மெண்ட்டில் ஓரளவுக்குப் பொறுப்பாட்சி யளித்து அதற்கு வெளியில் பார்லியமெண்ட்டின் அதிகாரத்திற் குட்பட்ட ஒதுக்கம் செய்தால் இப் பிரச்சினையைத் திருப்திகரமாகத் தீர்த்து வைக்கலாம் என்று நாங்கள் அபிப்பிராயப் படுகிறோம்.

புதிய அரசியலின் முக்கியப் பகுதிகள்

எங்கள் ரிப்போர்ட்டின் முக்கிய அம்சங்களைத் தொகுத்துக் கூறிவிடுகிறோம்:

(1) மாகாணச் சுய ஆட்சி புதிய அரசியலின் அஸ்திபார மாகும்.

(2) அகில இந்திய ஐக்கிய அரசாங்கம்—பெடரேஷன்—முடிவான லட்சியம்.

(3) மத்திய கவர்ண்மெண்ட்டில் மாறுதல் ஏற்படுவதற்கு முன், மாகாணச் சுயஆட்சி அமலுக்கு வரவேண்டும்.

(4) எனினும், மாகாணங்களிலும் மத்திய கவர்ண்மெண்ட்டிலும் புதிய அமைப்புக்கள் ஏற்படக் கூடிய முறையில் பொதுவான ஒரே சட்டமியற்ற வேண்டும்.

அகில இந்திய உத்தியோக வர்க்கம், பிரிட்டிஷ் வியாபாரச்

சலிகை ஆகியவைகள் இந்தியா சட்ட சபையின் அதிகாரத்திற்கு உட்பட்டிருக்க மாட்டா. உத்தியோகங்களை இந்திய மய மாக்க முடியாது.

(5) பார்லியமெண்டின் நோக்கம் நன்ருகத் தெளிவு படுத்தப்பட வேண்டும்.

(6) மாகாணச் சுய ஆட்சி அமைப்பு அமலுக்கு வந்ததும் எவ்வளவு விரைவில் மத்திய கவர்ண்மெண்ட்டில் புதிய திருத்தங்களை ஏற்படுத்தலாமோ அவ்வளவு துரிதமாகச் செய்தல் வேண்டும்; இரண்டுக்கும் மத்தியில் அதிகமான இடைக்காலம் இருக்கக் கூடாது.

(7) இந்த இடைக் காலத்திற்காக மத்திய கவர்ண்மெண்ட்டில் மாறுதல்கள் ஒன்றும் தேவையில்லாவிடினும், அகில இந்திய ஐக்கிய அரசாங்கம் ஏற்பட்டால் என்னென்ன அதிகார மாற்றம் மத்திய கவர்ண்மெண்ட்டில் தோன்றுமோ, அவைகளுக்குச் சமமான மாறுதல்கள் மத்திய கவர்ண்மெண்ட்டில் செய்யாமலிருக்க முடியாது.

மாகாணச் சுய ஆட்சி விவரம்

மாகாண, மத்திய கவர்ண்மெண்ட்கள் நிருவகிக்க வேண்டிய இலாக்காக்களும் அவைகளின் அதிகாரமும் சட்ட ரீதியாக வகுக்கப்படல் வேண்டும். இந்த இரண்டு அதிகார எல்லைக்குள் தகரார் ஏற்படுமாயின், அதைத் தீர்த்து வைக்க, கவர்னர் ஜெனரலிடம் அதிகாரம் சேமித்து வைக்கப்படும்.

சிந்துவும் ஒரிஸ்ஸாவும் தனி மாகாணங்களாகும். பெரார் மத்திய மாகாணத்துடன் சேர்க்கப்பட்டு, பிரிட்டிஷாரும் ஹைதராபாத் நிஜாம் மன்னரும் கூட்டு நிருவாகத்தை நடாத்துவார்கள்.

இரட்டை யாட்சி தொலைந்து, மாகாண நிருவாகம் முழுதும் மந்திரிமார்களுக்கு ஒப்படைக்கப்படும். மாகாணச் சட்ட சபையிலிருந்து நியமிக்கப்படும் மந்திரிமார்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகார எல்லைக்குள் கவர்னருக்கு ஆலோசனை கூறலாம். ஆனல், கவர்னர் பொறுப்பிலிருக்கும் இலாக்காக்களிலும் விஷயங்களிலும் அவர் சுயமாக நடக்கும் அதிகாரமுடையவராயிருப்பார். தேவையான சட்டம், பணம், முதலியவைகளைப் பெறும் அதிகாரம் கவர்னருக்கு உண்டு.

சட்டமும் அமைதியும் மந்திரிகளுக்கு மாற்றிக் கொடுக்கப்படினும்,

பொலீஸ் இலாக்காவும் இரகசியப் பொலீஸும் கவர்னரின் பிரத்தியேகப் பாதுகாப்பில் இருந்து வரும். புரட்சியை யடக்குவது சம்பந்தமாகக் கவர்னர் விசேஷ அதிகாரங்களைச் சட்ட ரீதியாகப் பெற்றிருக்கிறார்.

வாக்குரிமை லோதியான் கம்மிட்டியின் ஸிபாரிஷ்களை யொட்டியே யிருக்கும். ஸ்திரீ வாக்காளர்களின் எண்ணிக்கை இன்னம் சிறிது அதிகமாக்கப்படும். மாகாணச் சட்ட சபைகளின் அமைப்பு "வெள்ளை அறிக்கை" வகுத்திருப்பதைப் போலிருக்கும். ஆனால், சென்னைக்கும் பம்பாய்க்கும், வங்காளம், ஐக்கிய மாகாணம், பீகாரைப்போல் இரண்டாவது சட்ட சபை ஏற்படுத்தப்படும். மாகாண இரண்டாவது சபை—முத்தண்ணுக்கள் சபை—யின் அங்கத்தினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் ஒரு குறிப்பிட்ட காலத்தில் விலக வேண்டும். அஃதாவது, பொதுத் தேர்தல் இல்லை.

வகுப்புத் தீர்ப்பும் பூனா ஒப்பந்தமும் அப்படியே அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. மத்திய சட்ட சபையில் முஸ்லிம்கள் மொத்தத்தில் மூன்றில் ஒரு பங்கு ஸ்தானங்களைப் பெற வேண்டும்.

ஹிந்து மகா சபைத் தலைவர் பாய் பரமானந்தர் கூறும்

அபிப்பிராயம் வருமாறு:—

தர்ம நியாயங்களையும், ஹிந்துக்களின் வேண்டுகோளையும் அடியோடு புறக்கணித்து, கூட்டுக் கமிட்டியார் சிபார்சு செய்திருப்பதைக் காண நாட்டிலுள்ள யாவரும் மிக்க ஏமாற்றமடைவார்கள். அரசியல் அறிக்கையும், அதை ஆதாரமாகக் கொண்ட கூட்டுக்கம்மிட்டி யாதாஸ்தும் ஒழுங்கான அரசியலை நமக்கு அளிக்கக் கூடும் என்று நான் கருதவில்லை. ஐக்கிய இந்திய அரசாங்க சபைகளுக்கு மறைமுகமான தேர்தலும், பர்மாப் பிரிவினையும், மூன்றில் ஒரு பங்கு ஸ்தானங்கள் முஸ்லிம்களுக்கு அளித்திருப்பதும் நீங்கலாக, மற்றப்படி ஆதி அரசியலறிக்கைக்கும் கூட்டுக் கம்மிட்டி யாதாஸ்துக்கும் வித்தியாசமில்லை. இது வரை கவர்ன்மெண்ட்டார் எந்த மனோ பாவத்துடன் இந்தியாவில் நிர்வாகம் நடத்தியிருக்கிறார்களோ அதே மாதிரி இனியும் நடத்த வேண்டுமென்ற உத்தேசத்துடனேயே அரசியல் விசாரணை ஆதிமுதல் நடந்து வந்திருக்கிறது. நாம் சொல்லுவதை நமது எஜமானர்கள் கவனித்தாலும் சரி, கவனிக்காவிட்டாலும் சரி, நடெங்கும் நமது கண்டனத்தைத் தெரிவிக்க ஏற்பாடு செய்யப்படுமென்று நம்புகிறேன்.

கூட்டுக் கம்மிட்டி அறிக்கை

["தாருல் இஸ்லாம்" 24-11-34 இதழில் வெளியான தலையங்கம்]

தேசமெங்கும் கண்டனம்

ஜாயிண்ட் பார்லியமெண்ட்டரிக் கம்மிட்டியின் அறிக்கை 22—11—34-ஆந் தேதி இந்தியாவிலும் இங்கிலாந்திலும் சம காலத்தில் வெளியிடப்பட் டிருக்கிறது. இங்கிலாந்தில் ஒரு சில பிரமுகர்களும் பத்திரிகைகளும் நீங்கலாகப் பெரும் பான்மையோர் இந்தக் கூட்டுக் கம்மிட்டி அறிக்கையை யாதரிக்கிறார்கள். இங்கிலாந்து கொடுத்து இந்தியா வாங்கிக் கொள்ள வேண்டியிருக்கும் நிலைமையில், பெரும்பான்மையான பிரிட்டிஷாருக்கு எது திருப்தி அளிக்கின்றதோ அஃது இந்தியாவுக்கு விரோதமாகவும் அதிருப்திகாமாகவுந்தா னிருக்கும் என்பதை யாம் சொல்லத் தேவையில்லை. தாராளமாகவும்,ஜீவகாருண்யத்தோடு கூடிய இராஜ தந்திரத்துடனும் ஏகாதிபத்திய வல்லரசுகள் எப்பொழுதும் நடந்திருப்பதாக உலக சரித்திரத்தில் கூறப்படவில்லை; பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் குடியேற்ற நாடுகள் விடுதலை பெற்ற வாலாற்றைப் பார்த்தால், பலத்த போராட்ட மின்றி இலகுவில் இணங்கும் சுபாவம் "ஜான் புல்" என்ற பிரசித்த அடைமொழியைப் பெற்றிருக்கும் பிரிட்டிஷாருக்கு இல்லை. எனவே, கூட்டுக் கம்மிட்டியின் அறிக்கை இந்தியாவிலுள்ள எந்த அரசியல் கட்சியாருக்கும் திருப்தியளிக்கவில்லை என்பதில் ஆச்சரியமெதுவும் இல்லை. தேசமெங்கணும் இந்த அறிக்கை பலமாகக் கண்டிக்கப்பட்டுவருகிறது.

"வெள்ளை அறிக்கை"யின் மூத்தண்ணு

ஒருவன் கேட்டானும்: 'கழுதை அழகானதா? கோவேறு கழுதை அழகானதா?' என்று. விவேகி பதிலளித்தானும்: "கழுதைக்குக் குரலழகு; கோவேறு கழுதைக்குக் கழுத்தழகு" என்று. அதே உபமானம் "வெள்ளை அறிக்கை"க்கும் அதை யொட்டி வெளிவந்திருக்கும் கூட்டுக் கம்மிட்டியின் ரிப்போர்ட்டுக்கும் மிகவும் பொருத்தமான தாகும். "வெள்ளை அறிக்கை" இந்தியாவுக்கு அரைகுறை மனத்துடன் பொறுப்பாட்சி கொடுக்க உத்தேசித்தது; ஆனால், கூட்டுக் கம்மிட்டியின் அறிக்கை அந்தப் "பொறுப்பாட்சி" உத்தேசத்தைப் "பாதுகாப்புக்கள்" என்ற விஷக் காற்றுக்களால் கொல்லப்பார்க்கிறது; வெள்ளை அறிக்கையே தேசமக்களுக்குத் திருப்தி யளிக்கவில்லை எனின், அதை விட மோசமானதென்று கூட்டுக் கம்மிட்டியாரே சொல்லும் இப் பிரஸ்தாப அறிக்கை பிரிட்டிஷ் கன்ஸர்வெட்டிவ் பிற்போக்காளரைத் தவிர, இந்தியரில்

எந்த வகுப்பினரையும் அரசியல் கட்சியினரையும் திருப்தி செய்யா தென்பதைக் கூட்டுக் கம்மிட்டி ரிப் போர்ட்டைத் தையாரித்த ஆசிரியர் களே நன்குணர்வார்கள். எனவே, வெள்ளை அறிக்கையின் "முத்தண்ணு வாக" விளங்கும் இந்தக் கூட்டுக் கம்மிட்டி அறிக்கைக்கு இந்தியாவில் எங்கும் அடியும் உதையுமாகவே யிருக்கின்றன.

வெள்ளை அறிக்கையின் தத்துவம்

வெள்ளை அறிக்கையின் தத்துவ மென்ன? அத் தத்துவம் எப்படி இந்தக் கூட்டுக் கம்மிட்டி யாதாஸ் தில் நிராகரிக்கப் பட்டிருக்கிறது என் பதை யாவரும் நன்கறிந்து கொள் ளல் வேண்டும். வெள்ளை அறிக்கை யின் தத்துவ விமர்சனத்தை, அன் பர்களுக்கு உபயோகமாக விருக்கும் பொருட்டு, இந்நூலின் முன் பக்கங்க ளில் பிரசுரித்திருக்கிறோம். கூட்டுக் கம்மிட்டி அறிக்கையின் முக்கிய ஸிபாரிஷ்களை முன் 27-ஆம் பக்கத் தில் தொகுத்துக் காட்டியிருக்கிறோம். வெள்ளை அறிக்கையைக் கூட்டுக் கம்மிட்டி எப்படி மோசமாக்கி யிருக் கிறது என்பதை மேற்கூறிய இரண்டு வெளியீடுகளின் சாராம்சத்தைப் படித்தால் நன்கு தெரிந்துகொள்ள லாம். ஆனால், இங்கு யாம் ஒன்றை வற்புறுத்திக் கூற விரும்புகிறோம்: வெள்ளை அறிக்கையின் தத்துவத்தைக் காங்கிரஸ் ஒப்புக்கொள்ள வில்லை; வெள்ளை அறிக்கையை நிராகரிக்க வேண்டும் என்று காங்கிரசும் முஸ் லிம் யூனிட்டிபோர்டும் தீர்மானித்து, இந்தியா சட்டசபைத் தேர்தலில் இப் பிரச்சினையை வாக்காளருக்கு எடுத்துக் காட்டி, "வெள்ளை அறிக் கையை நிராகரிக்க வேண்டும்" என்ற தங்கள் அபிப்பிராயத்திற்குத் தேசத் தில் போதாரவைத் தேடி யிருக்கிறார் கள். எனவே, வெள்ளை அறிக்கை யையே நிராகரிக்கத் தீர்மானித்து, விட்ட பிறகு அதைவிட மோசமான கூட்டுக்கம்மிட்டியின் ஸிபாரிஷ்களைத் தேசம் அங்கீகரிக்காது என்பதை ஏற்கெனவே யாம் மேலே கூறியுள் ளோம். எனினும், வெள்ளை அறிக் கையின் தத்துவம் என்னவெனின், இந்திய அபிப்பிராயத்தை யொட்டி இந்தியாவின் எதிர்கால அரசியலை நிர்ணயிக்க வேண்டும் என்பதே யாகும். லார்டு இர்வின்—காந்திஜீ ஒப்பந்தத்திற்குப் பின் வெள்ளை அறிக்கை வெளி யிடப்பட்டது. காந்தி—இர்வின் ஒப்பந்தத்திற்கு முன்னும் பின்னும் லண்டன் வட்ட மேஜை மகாநாடுகளில் இந்தியப் பிரதிநிதிகள் பிரிட்டிஷ் மந்திரிமார்க ளுடன் இந்திய அரசியல் விஷயமாக ஆலோசனை கூறினார்கள். வெள்ளை அறிக்கையில், இந்தியக் கூட்டுறவை வரவேற்கும் பாகங்கள் நிறைந்திருந் தன. ஆனால், கூட்டுக் கம்மிட்டியின் அறிக்கையில், இந்தியாவின் எதிர்கால அரசியல்லட்சியம் 1919-ஆம் வருடத் திய மாண்டேகு சட்டத்தின் பூர்வ பீ டிகையில் "முடிவாகவும் தெளிவாக வும்" வரையறுக்கப்பட்டு விட்டதா

கக் கூறியிருக்கிருர்கள். மாண்டேகு சட்டத்தின் பூர்வபீடிகையில், "படிப் படியாகக் காலக்கிரமத்தில் பொறுப் பாட்சியை யடைவது பிரிட்டிஷ் இந்திய ஆட்சியின் நோக்கம்; முன்னேற்றத்தின் படிகளை நிர்ணயிப்பது பிரிட்டிஷ் கவர்ண்மெண்ட்டின் இஷ்டத்தைப் பற்றிய தாகும்" என்று சொல்லப்பட் டிருக்கிறது. இந்தியா இதை ஒப்புக்கொள்ள வில்லை; இதே கொள்கையை இப்பொழுது கூட்டுக் கம்மிட்டி, 15 வருட காலத்திற்குப் பிறகு மீட்டும் வற்புறுத்துவதி லிருந்து, வெள்ளை அறிக்கையின் தத்துவம் காற்றில் பறந்து போய்விட்டது என்றும், பிரிட்டிஷார் இஷ்டப்பட்டுக் கொடுக்க இசைவதையே இந்தியா முகமலர்ச்சி யுடன்வாங்கிக்கொள்ளவேண்டும்என்றும் பிரிட்டிஷ் இராஜ தந்திரிகளும் கன்ஸர்வெட்டிவ் கட்சியாரும் மனோராஜ்யம் செய்வதாகத் தெரிகிறது. இந்தியா இதுகாறும் கோரி வந்த சுய நிர்ணய உரிமையும், லண்டன் வட்ட மேஜை மகாநாடுகளின் மூலம் இந்தியருடன் கலந்து பேசி ஓர் அரசியல் அமைப்பைத் தையாரிப்பது என்னும் கொள்கையும் கூட்டுக் கம்மிட்டியாரால் நிச்சயமாக நிராகரிக்கப்பட்டு விட்டன.

கூட்டுக் கம்மிட்டியின் நோக்கம்

கூட்டுக் கம்மிட்டியின் நோக்கம் மிக மிகத் தெளிவாக எழுதப்பட் டிருக்கிறது. இந்த யாதாஸ்தின் குறைகளைக் கூறிக்கொண் டிருப்பதில் பயனில்லை. வெள்ளை அறிக்கையை விட அதிகப் பிற்போக்குக் கொண் டிருக்கும் இது, மகாகனம் ஸாப்ரூ, ஆகாகான், பிரிட்டிஷ் இந்தியப் பிரதிநிதிகள் ஆகியவர்கள் கோரிய திருத்தங்களையும், பிரிட்டிஷ் தொழிற் கட்சியார் சமர்ப்பித்த மாற்றுத் திட்டத்தையும் நிராகரித்து விட்டிருக்கிறது. இந்தியாவின் பொதுஜன அபிப்பிராயத்தைத் திருப்தி செய்ய வேண்டும் என்கிற கவலை அக் கம்மிட்டிக்கு இல்லை. "இவ்வளவு தான் எங்களால் கொடுக்க முடியும்; இஷ்டப்பட்டால் இந்தியர் ஒத்துழைக்கட்டும்; இந்தியர் ஒத்துழைத்தாலும் ஒத்துழைக்கா விட்டாலும், நாங்கள் இப்புதிய அரசியலை இந்தியாவில் நிலைநாட்டப் போகிறோம் என்பதில் யாருக்கும் எவ்வித சந்தேகமும் வேண்டாம்" என்று கூட்டுக் கம்மிட்டி அறைகூவி யழைக்கின்றது. இந்த நோக்கத்தைக் கொண்டே அதன் ஸிபாரிஷ்கள் தையாரிக்கப் பட்டிருக்கின்ற படியால், இந்தியாவின் தேசீய வாதிகள் இப்புதிய அரசியல் சட்டத்தை நடத்தி வைக்க முன்வராமற் போனாலும், அவர்களை எதிர்த்துப் போராடியாவது இப்புதிய அரசியல் அமைப்பை நிறைவேற்றுவதற்கான உபாயங்களையும் பிடிப்புக்களையும் பாதுகாப்புக்களையும் கம்மிட்டியார் வகுத்திருக்கிருர்கள். எதிர்க் கட்சியார் புதிய அரசியலை உடைத்தெறியா வண்ணம், சட்டசபையில் முட்டுக் கட்டைகள்

தோன்றுதவாறு, மந்திரிமார்கள் சட்டசபைப் பெரும்பான்மையோரின் ஆதிக்கத்திற்குட்பட்டுத் திண்டாடாமலிருப்பதற்காக, ஜாயிண்ட் கம்மிட்டியார் வெகு பிரயாசைப்பட்டு இந்தத் திட்டத்தை இயற்றி யிருக்கிறார்கள். எனவே, இஃதோர் யுத்தத் திட்டமாகும். இந்திய தேசியவாதிகளின் எதிர்ப்பைச் சமாளிப்பதற்காகவே, ஏராளமான பாதுகாப்புக்களைக் கூட்டுக் கம்மிட்டியார் சட்ட ரீதியாக நுழைத்திருக்கிறார்கள்.

காங்கிரஸ் ஒத்துழைத்தால்

கூட்டுக் கம்மிட்டியார் வகுத்திருக்கும் இந்த "யுத்தத் திட்டம்" மனஸ்தாப மேகங்களாலும் மூடு பனியாலும் சூழப்பட்டிருக்கின்றன. அவநம்பிக்கை எனும் இருள் நீங்கி, பரஸ்பர நட்பு என்ற சூரியன் இந்திய வானத்தில் உதிக்குமானால், காங்கிரஸ் ஸர்க்காருடன் சட்டசபைகளிலும் மந்திரிச் சபையிலும் ஒத்துழைக்க முன் வருமானால், அப்பொழுது கூட்டுக் கம்மிட்டியார் வகுத்திருக்கும் திட்டம் எப்படியாகும்? காங்கிரஸ் தேசிய ஒற்றுமையுடன், ஹிந்து—முஸ்லிம் ஐக்கியத்தோடு, ஸர்க்காருடன் ஒத்துழைக்க முன்வந்தால், மோசத்தில் நிகரற்றதாகத் தோன்றும் இந்தக் கூட்டுக் கம்மிட்டியின் யாதாஸ்து மிகவும் ரமணீயமான அரசியல் பூந்தோட்டமாகத் திகழும்; பொறுப்பாட்சியின் சம்பிரதாயங்கள் தோன்றும்; கவர்னர், கவர்னர் ஜெனரல்களின் விசேஷ அதிகாரங்கள் சட்டப் புத்தகங்களிலேயே புதைந்து மரித்துப் போகும். தேசிய வாதிகளின், காங்கிரசின் ஒத்துழைப்பைக் கூட்டுக் கம்மிட்டியார் ஒவ்வொரு வாக்கியத்திலும் கோருகின்றார்கள். தேசிய விழிப்பையும் காங்கிரசுக்குத் தேசத்தில் தோன்றி யிருக்கும் ஆதரவையும் பிரிட்டிஷ் கவர்ண்மெண்ட்டார் அறியாமலில்லை. ஆனால், காங்கிரஸ் ஸர்க்காருடன் ஒத்துழைக்கும் என்ற நம்பிக்கை இல்லாததாலும், காங்கிரசின் பலமான எதிர்ப்பைச் சமாளிக்கவும் கூட்டுக் கம்மிட்டியார் பலவித வெடி மருந்துகளையும் ஆயுதங்களையும் பீரங்கிகளையும் கவர்னருக்கும் கவர்னர் ஜெனரலுக்கும் கொடுத்திருக்கிறார்கள். இந்த யுத்தக் கோலம் காங்கிரஸ் ஒத்துழைப்பால் நீங்கும் என்பதில் எமக்கு ஐயமில்லை.

காங்கிரசின் நிலைமை

காங்கிரஸ் ஸர்க்காருடன் எப்படி ஒத்துழைக்கலாம்? தேசீய வாதிகள் சம்பூரண சுயேச்சையைக் கோரியல்லவோ தீவிரப் போராட்டத்தை நடத்துவார்கள்? என்று கேட்கலாம். ஆம்; அதை மறுப்பதற்கில்லை; காங்கிரஸையும் முஸ்லிம் யூனிட்டி போர்டையும் வாக்காளர்கள் பெரு மிதமான வாக்குக்களால் ஆதரித் திருக்கும்பொழுது, தேர்தல் வாக்குறுதிக்கு விரோதமாகக் காங்கிரஸ் தேசீயவாதிகள் போகக்கூடாது என்பதை

யாம் ஆக்ஷேபிக்க வில்லை. ஆனால், "வெள்ளை அறிக்கையை" எப்படி நிராகரிப்பது? தேசியப் பொறுப் பாட்சியை எப்படி நிலை நாட்டுவது? என்னும் அம்சங்களை ஆராய்ந்து பார்த்தால், இந்தியா சுயராஜ்யம் பெறுவதற்குள் காங்கிரஸ் தேசிய வாதிகள் பிரிட்டிஷ் அரசாங்கத் துடன் அனேக அரசியல் ஒப்பந்தங் களைச் செய்துகொண்டேதான்போக வேண்டும்என்பதுபுலப்படும். வெள்ளை அறிக்கையின் குறுகிய லட்சியமும் கூட்டு அறிக்கையின் நிபந்தனைகளும் குறுகிய அதிகாரங்களும் தேசிய இந் தியாவுக்கு அவமதிப்பை யுண்டாக்கு கின்றன வென்பது உண்மையே. இந்த அவமானத்தைப் போக்க வழி என்ன? என்பதைத் தேச மக்கள் சிந்திக்க வேண்டும். சட்ட சபை களைப் பகிஷ்கரிப்பதால், வெள்ளை அறிக்கையின், கூட்டுக் கம்மிட்டி ஸிபாரிஷ்களின் குண தோஷங்கள் நீங்கிவிடா; சட்ட சபையில் முட்டுக் கட்டை போடுவதால் தேசிய நோக் கம் பலிக்காதென்பதைத் தேச பந்து ஸி. ஆர். தாஸர் காலத்தில் நாம் பார்த் தோம்; மந்திரிச் சபைகளை உடைத் தெறிவதால், பொறுப்பாட்சி யேற் படா தென்பதை, வங்காள, மத்திய மாகாணமந்திரிச்சபைகளைச்சுயராஜ்ய கட்சியார் உடைத்தெறிந்த பின்னர்த் தேசம் அறிந்து கொண்டிருக்கிறது.

அயர்லாந்து வழி காட்டுகிறது

பகிஷ்காரமும் முட்டுக் கட் டைகளும் மந்திரிப் பதவிகளை ஏற்கா தொழிப்பதும் தேச அரசியல் சுதந் திரப் போராட்டத்திற்கு ஏற்றவை யல்ல வென்பதைக் காங்கிரஸ் தலைவர் கள் உணர்ந்துகொண் டிருக்கிறார்கள். இந்த உண்மைக்கு அயர்லாந்தில் குடி யரசுக் கட்சித் தலைவர் டிவாலரா வின் அனுபவம் சான்று தருகின் றது. இனிச் சட்ட சபையில் போ ராட வேண்டிய முறை அரசியல் சீர் திருத்தங்களைப் பகிஷ்கரிப்ப தல்ல; சீர்திருத்தங்களிலுள்ள குறைகளை நீக்கித் தேவையான திருத்தங்களைச் செய்வ தாகும். டிவாலரா அயர் லாந்து சட்ட சபையைப் பகிஷ்கரி த்து, நம்மைவிட ஒருபடி முன் சென்று, போட்டி ஸ்தாபனங்களை யும் அரசாங்கத்தையும் ஏற்படுத்திப் பார்த்தார். 5 வருடக் கானல் வேட் டைக்குப் பிறகு முன்னால் அவர் பகிஷ்கரித்த சட்ட சபையில் நுழைந் தார்; 8 வருடங்களுக்குப் பிறகு மந்திரிப் பதவிகளை ஏற்றார்; அதி காரங் கிடைத்ததும் அவர் படிப் படியாய் அனுஷ்டானத்தில் குடி யரசை ஏற்படுத்திக்கொண்டு, இன்று டிவாலரா பிரிட்டிஷ் சிங்கத்தின் மீசையைப் பிடித்திழுத்து அதற்குக் கோபமூட்டி வருகின்றார். இந்தத் தேய்ந்த அரசியல் போராட்டப் பா தையில் செல்லுமாறு தேச மக்கள் காங்கிரசுக்குக் கட்டளையிட வேண் டும். சீர்திருத்தங்களைக் காங்கிரஸ் வாதிகள் பகிஷ்கரிப்பது வெள்ளை அறிக்கை, கூட்டுக் கம்மிட்டி யாதாஸ்து ஆகிய இரண்டின் கொடுமைகளையும் சிறுமைகளையும்

இந்தியாவில் நிலை நாட்டும் வழியாகும்; இக் கொடுமைகளையும் சிறுமைகளையும் தடுப்பதற்காக, இவைகளை நிராகரிக்க, காங்கிரஸ் மந்திரிப் பதவிகளை ஏற்று உண்மைப் பொறுப் பாட்சியை நிலைநாட்டப் போராட வேண்டும்.

பகிரங்க இரகசியம்

கூட்டுக் கம்மிட்டி இந்தியாவின் கோரிக்கையை மதிக்க வில்லை; உண்மைப் பொறுப்பாட்சியை, சுதேசியத்தை, பொருளாதார வளர்ச்சியைத் தடுக்கிறதென்பதில் தடையில்லை; பிரிட்டிஷ் வியாபாரத்திற்கு இந்தியாவை ஒரு பெரிய மார்க்கெட்டாக உபயோகித்துக் கொள்ளவேண்டும் என்பது வியாபாரப் பாதுகாப்புகளின் பிரதம நோக்கம் என்பது பகிரங்க இரகசியமாகும். "பிரிட்டிஷ் வியாபாரத்தை எப்படிப் பாதுகாப்பது? பிரிட்டிஷ் முதல், நாணயம், சலிகைகள், ஆதிக்கம் ஆகியவைகளை எப்படி இழக்காம லிருக்கலாம்?" என்பதே கூட்டுக் கம்மிட்டியின் விசாரம்; பிரிட்டிஷாரின் கவலை. இந்த விசாரம் நீங்கினால், பிரிட்டிஷார் இந்தியா உண்மைப் பொறுப் பாட்சி பெறுவதை வழிமறிக்க மாட்டார்கள். பிரிட்டிஷ் வியாபாரம் உலகமெங்கும் சீரழிந்து வருகிறது; இந்தியாவே அதற்கு உயிர் நிலையாகவும் ஜீவ நாடியாகவும் இருந்துவருகிறது. இந்தச் சங்கடமான நிலைமையில், இந்தியாவில் தங்களுக்கிருந்துவரும் ஆதிக்கத்தை முற்றிலும் இப்பொழுதே இழந்துவிடப் பிரிட்டிஷார் சம்மதிக்க மாட்டார்கள்.

பரஸ்பர ஒத்துழைப்புத் தேவை

பிரிட்டனுடன் பரஸ்பர வியாபார ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டால், விசேஷ அதிகாரங்களையும் பாதுகாப்புக்களையும் வாபஸ் பெற்றுக்கொள்ளத் தையாரா யிருப்பதாகக் கூட்டுக் கம்மிட்டியாரே கூறியிருக்கிறார்கள். பரஸ்பர இந்திய—பிரிட்டிஷ் கூட்டுறவை நாடி இப்புதிய சீர்திருத்தங்கள் வெளியிடப்பட்டிருப்பதால், ஸமரஸ மனப்பான்மையுடன் தேசத்தாரும் காங்கிரசும் ஆலோசனைகூற முன்வாந்தால், கூட்டுக் கம்மிட்டியின் ஸிபாரிஷ்கள் பார்லியமெண்ட்டரி மசோதாவில் மாறுதலடையும் என்று நம்பலாம். எமது மொத்தக் கருத்தில், காங்கிரஸ் தலைவர்களிடத்திலே தான் இப்பொழுது முழுவிசையும் இருக்கிறது. காங்கிரஸ் ஸர்க்காருடன் ஒத்துழைக்க முன்வந்தால், இரு தேசங்களுக்கும் அனுகூலமான முறையில் புதிய அரசியலைத் திருத்தியமைக்க வழி பிறக்கும்.

தேசமெங்கும் கண்டனம்

டாக்டர் அன்சாரீயின் கருத்து

காங்கிரஸ் சட்ட சபைப் பஞ்சாயத்தின் தலைவர் டாக்டர் எம். ஏ. அன்சாரீ கூறியதாவது:—

பார்லியமெண்ட் கூட்டுக் கம்மிட்டி யாதாஸ்தைப்பற்றித் தனிப்பட்ட முறையில் எந்தக் காங்கிரஸ்காரரும் தமது அபிப்பிராயத்தைத் தெரிவிக்க முடியாது. காங்கிரஸ் அக்ராசனர், காரியக் கம்மிட்டி யங்கத்தினர், சட்ட சபைப் பஞ்சாயத்தார் ஆகியவர்களை நான் கலந்து பேசி வருகிறேன். சீக்கிரத்தில் இந்த யாதாஸ்தைப் பற்றி ஆலோசித்து, அபிப்பிராயம் தெரிவிக்கப்படும். காங்கிரஸின் கட்சி இன்னதென்று ஏற்கெனவே சந்தேகமற்ற முறையில் அறிவிக்கப் பட்டிருக்கிறது. இந்தியாவின் அரசியலை நிர்ணயிக்க ஜனப் பிரதிநிதிச் சபை கூட்டியாக வேண்டுமென்ற தேசியக் கோரிக்கையைப் பற்றி ஏற்கெனவே உலகமறிய நாம் எடுத்துச் சொல்லி யிருக்கிறோம்.

ஸ்ரீமான் சத்தியமூர்த்தி

உறுதியுடனும், தைரியத்தோடும் சுயாஜ்யப் போராட்டத்தை நடத்திவரும் ஒரு நாட்டாருக்குக் கூட்டுக் கமிட்டி யாதாஸ்து ஓர் அசந்தர்ப்பமான தடையென்றே நான் கூறுவேன். காங்கிரஸும், இந்தியா சட்டசபை ஓட்டர்களும் ஆகி அரசியலறிக்கையை அடியோடு நிராகரித்து, அதை எதிர்க்கும்படி நமக்கு ஆக்ஞை பிறப்பித்து விட்டனர்கள். இப்போது வெளியாயிருக்கும் கூட்டுக்கம்மிட்டி ஸிபார்சுகள் அரசியலறிக்கையைவிட இன்னும் மோசம்.

இந்தியா சட்டசபையில் கூட்டுக் கம்மிட்டியின் ஸிபார்சுகளை நிராகரிக்கக்கூடிய வழியில் உருவான அபிப்பிராயம் தெரிவிக்க எங்களால் சாத்தியமான முயற்சி செய்வதுடன், இந்தியாவுக்கேற்ற ஓர் அரசியலை வகுக்க ஜனப்பிரதிநிதிச் சபை கூட்டும்படி கவர்ண்மெண்ட்டை நிர்ப்பந்திக்க முயலுவோம். பலர் பயப்படுவதுபோல் இக்கோரிக்கைக்கு கவர்ண்மெண்ட்டார் இணங்காவிடில், 1935-ஆம் வருஷக் கோடியில் நடந்தாகவேண்டிய மாகாணச் சட்டசபைத் தேர்தலில் இதையே முக்கி

யப் பிரச்னையாகக்கொண்டு நாம் போராடுவோம். அதன்படி ஜனப்பிரதிநிதிச்சபை கூட்ட, கவர்ண்மெண்ட்டார் மறுத்தால், நாமே அந்தச்சபையைக் கூட்டுவோம். இந்தியா சட்டசபை மாகாணச் சட்ட சபைகளிலுள்ள காங்கிரஸ் அங்கத்தினரும், அகில இந்தியக் காங்கிரஸ் கம்மிட்டி அங்கத்தினரும் அம்மகா சபைக்கு வருவதுடன், காங்கிரஸ்காரரல்லாத சில சட்டசபை யங்கத்தினருக்கும் அழைப்பு அனுப்பி, ஜனப்பிரதிநிதிச் சபையில் ஓர் அரசியலைத் தையாரிப்போம். அதை, கவர்ண்மெண்ட்டார் ஒப்புக்கொள்ளாவிடில், ஸ்வராஜ்யம் பெறுவதற்கு அடுத்தபடியான போராட்டத்தை யதோக்தமாக ஆரம்பித்து விடுவோம்.

பார்லியமெண்ட்டில் பிரதம மந்திரி பேச்சு

அடுத்த ஜூலை மாதத்திற்குள் சட்ட மியற்ற யோசனை

ஏகாதிபத்தியத்திற்குள் இந்தியாவின் அரசியல் நிலைமை எப்படிப் பட்டதாயிருக்க வேண்டுமென்று முடிவாக ஆலோசித்து, பைஸல் செய்யப் பல வருஷங்களாக நாம் தையார் செய்துகொண்டு வருகிறோம். இன்று வெளியான கூட்டுக் கம்மிட்டி யாதாஸ்தைப் பற்றி இச் சபை முதலெடுப்பில் பொதுவாக விவாதிக்கும்; அதன் பிறகு மசோதா ஆஜர் செய்யப்பட்டு, அதை இரண்டாவது தடவையாக வாசிக்கும் போது அதைப்பற்றி விவாதம் நடத்த இடமேற்படும். நமது நாடு சம்பந்தமாக நாம் அவசரமாக இயற்ற வேண்டிய பல சட்டங்கள் இருக்கின்றன. ஆனால், இந்தியாவில் பிரமாதமான நம்பிக்கையை நாம் உண்டுபண்ணி விட்டு, கூட்டுக் கம்மிட்டியின் யாதாஸ்தை அடுத்த கூட்டத்திற்கு ஒத்திவைப்பதாயின் அது மிகவும் பைத்தியக்காரத்தனமான காரியமாயிருக்கும். ஆகையால், தனிப்பட்ட முறையில் அங்கத்தினர் கொண்டு வரக்கூடிய அலுவல்களுக்காக ஒதுக்கப்பட்ட 21 தினங்களை அவர்கள் இழக்க வேண்டியதுதான். அவ்வாறு செய்தால் 64 தினங்கள் நமக்குக் கிடைக்கும். இந்த 64 தினங்களில் இந்திய அரசியல் மசோதாவைப்பற்றி ஆலோசிக்கவே பெரும்பாலான நேரம் செலவாகிவிடும். அடுத்த கிறிஸ்துமஸ் பண்டிகைக்குள் கூட்டுக் கம்மிட்டி யாதாஸ்தைப் பற்றிப் பொதுவான விவாதம் முடிந்து மசோதா ஆஜர் செய்யப்பட்டு விடும். மசோதாவைப் பற்றிய ஆலோசனையும் கம்மிட்டி விவாதம் முதலியவையும் ஈஸ்டர் விடுமுறைக்குள் (1935 ஏப்ரில் முதல் வாரத்திற்குள்) நடந்து விடும். ஈஸ்டர் விடுமுறைக்குப் பின் அடுத்த ஜூலை மாதக் கடைசி வரை இந்திய அரசியல் மசோதாவை நிறைவேற்றுவதே முக்கிய வேலையா யிருக்கும்.

கல்கத்தாவின் கண்டனம்

இன்று காலை வெளியான பார்லியமெண்ட் கூட்டுக் கம்மிட்டி ரிப்போர்ட்டைக் கண்டு ராஜீயவாதிகள்எவரும் உற்சாகம் கொள்ளவில்லை. காங்கிரஸ்வாதிகள் இதைப்பற்றி விவாதிக்கவே விரும்பவில்லை. இதற்கு முன்னமே தேர்தலில் தக்க பதில் சொல்லியாகிவிட்டதென அவர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். லிபரல் கட்சியினர் அரசியல் அறிக்கையை விடக் கூட்டுக்கம்மிட்டி ரிப்போர்ட்டு இன்னும் கேவலமாயிருப்பதாக அபிப்பிராயப்படுகின்றனர். கல்கத்தாவிலுள்ள வியாபாரிகளும் இந்த ரிப்போர்ட்டைக் கண்டிருக்கிறார்கள். பிரிட்டிஷ் வியாபாரத்துக்குப் பாதுகாப்பு அளித்திருப்பதை அவர்கள் பலமாக ஆக்ஷேபிக்கிறார்கள். பர்மாவில் இந்திய வியாபார உரிமை பாதுகாக்கப்படுமெனச் சொல்வது கண்ணைத் துடைக்கும்வேலையென அவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். சட்டப்படி என்றுமில்லாத விதமாக, பிரிட்டிஷ் வியாபாரத்துக்குப் பாதுகாப்பு அளிப்பதால்—அவ்விதம்சொல்லியிருப்பதாக வியாபாரிகள் அபிப்பிராயப் படுகின்றனர். மிஸ்டர் பவேரியா என்ற பிரபல சணல் வியாபாரி ஒருவரைக் கண்டு பேசியபோது, அவர் இந்த ரிப்போர்ட்டில் பைபிளில் உள்ள 10 கட்டளைகளோடு 11-ஆவது கட்டளையும் அடங்கியிருப்பதாகவும், அதுதான் "இந்தியா வியாபார விஷயத்தில் பிரிட்டன் ஆதிக்கம் வகிப்பதைத் தடுக்காதே" என்பதாகுமென்று கூறினார்.

ஸ்ரீமான் கோஸ்வாமி

கூட்டுக் கம்மிட்டி யாதாஸ்தைப்பற்றி ஸ்ரீமான் கோஸ்வாமி அபிப்பிராயம் கூறுகையில், வேண்டுமென்றே இந்தியரை அவமதித்திருப்பதாகவும், இந்நாட்டினர் உண்ண உணவு வேண்டுமெனக் கேட்டதற்கு மண்ணுங்கட்டிதான் கிடைத்திருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்.

ஐரோப்பிய சங்கத்தலைவர் மிஸ்டர் பேஜ் தமது கம்மிட்டியினரைக் கலக்காமல் தாம் ஒரு முடிவும் சொல்ல முடியாதென்றார்.

"ரங்கூன் டைம்ஸ் பத்திரிகை"—கூட்டுக் கம்மிட்டி சிபார்சுகள் நியாயமானவையாக விருப்பதாகக் கூறியிருப்பதோடு, சிலவிடங்களில் அபாயம் விளையக்கூடியபடி அதிக தாராள புத்தி காட்டியிருப்பதாகவும் சொல்லுகிறது. பர்மா விஷயத்தையும் கம்மிட்டியார் கவனித்திருப்பதுபற்றி இப்பத்திரிகை திருப்தி யடைகிறது. "ரங்கூன் கெஜட்" இந்த ரிப்போர்ட்டில் நூதனமான விஷயங்கள் ஒன்று

யில்லையென்றும், இந்திய அரசியல் சம்பந்தமாக இவ்விதத் திட்டத்தைத் தவிர வேறு எந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தாலும் சவுகரியமிருக்காதென்றும் பர்மா விஷயமாகச் செய்திருக்கும் ஏற்பாடு வாவேற்கத் தக்கதென்றும் எழுதியிருக்கிறது.

"டேய்லீ நியூஸ்"—என்ற பத்திரிகை இந்த ரிப்போர்ட்டு மிக்க ஏமாற்றத்தைத் தருவதாகவும், பர்மாவை இதில் கண்ட முறைப்படி பிரித்தால் பிரிக்கவேண்டுமென விரும்பியவர்களின் உற்சாகமும் குறைந்துவிடுமென்றும் எழுதி யிருக்கிறது.

"லீடர்" பத்திரிகை—இந்த ரிப்போர்ட்டில் அடங்கிய அரசியல் திட்டம் இங்கிலாந்து அளிக்கக்கூடிய ஒரு திட்டமன்று. இந்தியாவும் அதை ஏற்றுக்கொள்ளக் கூடியதன்று. இதனால் அதிருப்தி குறையாமல் இப்போதுள்ள துக்ககரமான நிலைமை நீடிக்கும். இந்தத் திட்டத்தில் குறைபாடுகள் அதிகமாக விருக்கின்றன. இதில் ஆக்ஷேபகரமான அம்சங்கள் அதிகமாக விருப்பதால் இதனைச் சற்றும் ஏற்றுக்கொள்ள முடியாது. இதைவிட இன்னும் சில காலம் இப்போதுள்ள அரசியலே அனுஷ்டானத்திலிருந்தாலும் பாதகமில்லையென நினைக்கவேண்டி யிருக்கிறது. தகுதியான சீர்திருத்தம் கிடைக்கும்வரை காத்திருந்தாலும் நன்மையாக விருக்கும்.

ஜனாப் பஸ்லுல் ஹக்

இந்தியா சட்டசபைக்குத் தெரிந்தெடுக்கப் பட்டிருக்கும் ஜனாப் பஸ்லுல் ஹக் அவர்கள், வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது:—

நிருவாகச் செலவு இங்கு அதிகமாக விருப்பதால் கொஞ்சங் கொஞ்சமாக இங்குள்ளவரின் வறுமைநிலை அதிகரித்து வருகிறது. இப்போதுள்ளதைவிட இனிச் சிக்கனத்துடன் நிருவாகம் நடக்குமென்பதற்கு யாதோர் அறிகுறியும் இந்த ரிப்போர்ட்டில் இல்லாமலிருப்பது அதிருப்தியைத் தருகிறது. இரண்டாவது சபை ஒன்று ஏற்படவேண்டுமென ஸிபார்சு செய்திருப்பது அதிக செலவுக்குத்தான் இடமளிக்கும். ஜனங்கள் தாங்கமுடியாத செலவால் கஷ்டப்படுகையில் இன்னும் அதிகமாக அவர்களுக்குக் கஷ்டத்தை அளிப்பதைவிட எவ்வித நிர்வாகமும் இல்லாமலிருந்தாலே நலமாகும். ஏதோ மலைகல்லி எலிபிடித்தது போல இந்த ரிப்போர்ட்டு இப்போது வெளியாகியிருக்கிறது. ஆனால், இது சுயமரியாதையுள்ள இந்திய தேசத்தினரை அவமதிப்பதாக விருக்கிறது.

ஷேக் அப்துல்மஜீத்

ஷேக் அப்துல்மஜீத் அவர்கள் கூறியிருப்பதன் சாரமிவது :—

கூட்டுக் கம்மிட்டி ரிப்போர்ட்டில் அடங்கிய சீர்திருத்தப் பிரேரணைகள் மிக்க பிற்போக்குடையனவாக விருக்கின்றன. பாதுகாப்புக்கள் அளவு கடந்திருப்பதால் மாகாணங்களில் ஜவாப்தாரித்துவம் குறைந்துவிடும். அகில இந்திய உத்தியோக வர்க்கத்தை இந்தியா மந்திரி ஆபீஸ் நிர்வகிப்ப தென்பது சுயாட்சி முறையைப் பாதிப்பதாகவிருக்கிறது. இரண்டாவது சபை ஏற்படுத்துவது கண்டிக்கத்தக்கதாகும். மத்திய கவர்ண்மெண்ட் செலவைக் குறைக்க ஓர் ஏற்பாடும் செய்யவில்லை. மத்திய கவர்ண்மெண்ட்டில் இரட்டை ஆட்சி முறை ஏற்படுத்தி மறை முகமாகத் தேர்தல் நடத்துவது பெருந்தவறாகும். இனிப் பற்பல வகுப்பினரும் ஒன்றுபட்டு அபிப்பிராயத்தை வெளியிட வேண்டியது அவசியம்.

பம்பாயில் கண்டனம்

கூட்டுக் கம்மிட்டி ரிப்போர்ட்டை இன்றைப் பத்திரிகைகள் வெளியிட்டிருக்கின்றன. பம்பாய் ராஜீய வாதிகள் இதை வரவேற்க வில்லை. ஆங்கிலோ இந்தியர்கூடப் புதிய அரசியல் பிரேரணைகள் திருப்திகாமாக வில்லையென ஒப்புக் கொள்ளுகிறார்கள். ஆனால், இன்னம் அதிகம் பெறவேண்டி இதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென அவர்கள் கூறுகிறார்கள். காங்கிரஸ் வாதிகள் இவ்விதம் ரிப்போர்ட்டு இருப்பதால் அரசியல் முறையில் கிளர்ச்சி செய்வதால் சுயாட்சி கிடைப்பது கஷ்டமென நினைக்கும் ராஜீய ஸ்தாபனத்துக்கு அதிக பலம் ஏற்படும் எனக் கருதுகிறார்கள்.

பிரிட்டிஷ் வியாபாரத்துக்குப் பாதுகாப்புக்கள் அதிகமாக விருப்பதால் வியாபாரிகள் இதை விரும்பவில்லை. சுதேசி மூலம்தான் சுதந்திரமடைய முடியும் என அவர்கள் அபிப்பிராயப் படுகின்றனர். மாகாணங்களில் இரண்டு சபைகளுக் கிடையிலும் அபிப்பிராய பேதமும், மந்திரிகளுக்கும் கவர்னருக்கும் அபிப்பிராய பேதமும் ஏற்பட்டு, இந்தச் சீர்திருத்தங்களை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர முடியாத ஒரு நிலை ஏற்படுமென்றும், மறைமுகமான தேர்தல் மூலம் இந்தியா சட்டசபை அங்கத்தினர்களைத் தெரிந்தெடுப்பது சரியல்ல வென்றும் மிதவாதிகள் அபிப்பிராயப் படுகின்றனர். சுருங்கச் சொன்னால் மாண்ட்போர்டு சிபார்சுகள் விஷயத்தில் நம்பிக்கை கொண்டு கவர்ண்

மெண்ட்டோடு ஒத்துழைத்த மிதவாதிகளும் இப்போது இந்த ரிப்போர்ட்டை எதிர்த்து நிற்கின்றனர்.

"டைம்ஸ் ஆப் இந்தியா" பத்திரிகைகூட நாட்டில் இந்த ரிப்போர்ட்டுக்கு அதிக ஆதா விருக்காதென்றும், அதிலடங்கியுள்ள பாதுகாப்புக்கள் சில அனுவசிய மென்றும், ஆனல் இதற்காக அடியோடு அந்த ரிப்போர்ட்டை நிராகரித்தால் இங்கிலாந்திலுள்ள பிடிவாதக்காரர்களுக்குத் தான் நன்மையென்றும், இந்த அரசியலை மறுத்தால் இந்தியர் பின்னொரு காலத்தில் தொழிற் கட்சி அதிகாரத்துக்கு வரும் காலத்தில் தங்கள் கோரிக்கையை நிறைவேற்றிக் கொள்ள முடியாதென்றும் எழுதி யிருக்கிறது.

பர்மா இந்தியரின் வருத்தம்

கூட்டுக் கம்மிட்டி ரிப்போர்ட்டைக் கண்டு பர்மாவிலுள்ள சிலர் சந்தோஷமும், மற்றும் சிலர் ஏமாற்றமும் அடைந்திருக்கின்றனர்.

பர்மாப் பிரிவினையைக் கோரியவர்கள் இந்த ரிப்போர்ட்டில் அவ் விஷயம் முடிவாகிவிட்டதற்காகச் சந்தோஷிக்கிறார்கள். பிரிவினை வேண்டாதார் அது சம்பந்தமாக அதிருப்தியடைந்திருக்கின்றனர். இப் போதிருப்பதைவிடப் பர்மாவிலுள்ள இந்தியர் தங்கள் நிலைமை இனிக் கேவலமாக விருக்குமெனக் கருதுகிறார்கள். பர்மாச் சட்டசபை இனி இந்தியர் தாராளமாகப் பர்மாவுக்கு வருவதைத் தடுக்கச் சட்டம் செய்யவும் அதிகாரம் வகிக்குமென்பதை நோக்க இந்தியருக்கு வருத்தம் அதிகமாக விருக்கிறது. பர்மாவுக்குத் தொழிலாளர் வருவது சம்பந்தமாக ஒரு கட்டுப்பாடு ஏற்படுத்துவதைப் பற்றிய விஷயத்தில் இங்குள்ள பத்திரிகைகள் மாறுப்பட்ட தகவல்கள் அறிவித்திருக்கின்றன. "ரங்கூன்மெயில்" பத்திரிகை தொழிலாளர் உட்பட எல்லா இந்தியர்களுக்கும் கட்டுப்பாடு ஏற்படுத்தப்படக் கூடுமெனக் கூறுகிறது. பர்மாவையே தங்களுடைய இருப்பிடமாகக் கொண்டிருக்கும் இந்தியரின் கல்வி அபிவிருத்தி விஷயமாகவும் உத்தியோக விஷயமாகவும் ஒரு வித ஏற்பாடும் செய்யததுபற்றி இந்தியர் வருந்துகிறார்கள். ஆங்கிலோ இந்தியருக்கு இவ்விஷயங்களில் வசதிகள் பல செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. ரயில்வே தாபல் தந்தி முதலிய இலாக்காக்களில் ஆங்கிலோ இந்தியருக்கெனக் குறிப்பிட்ட சில ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

டாக்டர் ஷபாஅத் அஹ்மத்கான்

கூட்டுக்கமிட்டி ரிப்போர்ட்டு அரசியல் அறிக்கையைவிடக் கேவல மாக விருக்கிறது. இந்தியர்கள் ஒன்று சேர்ந்து சமர்ப்பித்த அறிக்கை யைக் கூடப் பொருட்படுத்த வில்லை. இந்தியாவில் ஒத்துழைப்பாளர் நிலைமை இதனுல் மிக்கக் கஷ்டமாகி விட்டது. ஆனுல், இந்தியா சட்ட சபைத் தேர்தலின் முடிவு இங்கிலாந்திலுள்ள பிடிவாதக்காரர்களின் ஆர்ப்பாட்டத்தைச் சற்று அடக்கக் கூடுமாகையால் எனக்குச் சந் தோஷ மேற்படுகிறது என்ருர்.

ஸ்ரீமான் பி. ஆர். தாஸ்

காலஞ்சென்ற தேசபந்துவின் சகோதாரும் மாஜீ ஹைக்கோர்ட்டு ஜட்ஜுமான ஸ்ரீமான் பி. ஆர். தாஸ் கூறியதன் சாரமாவது :—கூட் டுக் கம்மிட்டி யாதாஸ்தைப்பற்றி அபிப்பிராயம் சொல்லுமுன் அதை நன்ருக ஆராய்ந்து பார்க்கவேண்டும். அதில் அடங்கிய பாதுகாப்புக்கள் மாகாணச் சுயாட்சி முறையையே கெடுத்துவிடும் தைரியமுள்ளவர் கள் மந்திரிப் பதவியை ஏற்றுக்கொண்டால் கவர்னர்கள் தங்கள் விசேஷ அதிகாரத்தை உபயோகிக்க முடியாதென நான் அபிப்பிராயப்படு கிறேன். ஆகவே, இப்போதுள்ள நிலையில் யாவும் மந்திரிகளின் தன் மையைப் பொறுத்திருக்கிறது. காங்கிரஸ் இந்தச் சமயத்தில் பொ றுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது என் அபிப்பிராயம். அப் போது பாதுகாப்புக்கள் தானுக நசித்துப்போகும். இரண்டாவது சபைகள் ஏற்படுத்துவதை நான் அடியோடு ஆக்ஷேபிக்கிறேன். ஐரோப்பாவில் இந்த முறை கொஞ்ச கொஞ்சமாக மறைந்துகொண் டிருக்கையில் இங்குப் புதிதாக இது அமலுக்குக்கொண்டுவரப்பட்டிருப் பது ஆச்சரியமாக விருக்கிறது. இந்தியா சட்டசபைக்கு மறைமுக மாகத் தேர்தல் நடத்தும் முறையை நான் பொதுவாக ஆதரிக்கிறேன்.

ஸாப்ரூ—ஜெயகர் எச்சரிக்கை

ஸ்ரீமான்கள் ஜெயகரும், ஸாப்ரூவும் கூட்டுக் கம்மிட்டி யாதாஸ் தைக் கண்டித்து லண்டன் பத்திரிகை ஒன்றுக்கு 900 வார்த்தைக ளடங்கிய ஒரு தந்தி அனுப்பியிருக்கிருர்கள். சட்ட சம்மதமான முறையில் தாங்கள் கிளர்ச்சிசெய்து வந்தும் அதனுல் யாதொரு அனு கூலமும் முடிவில் ஏற்படவில்லை யென்பதை இந்த யாதாஸ்து நிரூபிக் கிறதென்றும், கனம் ஆகாகான் முதலிய பிரிட்டிஷ் இந்தியப் பிரதி நிதிகளின் விக்ஞாபனத்திலோ அல்லது ஸாப்ரூ விக்ஞாபனத்திலோ

அடங்கிய ஒரு கோரிக்கைகூட ஒப்புக்கொள்ளப்படாதது பற்றித் தாங்கள் வருந்துவதாகவும் அவர்கள் அத் தந்தியில் தெரிவித்திருக்கிறார்கள். புதிய சீர் திருத்தங்களை நடத்தி வைக்கத் தாங்கள் முன் வரப்போவதில்லை யென்றும், காங்கிரஸ்காரர்களுக்கு வழி விலக்கிவிட உத்தேசமென்றும் அவர்கள் தெரியப்படுத்தி யிருக்கிறார்கள்.

ஸர் முகம்மது இக்பால்

சர்வ கட்சி மகாநாட்டுப் பிரதிநிதியான ஸர் முகம்மது இக்பால் கூறியதாவது:—யாதாஸ்தை நான் பலமாகக் கண்டிக்கிறேன். வாசிப்பதற்கு அஃது இனிமையாகத்தான் இருக்கிறது. மிகுந்த சிரமத்துடன் பல விஷயங்களைக் கமிட்டியார் இந்த யாதாஸ்தில் புகுத்தி, அதற்குச் சப்பைக் கட்டுக் கட்டியிருப்பதால் இந்த யாதாஸ்துக்கு அதிக மதிப்பு வைக்க முடியாது. மாகாணப் பார்லியமெண்ட்களும், மந்திரிகளும், ஸாதுவான மிருகங்களைப் போல் வெள்ளைக்கார எதேச்சாதிகாரிகளின் மந்திரக் கோலுக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டி யிருக்கும். வெள்ளை ராஜாக்கள் ஒரு புறத்திலும், கறுப்பு ராஜாக்கள் மற்றொரு புறத்திலும் இந்தியாவை ஆளும் காட்சி விநோதமாகவே யிருக்கும். நீதி, பொலீஸ் இலாக்காக்களை மந்திரிகளுக்கு மாற்றிவிட்டதாகக் கூறுவதில் அர்த்தமே யில்லை. வகுப்புத் தீர்ப்பு ஆதரிக்கப் பட்டிருப்பது ஒன்றுதான் ஒப்புக்கொள்ளத் தக்கதா யிருக்கிறது. முஸ்லிம்கள் தங்களுக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களைத் திறமையான முறையில் உபயோகிப் பார்களென்று நம்புகிறேன்.

முஸ்லிம் பத்திரிகைகளான இன்ஸான், ஸியாஸத் உள்பட எல்லா தேச பாஷைப் பத்திரிகைகளும் யாதாஸ்தைக் கண்டிக்கின்றன. 35 கோடி இந்தியரின் அபிப்பிராயத்தை விடச் சில கன்ஸர்வெட்டிவ்களைத் திருப்தி செய்வதையே கம்மிட்டியார் முக்கியமென்று கருதி யிருப்பதாக அவை கூறுகின்றன.

பாரிஸ்டர் மியான் ஷா நவாஸ்

கூறியதாவது:—சிபார்சுகள் பிற்போக்கான வையாயினும் அவற்றை நிராகரிப்பது பெரிய பிசகு. இங்கிலாந்தில் கூட்டுக் கட்சி கவர்ண்மெண்ட்டை அது சங்கடமான நிலைமையில் கொண்டு வைத்துவிடும். சீர் திருத்த விரோதிகளுக்கே அது கொண்டாட்டமா யிருக்கும். ஆகையால் அரசியல் அறிக்கையில் கண்ட அமைப்பை வைத்துக் கொண்டு மேலே மாறுதல்கள் செய்யும்படி கேட்க வேண்டும். கூடுமானால் காங்

கிரஸ்காருள்பட எல்லாக் கட்சியாரு மடங்கிய ஒரு மகா நாட்டைக் கூட்டி, அவசியமான மாறுதல்களைப் பற்றி யோசிக்க வேண்டும். பிரிட்டிஷ் இந்தியப் பிரதிநிதிகளின் விக்ஞாபனத்தை ஆதாரமாகக் கொண்டு நமது கோரிக்கைகளைத் தெரிவிக்கலாம்.

நாகபுரியில் தலைவர்கள் ஆலோசனை

இன்று நாகபுரி கோகலே மண்டபத்தில் கட்சித் தலைவர்கள் பலர் டாக்டர் ஹரிசிங்கவர் தலைமையில் ஒரு கூட்டம் கூடி, கூட்டுக்கம்மிட்டி அறிக்கையைப்பற்றிக் கலந்து ஆலோசித்தனர். ஸர் ஹரிசிங்கவர் முதலில் பேசுகையில், பிரிட்டன் குடியேற்ற நாட்டு அந்தஸ்து விஷயமாகத் தன் வார்த்தையைக் காப்பாற்றவில்லையென்றும், முக்கிய விஷயங்களைப்பற்றி இந்தியப் பிரதிநிதிகள் சமர்ப்பித்த ஓர் அறிக்கையையும் பிரிட்டன் கவனிக்கவில்லையென்றும், இது வருத்தத்தைத் தருவதாகவும் கூறினர்.

காங்கிரஸ் சார்பாக ஸ்ரீமான் அபயங்கர் பேசுகையில், யாவரும் கட்டுப்பட்டு ஓர் ஏற்பாடு செய்வதாக விருந்தால் அதில் காங்கிரஸும் கலக்கும்படி தாம் செய்வதாகவும், ஆனல் ஒன்றுபட்ட முயற்சிக்கு அதிகாரிகள் இணங்காவிட்டால் மேற்கொண்டு தீவிரமாகக் காரியம் செய்வதற்கு மற்றவர் காங்கிரஸோடு ஒத்துவர வேண்டுமென்றும் கூறினர்.

மாஜீ மந்திரி மிஸ்டர் ஷரீப் ஸ்ரீமான் அபயங்கரின் அபிப்பிராயத்தை அங்கீகரித்தார்.

டாக்டர் மூஞ்சே அடுத்தபடி பேசுகையில், அரசியல் அறிக்கையையும், கூட்டுக் கம்மிட்டி யாதாஸ்தையும் நிராகரிக்க வேண்டுமென்பதே தமது அபிப்பிராய மென்ருர். இந்த ரிப்போர்ட்டைப் பரிசீலனை செய்து 15 நாட்களுக்குள் ஓர் அறிக்கையைச் சமர்ப்பிக்க 6 பேர் அடங்கிய ஒரு கம்மிட்டி நியமிக்கப்பட்டது.

'ஸ்டார் ஆப் இந்தியா' எழுதுவதாவது:—முஸ்லிம்கள் மனச் சோர்வுக்கு இடங்கொடுக்கக்கூடாது. மாகாண ஸெனேட் சபைகளுக்கு மறைமுகமான தேர்தல் நடத்தும் யோசனையையும், கூட்டுக் கம்மிட்டியார் தங்களுக்கு இந்தியப் பிரதிநிதிகள் சமர்ப்பித்த விஞ்ஞாபனத்தை ஏறக் குறைய அடியோடு நிராகரித்து விட்டமுறையையும் நாங்கள் ஆட்சேபிக்கின்ருேம்.

மாகாணச் சட்டசபைகளின் அமைப்பு

பெயர்				மொத்த ஸ்தானங்கள்
சென்னை	....	....	....	215
பம்பாய்	....	....	....	175
வங்காளம்	....	....	....	250
ஐக்கிய மாகாணம்	....	....	....	228
பாஞ்சாலம்	....	....	....	175
பீகார்	....	....	....	152
மத்திய மாகாணம்	....	....	....	112
அஸ்ஸாம்	....	....	....	108
எல்லைப்புறம்	....	....	....	50
சிந்து	....	....	....	60
ஒரிஸ்ஸா	....	....	....	60

சென்னைச் சட்டசபையின் அமைப்பு விவரம்

சென்னைக் கீழ்ச்சபையின் மொத்த 215 ஸ்தானங்கள் கீழ்வருமாறு வகுக்கப்பட்டிருக்கின்றன:—

தொகுதி				ஸ்தானங்கள்
1.	பொதுத் தொகுதி	....	....	122 (ஸ்திரீகளுக்கு 6 சேர்ந்து)
2.	ஹரிஜனங்கள்	....	....	30
3.	தாழ்ந்த வகுப்பு	....	....	1
4.	முஸ்லிம்கள்	....	....	29 (1 ஸ்திரீ உட்பட)
5.	இந்திய கிறிஸ்துவர்கள்	....	....	9 (1 ஸ்திரீ உட்பட)
6.	ஆங்கிலோ இந்தியர்	....	....	2
7.	ஐரோப்பியர்	....	....	3
8.	இந்திய வியாபாரிகள், கைத்தொழில்கள் முதலியன	....	....	6
9.	நிலச்சுவான்தார்கள்	....	....	6
10.	சர்வகலாசாலை	....	....	1
11.	தொழிலாளர்	....	....	6
				215

Printed at The Guardian Press, Ltd., 158-B, Broadway, Madras.

THE NEW REFORM PROPOSALS.

Mr. B. Daud Shah B.A., Editor, "Dar-ul-Islam" has issued the following statement to the Press:—

The publication of the J. P. C. Report has set at rest all speculations regarding the future of the Indian polity. In language of absolute clearness and candour the J. P. C. Report has crystallised what in its opinion must be the basis for a Bill on the Indian reforms to be introduced in the British Parliament. Viewed from a nationalist standpoint, the Report falls far short of national expectations and requirements. It has even disappointed the moderates. Neither in principles nor in material details have the authors of the J. P. C. Report shown solicitude to placate responsible Indian opinion. Notwithstanding the fact that the J. P. C. Report is a closely reasoned document which has evident marks of close study, elaborate research and assiduous industry in clarifying issues, it cannot be disguised that its political philosophy is defective and that for many of the suggestions adumbrated in the Report historical political precedents are badly lacking. With such defects and shortcomings both in conception and elaboration, not even the most willing admirer of the scheme will go to the length of saying that the J. P. C. Report constitutes the last word that the British statesmen have got to say on the subject of Indian reforms.

There is no denying the fact that a wave of dissatisfaction, pessimism and disappointment bordering on positive distrust of the good intentions of the British politicians has swept over the country and the consequent first impressions published so far are calculated to cloud the realities of the situation. Strange as it may seem, the safeguards and details have attracted greater attention than the underlying principles which have not been challenged all these years by progressive opinion in India or in England. The Congress has no doubt claimed nothing short of complete national independance and Mahatma Gandhi as the sole accredited representative of the Congress at the Second Round Table Conference gave powerful expression to the Congress ideals. But neither the Congress resolution on complete

independance, nor Gandhiji's handling of the problem at the Round Table Conference closed the doors against negotiations with the British Government with a view to inaugurating in India a system of responsible Government whereby "the substance of independance" i e., political power may be secured to the Indians. The Gandhi—Irvin Pact if it is not an explicit support to the White Paper scheme, is at least a positive proof to show that even if the Congress view is not accepted by the British Government, the Congress as a political body representing the nation will not refuse to consider an alternative scheme drawn by Parliament on its merits. Gandhiji has made it perfectly clear that if the substance of power is got, he would be prepared to commend it to the acceptance of the Congress. The White Paper Scheme as modified by the J. P. C. Report is the alternative scheme prepared by the Government and it is for the Congress as the best organised political party in the country to give a lead in the matter and say whether it does or does not contain the substance of power.

The three principles of the White Paper scheme, *viz.*, All India Federation, Responsibility in the centre with reservations, Provincial Autonomy and Safeguards have been the subject of discussion at all the three sittings of the Round Table Conference and a large body of opinion both in England and India has expressed itself in favour of the scheme, although the Congress was and is, after the verdict of the elections, pledged to the rejection of the White Paper proposals. The question now is whether the Congress is going to suggest radical changes as amendments to the J. P. C. Report so as to make it more satisfactory and workable from a nationalist point of view or whether in accordance with its own previous declarations and encouraged by the verdict of elections in its favour, it is going to reject the new reform proposals in toto. Though the Congress may be justified in adopting the latter attitude of rejection, it seems to me that the Congress cannot reject the new proposals until it is able to formulate its own scheme so as to be acceptable to all sections of opinion in both the countries. Until a national political scheme is drawn up, the question is what the Congress should do in respect of the present reform proposals? I venture to say that much as I dislike the J. P. C. Report as being wholly inadequate and fundamentally reactionary in several respects, it won't be serving the cause of the reform movement in the country to

reject the scheme and to boycott the Legislatures to be set up under the new reforms. We have seen that boycott of Legislatures, a consistent policy of obstruction inside the councils and constitutional dead-locks have not helped us to paralise the administration much less made the bureaucracy bend its proud knees to the national will, and a similar policy if resorted to once again cannot be expected to lead to better results. I would therefore urge the Congress to adopt a more statesmanlike and vigorous policy of fighting the reforms not only on the floor of the Legislatures but also from inside the Cabinets.

The present day Irish politics and tactics must be an eye-opener to the nationalist politicians in India as to the vast scope of reforming a bad constitution by putting up a good and consistent fight from inside the Legislatures and Cabinets. The monstrous anomolies of the Dyarchic regime in India and the consequent political demoralisation of our co-operating politicians would and could have been avoided if the Congress had not chosen to go into the wilderness of non-co-operation leaving the field entirely to people who have proved themselves to be no better than job-hunters at the expense of the best interests of the country. I know it will be too much to expect the Congress to work the reforms for what they are worth with any degree of zeal but it must be fore-warned of the calamitous results which are sure to follow if the Congress keeps aloof once again. The interests of the country warrant that the Congress should capture all citadels of power and beard the lion in its very den. Incidentally by keeping out all selfish job-hunters, it will be able to prove the mettle, character and capacity of the Congress Ministers in handling the political fortunes in provincial as well as the central Governments and they will succeed not only in taking the country a step nearer the goal of Swaraj but will bring into existence a better type of patriots and infuse a new spirit into the administration of the country. I therefore urge upon the Congress the necessity to proclaim this new philosophy of dis-interested national service and to see that the worst features of the new reforms with all their safeguards are not allowed to work great havoc, exposing the country to the merciless exploitation by reactionaries both Indian and European. I am sure that if the political consciousness of the country is properly awakened by using the opportunities open to the country through these Reforms, we will be making rapid strides towards Swaraj which we all fondly cherish.

மணவாழ்க்கையின் மர்மங்கள்

என்னும் புத்தகம் இப்பொழுது ரூ. 1-8-0 க்கே விற்கப் படுகிறதால், கைவசமுள்ள கொஞ்சம் பிரதிகள் சடுதியில் செலவாகிவருகின்றன. அயல்நாட்டு நண்பர்களும், மற்ற வர்களும் முந்திக் கொண்டால்தான் பிரதிகள் கிடைக்கு மென்பதை எச்சரிக்க விரும்புகிறேம். பிறகு ரூ. 2-4-0 கொடுத்தாலும் பிரதி கிடைக்காதென்பது நிச்சய முந்திக் கொள்வீர்களாக. 2 காபிகளுக்கு முன்ப மனுப்பினல் தபால் செலவுகூட இனம். முந்துங்க

மனோஹரம் கம்ப்பெனி,

158-B, பிராட்வே, மதராஸ்.

ஆண்மை

இஃது ஒரு மகா அருமையான நூல். இதைப்பற்றி அதிகமாக எடு தேவையில்லை. ஏனெனில் இதை மர்மக் கிரந்தங்களின் 'மாஸ்டர்' றும், தாது விருத்தி மருந்துகளின் 'தந்தை' என்றும், ஆரோ வழிக்குரிய 'ஆப்த நண்பன்' என்றும் சொல்லுவதில் அதிசயமி இதிலுள்ள விஷயங்கள் இதற்கு வைத்த விலையை விடப் பத்துப் அதிகம் பெறும் என்பது பார்ப்பவர் உணர்வர். விலை அணு 8. வே வோர் 9 அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். மலாய் நாட்டார் 9 வுக்கு இம்பீரியல் கூபன் அனுப்பவேண்டும். ஆர்டருக்கு முந்துங்கள்.

லுக்மான் கம்ப்பெனி,

158-B, பிராட்வே, மதராஸ்.

The Guardian Press, Ltd., Madras.

"தாருல் இஸ்லாம்"

ஓர் உயர்தர நிகரற்ற தேசீயத் தமிழ் வார மிருமுறைப் பத்திரிகை

உள்நாடு, வெளிநாடு, பர்மா, ஸிலோன், மலாய் நாடுகள் முதலிய இடங்களிலெல்லாம் ஆயிரக்கணக்கான சந்தாதாரர்களை யுடையது இஃதொரே பத்திரிகைதான். சமூக மேன்மைக்கும், தேச விடுதலைக்கும் பொருளாதார க்ஷேமத்துக்கும், ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்கும், சுதந்திர வாழ்க்கைக்கும் தொண்டாற்றும் மிகச் சிறந்த பத்திரிகை.

அரசியல் விஷயங்கள், உண்மையான மதபோதனைகள், தத்துவ சாஸ்திரங்கள், விஞ்ஞான சாஸ்திரங்கள், நவீன அற்புதங்கள், தினச் செய்திகள், உலக வர்த்தமானங்கள், வர்த்தக நிகழ்ச்சிகள், அறிவாற்றல்களைப் பெருக்க வல்ல வேறு பல அரிய விஷயங்கள், அற்புதக் கதைகள் முதலியவற்றுடன் பல படங்களுடனும் வெளிவரும் பத்திரிகை இதுவே.

[சந்தா விகிதம்]

உள்நாட்டுக்கு		வெளிநாட்டுக்கு	
வருடம்	ரூ. 10—0	வருடம்	ரூ. 14—0
6 மாதம்	,, 5—8	6 மாதம்	,, 7—8
3 ,,	,, 3—0	3 ,,	,, 4—8

இப்பத்திரிகையில் விளம்பரம் செய்வது பெருத்த லாபத்தைத் தருமென்ற உண்மையை ஒவ்வொரு வியாபாரியும், விளம்பரக்காரரும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். மாதிரிப் பிரதி இனாம்.

தபாற் பெட்டி நெ. 15, சென்னை.

மஹேந்திரஜாலம்

"மஹேந்திர ஜாலம் அல்லது ரஸ்புட்டீன் மெஸ்மெரிஸ வாழ்க்கை" என்னும் இந்நூல், ருஷிய தேச வனாந்திரப் பிரதேசத்தில் பிறந்து "உலகமே வஞ்சனையினால்தான் நடைபெற்று வருகிறது; ஆதலின் அப்படிப்பட்ட வஞ்சனையினாலேயே ஒவ்வொருவரும் இவ்வுலகினரை இயன்ற மட்டும் ஏமாற்றவேண்டும்," என்ற உறுதியான நம்பிக்கையால் ஏற்பட்ட துணிவால் பாதிரி வேடம் பூண்டு பெரிய பெரிய சீமாட்டிகளையும், "கன்னிகா" ஸ்திரீகளையும் தெய்வத்தின் பேரால் கற்பழித்துத் தன்னைச் சேர்தலே மோக்ஷ மார்க்கத்துக்கு ஏற்ற சாதனம் என்ற பெரிய நம்பிக்கையை அவர்கள் வணக்கத்தோடு ஏற்றுக்கொள்ளும்படி செய்து, ருஷிய ராஜ குடும்பத்தையும் தன்வயப்படுத்தி, அதன்மூலம் அரசாங்க உயர் பதவி பெற்று, அந்நாட்டைப் பலவிதத்திலும் ஆட்டிவைத்த ரஸ்புட்டீன் என்னும் வஞ்சக காமதுரந்தரனது ஜீவிய சரித்திரமாகும். கதைப்போக்கு வியப்புச் சுவை செறிந்து விளங்குகிறது. 190 பக்கங்கள்; ரஸ்புட்டீன் படத்துடன். ஒவ்வொருவரும் இந்நூலை படித்துப் பயனடைய வேண்டும். பழைய விலை அணா 12. இப்பொழுது 8 அணா ஸ்டாம்பு மட்டும் அனுப்புங்கள்.

"தாருல் இஸ்லாம்" புஸ்தகசாலை,

158-B, பிராட்வே, சென்னை.

எப்படி நம் இந்தியர்கள் முட்டாளாக்கப்படுகிறார்கள்?

வேர்க்கடலை எண்ணேய், 'ஆலிவ் ஆயில்' என்னும் பெயரால் வழங்குவது.

நமது தேசத்தில் சுத்தமான "லூகா ஆலிவ் ஆயில்" என்ற பெயரால் விற்கப்படுபவை, நம் தேசத்திலிருந்து ஏற்றுமதியாகும் மணிலாக் கொட்டையைப் பிழிந்து எடுக்கும் மணிலாக்கொட்டை எண்ணெய் தவிர சுத்தமான ஆலிவ் ஆயில் அல்ல. (இண்டிஜினஸ் டிரக்ஸ் ஆப் இந்தியா, பக்கம் 59 பார்க்கவும்.)

மீன் எண்ணேயானது 'வெஜிடேபிள் ஆயில்' என்னும் பெயரால் மாற்றி விற்கப்படுவது.

இம்பீரியல் கவுன்ஸில் விவசாயப் பரிசோதகர்கள், இந்தியன் எண்ணெய் பிழியும் தொழில் கமிட்டி 3-வது மீட்டிங்கில் தற்காலம் மீன் எண்ணெயானது இந்தியாவிற்கு "எடிபிள் ஹார்டெண்டு ஆயில்" என்று பெயரிட்டு இறக்குமதியாகி நம் இந்தியாவில் வெஜிடெபிள் ஆயில் என்று விற்கப்படுகிறது.

காட்ரிஜ் வெஜிடபிள் டாய்லட் ஸோப்பைப்பற்றி

இதுவரை வெகு திருப்தியுடன் உபயோகிப்பவர்கள் சற்று கீழே சொல்லுவதைக் கவனியுங்கள்:

ரபீந்தரநாத் டாகூர் சொல்வதாவது:—காட்ரிஜ் ஸோப்பை விட எந்த விதேச ஸோப்பும் உயர்ந்ததாகத் தெரியவில்லை. காட்ரிஜ் ஸோப்பையே உபயோகப்படுத்த வேண்டுமென்று நான் தீர்மானித்திருக்கிறேன்.

கொஞ்ச நாளைக்கு முன் டாக்டர் அன்னிபெஸண்டு அம்மையார் தம்முடைய 'நியூ இந்தியா' பத்திரிகையில் சொன்னதாவது:—என்னுடைய அபிப்பிராயத்தில், காட்ரிஜ் ஸோப்பே உலகத்திலுள்ள ஸோப்புகளில் உயர்ந்தது.

காட்ரிஜ் சந்தன ஸோப்புகளையும், ஷேவிங் ஸோப்புகளையும் கூட பரீட்சை செய்து பாருங்கள்!

பாக்டரி:—**காட்ரிஜ் ஸோப் லிமிடெட்,**
டிலிஸ்லி ரோட், பம்பாய், 11.

ஸோல் ஏஜெண்ட்ஸ்:

நாதிர்ஷா, பிரிண்டர் அண்டு கோ.,
165-C, பிராட்வே, மதராஸ்.

ஹெட் ஆபீஸ்:— பம்பாய்.
கிளை ஆபீஸ்கள்:—கல்கத்தா, லாகூர் & காராச்சி.